Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
දිනමුරසු වාරමලර්
ஏப்.10-16,1994
ரூபா 8/50

வாரமலர்
தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 46

இப்போது பேச அரசு முன்வருமா?

அதனால் சாதகம் அரசுக்கா? புலிகளுக்கா?

எக்ஸ்ரே ரிப்போர்ட்

ஆளும் கட்சி எழுந்து கொள்ள கால அவகாசம் போதுமா?

அரசியல் அலசல்

புதிதாய்
முத்திரை பதிக்கவரும்
சித்திரை 'பவ' வருசம்
நித்தியமும் எதிர்பார்க்கும்
போர்களை வாழ்வுக்கு
புதிய வழி திறந்திட்டும்.
போலித்தனம் இல்லாமல்
நேசித்தல்கள் நிலையாகி
புதுவருச வரவோடு
வாழ்வு சுவையாக
வாசகர்கள் அனைவருக்கும்
முரசின் இதயபூர்வ வாழ்த்துக்கள்!

உள்ளே அட்டகாசமாய் ரோஜா

வீரா படப்பிடிப்பில்..

வான் நோக்கி
வளர்ந்த
அதிசய இளைஞர்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்!

(லூக்கா 24:06)

"உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன?" (லூக்கா 24:05)

எம்மில் அநேகருக்கு ஒரு பழக்கம் உண்டு. அதுதான், 'இல்லாத இடத்தில் தேடுவது.' இப்பழக்கம் உருவாகக் காரணம், 'இருக்கும் இடம் தெரியாததே' ஆகும். அன்று கல்லறையினிடத்திற்குச் சென்ற ஸ்திரீகளுக்கும் இதே நிலைதான். மரித்து மூன்றாம் நாள் உயிர்ப்பார் என வேதவாக்கியம் கூறியென்ன; இயேசு தாமே, இடித்து மூன்றாம் நாளில் கட்டுவதாக கூறியென்ன; அவர்களது விசுவாசம் ஒரு படி கீழே, கல்லறையிலே இருந்தது. ஆகவேதான் வாரத்தின் முதல் நாள் காலையில், அவரை தரிசிக்க ஆயத்தப்படாமல், மரித்த உடலை புதுப்பிக்க கந்தவர்க்கத்தோடு கல்லறை சென்றனர். சென்றவர்களுக்கு கிடைத்த கருத்துள்ள பதில்: "உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன?" (லூக்கா 24:05)

இன்று எம்மிலும் அநேகர் இவ்வாறே உயிர்த்த கிறிஸ்துவை, மரித்த கிறிஸ்துவாக தேடுகின்றனர். காரணம்; பாவத்திற்கென்று மரிக்கும் ஆவல் கொண்டவனாக இன்றைய மனிதன் காணப்படுகிறான். எனவேதான் அவன், உயிருள்ள தெய்வத்தையும், அவனுக்கு பழக்கமான சொந்தமான மரணத்திலேயே தேடுகிறான். இது இப்படியே தொடருமானால் திறப்பின் வாசலில் ஒருவனைக் காண்பதும் அரிதாகிவிடும். மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? என்று அறைகூவ வேண்டிய ஒவ்வொரு கிறிஸ்தவனும், இன்று "மரணமே நான் இங்கே? பாதாளமே உன் ஜெயம் நானே?" எனக் கூறுவதைப்போல், பாவத்தில் மூழ்கி, மரண இருளில் வாழ்கிறான்.

"நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவான் 14:06) என சத்திய வேந்தன் கிறிஸ்து கூறியும், ஜீவித்தும், மரித்தும் இறுதியில் உயிர்த்தும் விசுவாசியாதோர் இன்றும் உண்டு. அவரை விசுவாசித்தால் நிச்சயம் மரித்தாலும் உயிர்ப்போம். பாவத்திற்கென்று மரித்து, ஜீவனுக்கென்று பிழைப்போம்! இவ்விதமான உயிர்த்தெழுதலுக்கு நிச்சயம் கிறிஸ்து தேவை. எனவேதான் இது போன்றதொரு காலத்தில் மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார். எம்மையும் உயிர்ப்பிக்கிறார். எனவே நாமும் உயிர்த்தவரை கல்லறையில் தேடாது, விசுவாசத்துடன் மனவறையில் தேடுவோமாக!

"எழுந்தார் என்ற தொனி எங்கும் கேட்குதே.."

சகோ. அன்ட்ரூ செல்வராஜா-கோல்ட்பேஸ் கொழும்பு.

ஆன்மீகம்

இமாம்களின் வழிமுறைகளை ஏற்பது நம் கடமை

இறையச்சம், தூய்மை, உண்மை, ஆழ்ந்த அறிவு, அலுக்காத இறை வழிபாடு ஆகிய பண்புகளைத் தன்னகத்தே கொண்டு மறை வளர்த்த தூய மகான்களான ஸஹாபாக்கள், தாபியீன்கள், இமாம்கள், மஷாயிஃமார்கள் ஆகியோரை நாம் ஒருபோதும் குறைவாக மதிப்பிடக்கூடாது. அப்புனிதர்களின் வழிமுறைகளைப் பின்பற்றுவதால் முஸ்லிம்கள் இகபர ஈடேற்றத்தை அடைந்து கொள்ள முடியும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

"என்னைப் பின்பற்றும் சமுதாயத்தினர் எழுபத்து மூன்று குழுக்களாகப் பிரிந்து விடுவர். அவர்களுள் 72 கூட்டத்தினர் வழி தவறிவிடுவர். என்னையும்-எனது நேசர்களையும் பின்பற்றும் ஒரேயொரு குழுவினர் மட்டுமே நேர்வழி பெறுவர் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளதை நாம் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

புனித குர்ஆனுக்கும் தூய நபிமொழிகளுக்கும் முரண்படாத வகையில் இஸ்லாமிய கருத்துக் கருவூலங்களை எமக்களித்த தூய இமாம்களான சட்ட மேதைகள் தம் வாழ்வில் இப்பணிக்காகக் கடும் கஷ்டங்களை அனுபவித்துள்ளனர். அத்தகைய மகான்கள் நம்மைப்போன்று கீழான இச்சையில் மூழ்கிய லௌகீக வாதிகளல்லர். இவ்வுலகப் பற்று அறவே இல்லாமல் ஒளிமயமான திரு முகத்துடன்-இறை தியானத்திலேயே தம் ஆயுளைக் கழித்த அவ்வுத்தமர்கள்-அல்லாஹ்தஆலாவையும் நபிகள் கோமான் (ஸல்) அவர்களையும் தம் உயிரினும் மேலாக மதித்த புண்ணிய சீடர்களாவர். அப்புனிதர்களின் வழிகாட்டுதல் இன்றி அல்குர்ஆனுக்கும்-அல் ஹதீஸுக்கும் நாம் அர்த்தம் புரிய - விளக்கம் பெற முற்படுவது பெரும் அறிவீனமும் மடமையும் ஆகும். இமாம்கள் வகுத்த மறை நெறிகளை ஏற்று நடக்க வேண்டியது நம் நீங்காக் கடமையாகும். எமது கீழ்த் தரமான சுய புத்திக்கும் தீர்க்கமில்லாத குறைந்த அறிவுக்கும் ஏற்றவாறு இஸ்லாத்தை நாம் விளங்க இயலாது. எனவே இஸ்லாமிய சட்ட மேதைகளான இமாம்களை ஏற்று-அன்னாரை நேசித்து பின்பற்றி ஈமான் பலத்தை உறுதியாக்கிக் கொள்வோமாக. மடமை நீங்கி தெளிவு பெறுவோமாக.

திஹாரிய-ஹாரித்

முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
பூரிக்க வைக்கும் திருநாள்
தமிழ்-சிங்கள புத்தாண்டு மலர்வதற்குமுன்னரே
தென்னிலங்கை அரசியல் வானிலே
புதிய மாற்றங்கள் முகம் காட்டியிருக்கின்றன.

இனவாதம் தன் அரிதாரப் பூச்சிழந்து
போலித்தனமான பொலிவிழந்து
மக்களை மயக்கி
அவர் தம் சிந்தனையை திசை திருப்பும்
சக்தியை இழந்து கொண்டிருப்பதற்கு
தென் மாகாணத் தேர்தல் முடிவு
ஒரு தெளிவான உதாரணமாகிவிட்டது.

எதிர்க்கட்சிகள் பலமாக உள்ள போதுதான்
ஆளும் கட்சியும் அடிக்கடி தவறுவிடாமல்
தாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும்
எண்ணிப் பார்க்கப்படும்; கூர்ந்து நோக்கப்படும்
என்கின்ற எச்சரிக்கையோடு செயல்பட கூடியதாயிருக்கும்.

ஆளும் கட்சிக்கு அடி சறுக்க வைத்ததற்கு
ஆயிரம் காரணங்கள் இருக்கலாம்.
ஆயினும், அதிலே பிரதான காரணம்
இனப்பிரச்சனை தொடர்பான அணுகுமுறையில்
திடீரென்று ஏற்பட்ட மாற்றங்கள் என்பதை
எவரும் சொல்லித்தான்
அவர்கள் உணரவேண்டு மென்பதில்லை.

தமது வெற்றி-
இனவாதத்திற்கு முறிவு வைத்தியம் என்று
எதிரணிகள் எடுத்துச் சொல்லியுள்ளன.
அவற்றைக் காது கொடுத்துக் கேட்கும்போது
மாற்றங்கள் ஏற்படத் தொடங்கிவிட்டதோ
என்று மனது விசாரிக்கிறது.

ஆனாலும்,
எதிரணிகளில் பிரதானமான கட்சிகூட

இதுவரை இனப்பிரச்சனை தீர்வுக்கு
உபயோகமான தீர்வை முன்வைக்கவில்லை.
பதவிக்கு வந்தால் தீர்வுக்கு தாமதமாகாது
என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

இதற்கிடையே-
எதிரணிகளை நோக்கி இயலுமான வேகத்தில்
தமிழ் கட்சிகள் சில ஓடிக்கொண்டிருக்கின்றன.
திருமதி சந்திரிக்காவின்
அலுவலகக் கதவுகளை
அவசரமாகத் தட்டிக் கொண்டிருக்கின்றன.

தீர்வுக்கான திட்டம் உண்டா-
தேர்தலுக்கு முன்னர் அதனைச் சொல்வீர்களா?
என்று கேட்பதல்ல நோக்கம்,
அடுத்த தேர்தலில் தாமும் தப்பிப் பிழைக்க
தற்காப்பு ஒப்பந்தம் ஒன்றை
ஏற்படுத்திக் கொள்ளும் எண்ணமே காரணம்.

நமது தமிழ் அரசியல் கட்சிகளின்
மாபெரும் பலவீனம்
தலைமையில் உள்ளவர்கள்
தங்களை காத்துக்கொள்வதில் காட்டும் அவசரம்.
அந்த அவசரம்தான்
அத்தியாவசியமான ஒற்றுமைக்கும், புரிந்துணர்வுக்கும்
குறுக்கே எழுந்து நிற்கும் 'பெர்லின் சுவர்.'

பெர்லின் சுவர்கூட
காலமாற்றத்தால் உடைத்து தள்ளப்பட்டுவிட்டது.
தெற்கே ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்கள்
சிங்கள மக்களிடம் ஏற்பட்டுவருகின்ற
தெளிவான அரசியல் கண்ணோட்டங்கள்
என்பவற்றை சரியான முறையில் கணிப்பிட்டு
இனப் புரிந்துணர்வோடு கூடிய தீர்வுக்கு
தேவையான வழிமுறை கண்டிட,
தமிழ் அரசியல் கட்சிகள் தமக்குள்
ஒருவரை ஒருவர் வெட்டி ஓடும்
விளையாட்டுக்களை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

மலருகின்ற புத்தாண்டில்
தமிழ் அரசியல் வானிலும்
நம்பிக்கையின் ஒளிக்கீற்றுகள் உதயமாகட்டும்.
நடந்தவை நடந்தவையாக இருக்க
இனி நடப்பவை நல்லவையாக மாறட்டும். ■

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
அடுத்த வாரத்திற்குரிய முரசு மட்டும்
உங்கள் கரங்களை வந்து முத்தமிடாது.
எனினும், அதற்கு அடுத்து வரும் முரசு
வேகமாய்-பொலிவாய் வந்து
உங்கள் சிந்தையை இனிக்க வைக்கும்.
ஒருவார பிரிவும் வருத்தமே! எனினும்
சூழ்நிலைகள் விடுமுறைகோரி விடாப்பிடியாய் உள்ளன.
எனவே-பொறுத்துக்கொள்ளவும்.
புத்தாண்டில் நம்மையும் நினைத்துக்கொள்ளவும். ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
புத்தாண்டுக்கான பூரிப்பான வாழ்த்துக்களோடு
என்றென்றும் அன்புடன்
-ஆசிரியர்-

கவிதைப் போட்டி இல-46



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 16.04.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 46
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

கவிதைப்போட்டி இல-43

களம் காண வந்த கவிதைகளில்
வெற்றிக்குரியதுவும்-வியக்கப்பட்டவையும்.

பரிசுக்குரிய கவிதை

புதிய படகு

கிளாலிக் கடலில்
புதிய படகுச்சேவை
குண்டு துளைக்காத
மிதக்கும் கார்க் கப்பல்.
சு. பாலன்
வேலணை-06.

வியக்க வைத்தவை

தவம்

அக்கரைப்பச்சை மோகத்தால்
ஒற்றைக் காலில் நிற்பார்கள்
எக்கரை சென்று சேர நீ
ஒற்றைச் சில்லில் நிற்கின்றாய்!
வி.சர்வாம்பிகை-கொழும்பு-15.

எப்போது?

வழிதவறி வீழுகின்ற
வாகனம்போல்
சமாதான நெறி விலகி
மோதுகின்ற மனிதர்.
தம்முள்
யுத்த வெறியகன்று
ஒன்றாய்ச் சேர்வது
எப்போ...?
சு.பார்த்திபன்
அக்கரைப்பற்று-8.



அர்த்தம்

காரை-படகு
கொள்ளையடித்தால்
விபத்து-என்று
அர்த்தம்
ஏ.எல்.எம்.அமீர் பயிஸல்
காத்தான்குடி-03.

முத்தம்

மனிதன்
மதுவைத்
தொட்டுக் கொள்வதால்
இயந்திரங்கள்
இட்டுக் கொள்ளும்
கொடிய முத்தம்!
-ரேணுகா றிபாய்தீன்
ஏறாவூர்-2.

கயிறறுந்த பட்டமடா?

ஓடம் வண்டி ஏறுவதும்
வண்டி ஓடம் ஏறுவதும்
உலக நியதி சரிதானடா
ஓட்டும் பாதை சீர்கேடு,
அதிலும் நூறு தடை வேறு
இடையில் மனித பயணமெல்லாம்
கயிறு அறுந்த பட்டமடா.
தர்ஷிக்கா கனகசிங்கம்
மட்டக்களப்பு.

ஆ...(அ)கதி

வாகனம் தவறி
கடலுக்குள் வீழ்ந்தது போல்
எம் வாழ்க்கையும் தவறி
யுத்தக் கடலில் வீழ்ந்ததுவே!
-யாழ் ஒஸ்லி.கபூர்-அநுராதபுரம்.

சாத்தானிய யாத்திரை

நங்கூரமிட்டு
நகர்ந்து நின்றாலும்
விபரிக்க முடியாத
விபத்துக்களின்
விளையாட்டு மைதானம்
இதுதான்.
த.ஜீவராஜ்-கோமாரி-01.

குணம்

ம்...
மோதுங்கள்
மோதுங்கள்
உங்களிற்கும்
மனித குணம்
எப்போது வந்தது?
ஏ.அர்.பஸ்மியா
புத்தளம்.

வாராயோ...

வாய்பேசா வாகனத்தை
கரையேற்றும் ஓடமே
நீ
எம் துயரப் பொழுதுகளை
கரையேற்ற வாராயோ
திரு.பாஸ்கர் இராஜதுரை
மட்டக்களப்பு.

யாருண்டு?

வாகனத்தைக் கரை சேர்க்க
ஓடமுண்டு
சமாதானத்தைக் கரைசேர்க்க
யாருண்டு?
ந.ரதீஸ்வரன்-தம்பிலுவில்-02.

தாலாட்டு

அடங்காத வண்டிக்கு
அழகான தாலாட்டு
ஏ. ஆர்.எம்.றிஸ்வான்
புத்தளம்.

வாசகசாலை

புதிய ஆண்டில் புத்தம் புது முரசை அழைக்கிறோம். நித்தம் ஒரு முரசு (உன்போல்) வேண்டும். எங்கள் மனம் மகிழ் முரசை இன்னும் பல சிறப்பான அம்சங்களை தொடர்ந்த தருவாய் என தினமுரசை வாழ்த்துகிறோம்.

எல். ஆர்.எஸ்.திருச்செல்வம்-நாவலப்பிட்டி.

•

எந்த பத்திரிகையிலும் இல்லாத ஒன்று அது ஏதோ உன்னிடம் இருக்கிறது. உண்மை நிலையை எடுத்துக் காட்டும் இராஜதந்திரி அதுவா..? வியக்கும் செய்தியை விரிவாய் தரும் தகவல் பெட்டி அதுவா...? கண்ணைப் பறிக்கும் வர்ணக் கலரில் சினிவிசிட் அதுவா...? இல்லை நீயே மொத்தமாய் வித்தியாசமாய் இருப்பது 'அதுவா...?

றிஸ்வானா ஹமீட்-ஏத்தாலையூர்.

•

அன்பின் முரசே,

அம்தரவெல்ல நிலாவாசனின் "திசை மாறும் உணர்வுகள்" சிறுகதை வெகுஜோர். முரசின் முத்தான பணிக்கு ஒரு குட்டி முத்தம். இச்....இச்...

பாத்திமா ரஸ்மியா ஹசன்தீன்-கந்தப்பொல.

•

வாரா வாரம் நீ சுமந்து வரும் உலக அதிசயங்கள் அப்பப்பா. என்னை அதிர்ச்சியாக்கி விடுகிறது. அத்தோடு நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அற்புதம். இன்னும் உன் வளர்ச்சி ஓங்கி வளர என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள் முரசே!

செல்வி. ஆர். தீவா-வெள்ளம்பிட்டிய.

முரசு கொட்டும் இனிய முரசே உன் சிறப்பான சேவையில் வெற்றி பெற்றுள்ள நீ வாழ்க என்றென்றும்.

ஏ. ஆர். நிஹார்-புத்தளம்.

•

தினமுரசே வாரம்தோறும் நீ சுமந்து வரும் ரசிகனின் கொலை விழும் நேரம், இலக்கிய நயம், சிந்தியாவின் பதில்களும் மணம் வீசுகின்றது. எனது அன்பான தினமுரசுக்கு எனது அன்பான வாழ்த்துக்கள்.

எஸ்.சந்தனராஜ்-காஹால்ல அப்புத்தளை.

•

போர் ஏற்படுவதற்காக முரசு கொட்டப்பட்டது- அது அந்தக் காலம். போர் ஏற்படாமலிருக்க முரசு கொட்டப்படுகிறது- அது இந்தக் காலம். அதுதான் தினமுரசு.

முரசே! உனை எத்தனை முறை பார்த்தாலும் சலிப்பதில்லை. தினம் தினம் உன் முகம் காண்பதற்காக ஏங்கி கொண்டிருக்கின்றன- என் கண்கள். இருந்த போதிலும் ரசிகனை இதுவரை மறைப்பதுதான் ரசிக்க முடியாமல் இருக்கிறது. நானிலம் போற்றி நாள்தோறும் வாழ என் வாழ்த்துக்கள் கோடி.

அ.ச.மு.பௌஸ்(திலீப்)-மூதூர்-05.

•

வாரமலர்
தினமுரசு

உடனுக்குடன் பல புதிய, உண்மையான செய்திகளைத் தரும் தினமுரசுக்கு நிகர் தினமுரசுதான். அத்தோடு எம்மைத் தன் படைப்புக்களால் கவர்ந்த ரசிகனின் இலக்கிய நயம் வாவ்...சூப்பர். படிக்கப் படிக்க இதயத்தை ஈர்க்கிறது. கைகொடுங்கள் சார்.

செல்வி.நிஸ்வா ஸலாம்-தர்கா நகர்.

இதயக் கனியே! முரசு இதழ்கள் அசைந்தாடிட, உன்னதமான தேன் சுவையை ஊற்றிய முரசே! தினமுரசே! உன் நட்சத்திர முத்துக்கள் எனதுள்ளத்தில் ஆழப்பதிந்து உள்ளன. உன் சேவை மென்மேலும் மேலோங்க வாழ்த்துக்கள்.

எம்.ஏ.நைஸர்-கிண்ணியா-01.

•

பல்சுவை அம்சங்களை சுமந்து வரும் தினமுரசே,

எப்படி நீ எல்லோரின் மனதையும் கவர்கிறாய்? நானே உன்னிடம் மயங்கிவிட்டேன். உன்னையே என்றென்றும் காணத்துடிக்கும் நான்.

நிஹாரா பஹமன்-வத்தளை.

•

அன்பின் தினமுரசே!

நீ கொண்டுவரும் செய்திகள் அருமையிலும் அருமை. ரசிகனின் கொலை விழும் நேரம், மகாபாரதம், சினிவிசிட் இன்னும் எத்தனை எத்தனையோ.... உனக்கு என் அன்பு முத்தங்கள்.

த.பாலதம்பு-அக்கரப்பத்தனை.

•

வாசமலரே! உனக்கு வாசகர்கள் சூட்டும் புகழ்மாலைகள் எத்தனை! எத்தனை! அதைக் காணும் உன் நீண்ட நாள் வாசகியாகிய எனது உள்ளம்-நீ சுமந்து வரும் இளமைக்கு சுகந்தரும், இனிமையான இலக்கிய நயத்தைக் கண்டு பூரித்து போகுதடி! வஞ்சி என் வாழ்த்துக்கள் பலகோடி.

செல்வி.சகாயமேரி
தொங்கத் தோட்டம்.

•

ஆயுதக் கொள்வனவில் படையினர் அக்கறை!

புத்தாண்டுக்குப்பின் புதிய போர் உத்திகள்!!

பாதுகாப்புப் படையினர் மத்தியில் போரிடும் ஆற்றலை வளர்ப்பதில் படைத் தலைமையினர் அக்கறை செலுத்தி வருகின்றனர்.

ஆட்பலத்தையும், ஆயுத பலத்தையும் அதிகரிப்பதிலும், படையினரின் மனோபாவத்தில் உற்சாகத்தை ஏற்படுத்துவதற்கும் புதிய திட்டங்கள் ஆராயப்பட்டு வருகின்றன.

படை அதிகாரிகள், படை வீரர்கள் மத்தியில் நீண்டகால யுத்தத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள சலிப்பை அகற்றுவதற்கும், பாரிய இராணுவ நடவடிக்கைக்கு அவர்களை தயார் படுத்துவதற்கும் ஏற்ற திட்டங்கள்-புதிய ஒழுங்கமைப்புக்கள் குறித்து பாதுகாப்புப் படையின் உயர்மட்ட தலைமையில் கலந்தாலோசனைகள் நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

சுமார் 300 கோடி ரூபாய்களுக்கான ஆயுதங்களை ரஷ்யா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் இருந்து அரசு கொள்வனவு செய்யவுள்ளதாகவும், சீனாவில் இருந்து போர்க் கப்பல் கொள்வனவும் நடைபெறவுள்ளதாகவும் புலிகள் கூறுகின்றனர்.

ஆயுதக் கொள்வனவுக்காக படை அதிகாரிகள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதே வேளையில் இராணுவத்திற்கும் புதிய படைப்பிரிவுகள் உருவாக்கப்பட்டு, அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட இருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து அறிய முடிகிறது.

இராணுவத்திற்கு புதிதாக பத்தாயிரம் பேர் சேர்க்கப்படவுள்ளனர், இந்த மாதம் அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகும். முதற் கட்டமாக ஐயாயிரம் பேர் சேர்க்கப் படலாம் என்றும் பாதுகாப்பு படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளில் புதிய உத்திகளை கடைப்பிடிக்கவும், படை முகாம்களின் பாதுகாப்பை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுவருவதாக கூறப்படுகிறது.

தற்போது வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை என்றாலும்கூட, விமானப்படை விமானங்கள் அடிக்கடி பறந்து நோட்டமிட்டு வருகின்றன.

கடற்பகுதிகளில் கடற்படை ரோந்தும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பிலும் பொலிசாரும், படையினரும் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

தேடுதல் நடவடிக்கைகளும் நடைபெற்று வருகின்றன.

அமைச்சர் தொண்டாவை அணைத்துக்கொள்ள முயற்சி!

அடுத்த தேர்தலுக்கு முன் உறவுகள் வலுப்படுமா?

அமைச்சர் தொண்டமான் சமீப காலத்தில் ஆளும் கட்சி குறித்து தனது அதிருப்திகளை பகிரங்கமாகத் தெரிவித்து வருகிறார்.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவின் இனப்பிரச்சனை தொடர்பான கருத்துக்களையும் சாடி வருகிறார்.

தென்மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் தமிழ் பேசுவோரின் வாக்குகளும் தேர்தல் வெற்றிகளுக்கு முக்கிய தேவை என்பதை ஆளும் கட்சிக்கு உணர்த்தியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா தமிழ், முஸ்லிம் கட்சிகள் தொடர்பாக கையாண்ட அணுகுமுறைகள் மீண்டும் கையாளப்பட வேண்டும் என்னும் கருத்து ஆளும் கட்சிக்குள் மேலோங்கி வருகிறது.

இந்நிலையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் உறவை முன்புபோல் உறுதிப்படுத்திக் கொள்ள ஆளும் கட்சிக்குள் உள்ள முக்கியஸ்தர்கள் சிலர் ஆர்வம் காட்டுவதாகத் தெரிகிறது.

திரு.காமினி திசாநாயக்காவுக்கு திரு.தொண்டமான் ஆதரவு கொடுத்தபோதே ஐக்கியதேசியக் கட்சிக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கும் இடையேயான விரிசல்கள் வெளியரங்குக்கு வந்தன.

இப்போது திரு.காமினி ஆளும் கட்சியில் இணைந்துவிட்டார்.

எனினும், திரு.காமினி திசாநாயக்காவுக்கு ஆதரவாக அவரது திட்டப்படி மத்திய மாகாணசபையில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்க மறுத்த இ.தொ.கா உறுப்பினர்கள் எண்மர் மீது மன்னிப்பே கிடையாது என்று திரு.தொண்டமான் கூறிவருகிறார்.

திரு.காமினி திசாநாயக்கா இ.தொ.காவை பிளவுப்படுத்திவிட்டு ஆளும் கட்சியோடு சேர்ந்துவிட்டார் என்று திரு.செல்லச்சாமியும் அவரது ஆதரவாளர்களும் கூறிவருகின்றனர்.

இந்நிலையில் அமைச்சர் தொண்டமானுடன் மீண்டும் நல்லுறவுகளை வளர்க்க ஆளும்கட்சி நாட்டம் காட்டுகிறது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனா ஐ.தே.க., இ.தொ.கா உறவு சுமுகமாவதில் விருப்பம் கொண்டு அதற்கான சில முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாக உறுதிப்படுத்தாத தகவல் ஒன்றும் வெளியாகியுள்ளது.

திரு.தொண்டமானுக்கும், ஆளும் கட்சிக்கும் மீண்டும் முன்புபோல் திருப்தியான உறவு ஏற்பட்டால், இ.தொ.காவின் கட்டுப்பாட்டை மீறியதாக கூறப்படும் எண்மரின் நிலை மேலும் கவலைக்கிடமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக செயற்பட்ட அந்த எட்டுப் பேரினதும் நிலை குறித்து பேசி, மீண்டும் கசப்பை ஏற்படுத்த ஆளும் கட்சி வட்டாரங்கள் விரும்பமாட்டா என்றே நம்பப்படுகிறது.

அமைச்சர் செல்லச்சாமி பலமுறை கேட்கும் எண்மர் விடயத்தில் நடவடிக்கை உறுதி என்று கூறிவரும் அமைச்சர் தொண்டமான் அதை தனது கௌரவப் பிரச்சனையாகவே கருதுகிறார்.

ஆளும் கட்சி, அடுத்துவரும் தேர்தல்களுக்கு தன்னை தயார்படுத்த வேண்டியிருப்பதால் மத்திய மாகாண சபையில் தனக்கு ஆதரவளித்தவர்களைவிட இ.தொ.காவின் முழுமையான ஆதரவைத் தேடிக் கொள்வதிலேயே கவனம் செலுத்தக்கூடும்.

கிழக்கில் சுறுசுறுப்பாகிறது சுதந்திரக் கட்சி!

புதிய உறுப்பினர் திரட்ட துரிதமான திட்டம்!!

(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம், தமிழ்ப்பிரதேசங்களிலிருந்து பத்தாயிரம் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளும் துரித திட்டம் ஒன்றை சிறி லங்கா சுதந்திரக் கட்சி ஆரம்பித்துள்ளது.

சிறி லங்கா சுதந்திரக்கட்சியின் கிழக்கு மாகாண (தமிழ்-முஸ்லிம் பிரதேச) பிரதம அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி அல்-ஹாஜ் ஏ.எம். சம்சுதீன் தமது நேரடி கண்காணிப்பில் இந்தத் திட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

கட்சிக்கென பத்தாயிரம் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளும் இந்தத் திட்டம் எதிர் வரும் ஏப்ரல் மாத இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படுமென பாராளுமன்ற உறுப்பினர் அல்-ஹாஜ் சம்சுதீன் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில் கட்சிக் கிளைகள் புனரமைத்தல், புதிய கிளைகள் ஆரம்பித்தல், கிராமிய ரீதியில் கட்சி அமைப்பாளர்களைத் தெரிவு செய்தல் முதலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாக்குச் சாவடிகளை மையமாக வைத்து கட்சிக்கிளைகள் ஆரம்பிக்கப்பட்டு வருவதுடன், மிக விசுவாசமான அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்வதிலும் அக்கறை காட்டப்பட்டு வருகின்றது.

தென்மாகாண சபைத் தேர்தல் வெற்றியை அடுத்து பொது மக்களிடையே கட்சி இணைப்பில் புதிய ஆர்வம் காணப்படுவதால், உத்வேகத்துடன் கட்சிக்கிளைகள் புனரமைப்பு வேலைகளும் அமைப்பாளர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் அல்-ஹாஜ் சம்சுதீன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட நடவடிக்கைகள் போன்று மட்டக்களப்பு மாவட்டத்திலும் கட்சிக்கென உறுப்பினர்களைச் சேர்த்தல், கிளைகள் அமைத்தல், அமைப்பாளர்களைத் தெரிவு செய்தல் முதலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

போர் இல்லாப் பொழுதுகள்
புலரவும்-
புன்னகை நிரந்தர
வாழ்வு மலரவும்
இணையற்ற இனிய
வாசக நெஞ்சங்களோடு
சித்திரைப் புதுவருச
வாழ்த்துக்களை பகிர்ந்துகொள்கிறோம்
வாழ்வோம்-வாழ்த்துவோம்-வளர்வோம்.

திருவிழா நடத்தவும் புலிகளின் அனுமதி வேண்டும்

கோவில் நிர்வாகங்களிடம் நிதி வசூலிப்பு!

யாழ்ப்பாணத்தில் கோவில் திருவிழாக்கள் மற்றும் விழாக்கள் நடத்துவதற்கும் புலிகள் அமைப்பின் அநுமதிக்காக காத்திருக்க வேண்டியிருப்பதாக கொழும்பு வந்துள்ள யாழ் ஆலயமொன்றின் நிர்வாக சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

புலிகள் அமைப்பின் முன்னாள் யாழ் மாவட்ட தளபதி கிட்டுவின் நினைவு தினத்தை முன்னிட்டு கோவில் நிர்வாகங்களிடம் புலிகள் அமைப்பினர் பணம் வசூலித்தனர் என்றும் அவர் கூறினார். ரூபாய் இரண்டாயிரம் வீதம் ஒவ்வொரு கோவில் நிர்வாகங்களிடமும் பணம் வசூலிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

கோவில் திருவிழாக்களுக்கு வரும் சைக்கிள்கள் முதலியவற்றுக்கு பாதுகாப்புச் சீட்டு வழங்குவதன் மூலமும் புலிகள் அமைப்பினர் நிதி திரட்டிக்கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஏப்ரல் பூல்–வடக்கே தடை!

ஏப்ரல் முதலத் திகதி முட்டாள்கள் தினம் அனுஷ்டிக்கப்படுவதுண்டு. யாழ்ப்பாணத்தில் 'ஏப்ரல் பூல்' தினம் அனுஷ்டிக்கப்படக்கூடாது என்று புலிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். திரவங்கள், வர்ணங்கள் என்பவற்றை தெளிக்கவோ, பூசவோ முற்படுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்திருந்தனர். அதனையடுத்து முட்டாள்தின நிகழ்ச்சிகள் எதுவும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவில்லை.

"எப்படியும் யாழ் வருவேன்!"

புலிகளுக்கு சபாநாயகர் கடிதம்

சபாநாயகர் எம்.எச்.முகமது இந்த மாதம் முதலாம் திகதி யாழ் வருவார் என்று புலிகள் அமைப்பினர் தெரிவித்திருந்தனர்.

ஜனாதிபதியின் கருத்துக்கமைய குறிப்பிட்ட தினத்தில் யாழ் செல்ல முடியவில்லை என்று சபாநாயகர் தெரிவித்திருந்தார். சபாநாயகர் தமக்கு ஒரு கடிதம் அனுப்பிவைத்துள்ளதாக புலிகள் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளனர்.

தற்போது வரமுடியாமைக்கான காரணத்தை விளக்கியும், "எவ்வாறாயினும் யாழ் வந்தே தீருவேன்" என்றும் அந்தக் கடிதத்தில் சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார் என்று புலிகள் அமைப்பின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

முன்னாள் துணைவேந்தருக்கு பிரபா புகழாரம்!

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்து ஓய்வு பெற்றுள்ள பேராசிரியர் அ.துரைராசாவுக்கு புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் விசேட விருது வழங்கியுள்ளார்.

இம்மாதம் 2ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பிரிவு உபசார வைபவத்தில் பிரபாகரனும், புலிகள் இயக்க முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டனர். பிரபாகரன் அங்கு உரையாற்றினார்.

"சான்றோரைப் போற்றுவதும் கற்றோரைக் கௌரவிப்பதும் தமிழர்களது மரபாகும். ஆறு ஆண்டுகளாக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்த பேராசிரியர் துரைராசா எமது மண்ணுக்கு அரிய சேவையாற்றினார். மக்களையும், மண்ணையும் நேசித்தார்" என்று பிரபாகரன் தனது உரையில் குறிப்பிட்டார்.

பாடல் பெற்ற ஆலய நிதி போனது எங்கே?

கொடுத்தவர்கள் கேட்கிறார்கள்! எடுத்தவர்கள் பதில் சொல்வார்களா?

(திரு மலை நிருபர்)

'பாடல் பெற்ற புனித கோணேஸ்வரத்தின் பெயரால் சேர்க்கப்பட்ட பல இலட்ச ரூபாய் பணத்துக்கு என்ன நடந்தது?' இவ்வாறு திருகோணமலை மாவட்டச் சைவ அன்பர்கள் கேட்கிறார்கள். கோணேசராலயப் பரிபாலன சபையைப் புனரமைக்க வேண்டும்; சகல சைவ அன்பர்களும் உறுப்பினர்களாக வேண்டும் என பரந்த பிரச்சாரம் செய்யப்பட்டு பல்லாயிரக் கணக்கான அன்பர்களிடமிருந்து, அப்போது இருந்த உதவி அரசாங்க அதிபரால், கிராம சேவகர்களூடாக ஆளுக்கு ஐந்து ரூபா வீதம் வசூலிக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் பரிபாலன சபைப் புனரமைப்போ வேறு நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படாமையினால், பணத்துக்கு என்ன நடந்தது என்று பரவலாகக் கேட்க ஆரம்பித்துள்ளனர்.

அச்சிட்ட விண்ணப்பப் படிவங்கள் முடிந்த நிலையில்கூட தாங்களாகவே படிவங்களைப் போட்டோ பிரதி செய்து ஆர்வமுடன் பொதுமக்கள் உறுப்புரிமை கேட்டு விண்ணப்பித்திருந்தார்கள்.

இந்தப் பண வசூலிப்பு திருகோணமலை மாவட்டம் முழுவதும் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கள மக்களும் சமாதானத்தில் நாட்டம்!

லூவிசாம் மேயர் சின்னமணி கூறுகிறார்!!

சமீபத்தில் யாழ்ப்பாணம் சென்று திரும்பிய பிரிட்டனிலுள்ள லூவிசாம் நகர மேயர் சின்னமணி, புலிகள் அமைப்பினர் ஆயுதமேந்தியதற்கு இலங்கை அரசுகளே காரணம் என்று குற்றம் சாட்டியுள்ளார்.

புலிகள் பயங்கரவாதிகள் என்று கூறுவதை தன்னால் ஏற்கமுடியாது என்று கூறியுள்ள சின்னமணி, சிங்கள மக்களும் சமாதானத் தீர்வில் நாட்டம் கொண்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

வடபகுதி மக்களுக்கும், யாழ் போதனா வைத்தியசாலைக்கும் பிரிட்டிஷ் அரசு மனிதாபிமான உதவிகளை வழங்கவேண்டும் என்றும் திரு.சின்னமணி தெரிவித்துள்ளார்.

நினைவு நாளில் சிரமதானம்!

இந்திய அமைதிப்படையினர் இலங்கையில் இருந்து வெளியேறவேண்டும் என்று உண்ணாவிரதம் இருந்து மரணமான அன்னை பூபதி நினைவாக கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

நினைவு தினத்தை முன்னிட்டு சிரமதானம் மூலம் வீதிகள் சுத்தம் செய்யப்பட்டன.

திரையரங்கங்களில் வேலை நிறுத்தம்!

சம்பள உயர்வு கோரியும், போயா விடுமுறை தினங்களில் இரட்டிப்பு சம்பளம் தமக்கு வழங்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்தும் திரையரங்க ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

கொழும்பிலும், அதன் புறநகரிலும், மட்டக்களப்பிலும் உள்ள சில திரையரங்க ஊழியர்களே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

திரையரங்கங்கள் சிலவற்றின் உரிமையாளர்களை கண்டித்து சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.

தலை நகரில்

தியான விளக்கம்!

'ஆரோக்கியமான குடும்ப வாழ்க்கைக்கு தியானம்' என்ற அடிப்படையில் இலங்கையின் பிரம்மகுமாரி ராஜயோக நிலையத்தினர் 'தியானம்' குறித்த விரிவுரையொன்றை ஒழுங்கு செய்துள்ளனர்.

இந்த விரிவுரை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் இடம்பெறும்.

பம்பாய் பிரம்மகுமாரி ராஜயோக நிலைய இயக்குநர் டாக்டர் நிர்மலா கஜாரியா இந்த விரிவுரையை வழங்குவார்.

இந்து கலாசார இராஜாங்க அமைச்சர் பி.பி.தேவராஜ் இந்த விரிவுரைக்கு தலைமை தாங்குவார். 1994ம் அண்டு ஒரு குடும்ப ஆண்டாக ஐ.நா.ஸ்தாபனம் பிரகடனப்படுத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

முக்கிய அறிவித்தல்

அன்புள்ள உங்களுக்கு!

புதுவருட விடுமுறையை முன்னிட்டு முரசுக்கும் உங்களுக்கும் இடையே ஒரு சிறு பிரிவு. எப்ரல் 17–23 திகதிக்குரிய முரசு மட்டும் உங்கள் கரம் வந்து சேராது. எனினும் அந்தத் திகதியில் வரவேண்டிய முரசு 47 எப்ரல் 21ம் திகதி உங்கள் கரம் வந்து சேர்ந்து மகிழவைக்கும்.

—ஆர்—

விளம்பரப் பகுதி

மலையாள
மாந்திரீகம்

கொழும்புவாழ் நகர வாசிகளின் நலனைக் கருதி ஒவ்வொரு மாதமும் (எம்மாதமும்)
வினோத் இன்
இல.33, மூன்றாவது மாடி
சிறீ குணானந்த மாவத்தை
கொட்டாஞ்சேனை.
"VINNODH INN"
No. 33. 3rd Floor
Sri Gunanantha Mawatha
Kotahena.

ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வழியாகவும், ஸ்ரீகுணானந்த மாவத்தை உபதபால் கந்தோர் முன்பாகவும் வீற்றிருக்கும் எமது துர்க்கையம்மனை நாட நினைத்ததை நினைத்தவாறு நினைத்தபோதே எமது மலையாள உச்சாடன பீடத்திற்கு வந்து உங்களுக்கு பில்லியா, சூனியமா, கணவன் மனைவி பிணக்கா, கல்யாணத் தடையா, காதலில் படுதோல்வியா, தீரா நோயா, ஆஸ்துமாவா? வியாபார விருத்தி இல்லையா, பொருளாதாரத் தங்கு தடையா? அச்சொட்டான விதியின் சுவடி ஜாதகங்கள் எதுவானாலும்-

நிர்வாக அமைப்போ ஆலோசனையோ–078–71592
மாந்திரீகக் குரு: 078–71243
வெளிநாட்டுத் தொடர்பு: 052–2508, 052–3093
கடிதத் தொடர்பு: ஜோதிட மாந்திரீக தத்துவஞானி P.K.சாமி,
தபால் பெட்டி 33, ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்,
நுவரேலியா, சிறி லங்கா

P.K. SAAMY ASSOCIATE PVT. LTD.,
33, Daily fair Complex,
NUWARA ELIYA.

Dial: 052-2508 & 3093
AND
078-61933

FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

Phone: 052-2508, 052-3093
078-61933, 078-71243.

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்

கிழக்கில் இருந்து ஒரு மடல் — நாடோடி

வழமைக்குத் திரும்பிவிட்டதா கிழக்கு?

தொழில் இல்லை-மருந்தில்லை. புனர்வாழ்வும் ஒழுங்காய் இல்லை!

கிழக்கிலங்கையில் வைத்திய வசதிகளை பொறுத்தவரை பெயர்பலகைகள் மட்டுமே மாவட்ட வைத்தியசாலை என்று இருக்கிறது. ஆனால் அங்கு சாதாரண "பெனடோல்"கூட இல்லாத நிலையில் இருக்கிறது. டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு 'சிற்றில்' மருந்தின் பெயரை எழுதி கடையில் வாங்குமாறு தெரிவிக்கிறார்கள். இது எல்லோருக்கும் பொருந்துமா? பணம் படைத்தவர்கள் மாத்திரம்தான் வாங்கிக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

தற்போது அதிகமான வைத்தியசாலைகளுக்கு அம்புலன்ஸ் வண்டிகள் கிடைத்திருக்கின்றன. ஆனால் அவற்றில் அதிகமானவைகள் நோயாளர்களின் தேவைக்கு அல்ல. அதிகாரிகளின் பாவனைக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

வடக்கு-கிழக்கு மாகாணசபை செய்த ஒரு சாதனை- கட்டிட வளங்களை விருத்தி செய்திருப்பதே. போதுமான ஆசிரியர்கள் இல்லை. திறமை உள்ள ஆசிரியர்களை சேவைக்கால ஆசிரியர்களாக நியமனம் செய்துள்ளது. நல்ல திறமை உள்ளவர்களுக்கு நல்ல இடம் கிடைக்காததினால் அவர்கள் பதவிக்கு முழுக்குப் போட்டுவிட்டு உலக நாடுகளிலும், தனியார் நிறுவனங்களிலும் தொழில் பெற்றுக்கொள்கிறார்கள்.

கிழக்கில் கட்டிடங்கள் தேசியக் கல்லூரிகள், பிரதேச சபைக் காரியாலயங்கள், கல்வி அதிகாரிகள் என்றெல்லாம் வீதிக்கு வீதி பெயர்பலகை இருக்கிறது. கல்வியில் 'ரியூட்டரிகள்' இல்லாவிட்டால் முற்றும் பாதிப்பாகவே இருக்கும். இப்போதே ஆரம்பக்கல்வி சுத்த மோசமான நிலையில் இருந்து வருகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணசபையின் கல்வி அமைச்சின் திடீர் குழு ஒன்று பாடசாலைகளுக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டபோது அதிகமான ஆசிரியர்கள் லீவுக் கடதாசியை அனுப்பிவிட்டு வீட்டிலே தங்கி விட்டார்களாம். சில பாடசாலைகளில் வகுப்பு நிலமைகளை பார்வையிட்டபோது மாணவர்கள் அளித்த பதில் அது படிக்கவில்லை- இது சொல்லித்தரவில்லை என்பதாகும். ஒரு பாடசாலையில் மாதக்கணக்கில் தினவரவு பதியப்படவில்லை என்பது கண்டு பிடிக்கப்பட்டது.

கிழக்கிலங்கையிலுள்ள மக்களின் முக்கியமான தொழில் விவசாயம். ஆனால் கடந்த மூன்று வருடங்களுக்கு மேல் அதிகமான ஏக்கர் நிலங்கள், பாதுகாப்புக்காரணங்களை முன்னிட்டு சாகுபடி செய்யப்படவில்லை.

விவசாயிகளுக்குத் தேவையான விதைநெல், உரம் போன்ற பொருட்கள் சுலபமாகப் பெற்றுக் கொள்ள முடியாது இருக்கிறது. உற்பத்தி செய்யப்பட்ட நெல்லைக்கூட உத்தரவாத விலைக்கு விற்பனை செய்யமுடியாது. குறைந்த விலையில் தரகர்களுக்கு விற்பனை செய்யவேண்டியதாக இருக்கிறது. இதனால் விவசாயம் சீர் குலைந்துள்ளது.

உற்பத்தி செய்யப்பட்ட நெல்லை உத்தரவாத விலைக்கு விற்கமுடியவில்லை

மேட்டு நிலப்பயிர் செய்கையும் இதே கெதிதான் விவசாயத்திற்காக கடன் உதவிகளை தமிழ் மக்கள் வங்கிக் கிளைகளில் இருந்து பெற்றுக்கொள்வது என்றால் அது முயல் கொப்பாகவே இருக்கிறது.

மீன்பிடித் தொழிலுக்கும் கஷ்டம்தான். பாதுகாப்பை முன்னிட்டு ஆழ்கடலுக்கு செல்ல முடியாது. இரவு நேரங்களில் களப்புகளில் மீன்பிடிக்க முடியாது. இதனால் மீன் உணவுகளின் விலைவாசி வெகுவாக அதிகரித்துள்ளது. இதனால் வறிய மக்கள் மீன் உணவுகளை நினைத்துப் பார்க்க முடியாத ஒரு நிலமை ஏற்பட்டிருக்கிறது.

கிழக்கில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் எல்லாம் எப்படி நடைபெறுகிறது என்பது நாடு அறிந்த ஒரு சம்பவமாகிவிட்டது.

இறக்காதவருக்கு இறந்ததாக நஷ்டஈடு பெற்றுக்கொள்ளலாம். ஆனால் உண்மையில் இறந்தவர்களுக்கு இன்றுவரை உதவிகள் பெற்றுக் கொள்ளமுடியாது இருக்கிறது.

அரச ஊழியர்களுக்கான நஷ்டஈடுகள் தவறான முறையில் வழங்கப்பட்டுள்ளன. எந்த விதமான பாதிப்புமில்லாத பலருக்கு நஷ்டஈடு கிடைத்திருக்கிறது. இது எப்படிக் கிடைத்தது என்று இப்போது புலன் விசாரணைகள் நடைபெறுகின்றன.

இந்த நஷ்ட ஈடுகள் கற்றை காணிக்கையாக வைத்து பெற்றுக்கொள்ளப்பட்டதாக பல சம்பவங்கள் இப்போது அம்பலத்திற்கு வந்திருக்கின்றன. இதனால் நஷ்ட ஈடுபோன்ற கொடுப்பனவுகள் எல்லாம் நிறுத்தப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிழக்கிலங்கையில் வன்செயல் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதற்கு என்று பல அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படுகின்றன. ஆனால் சில நிறுவனங்களும், நிறுவனத்தைச் சேர்ந்தவர்களுமே புனர்வாழ்வு பெறுகிறார்களே தவிர கிடைக்கும் உதவிகள் சொற்பம். அந்த உதவியால் கிடைக்கும் பலனும் இல்லை என்று மக்கள் தெரிவிக்கிறார்கள்.

கிழக்கிலங்கையில் மக்கள் இப்படி அல்லோல கல்லோலப்படும்போது கிழக்கிலங்கையின் தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கொழும்பிலே சுகமாக வாழ்க்கை நடத்திக்கொண்டுவருகிறார்கள்.

அவர்களிடத்தில் மக்கள் அணுகி தங்களின் கஷ்டங்களை சொல்லும்போது தங்களுக்கு இங்கு வந்து உங்களைப் பார்க்கமுடியாத நிலையில் இருக்கிறோம் என்று அசடுவழிய கூறுகிறார்களாம். இது தமிழ் பேசும் மக்கள் கொடுத்துவைத்த பாக்கியம்தான்.

அரசாங்கம் சொல்லுகிறது, கிழக்கில் எல்லாம் வழமைக்குத் திரும்பியுள்ளது என்று.

ஆனால் சிவில் நிர்வாகம் சீராக இயங்க முடியவில்லை. இணைப்பு அதிகாரி ஒருவர் இருக்கும்போது அரசாங்க அதிபர் எதையும் செய்ய முடியாது.

பிரதேச மட்டத்தில் விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரிக்குத் தெரியாமல் எதையும் பிரதேச செயலாளர் செய்யமுடியாது. இந்த நிலமையில் கிழக்கு வழமைக்குத் திரும்பியுள்ளது என்று. எப்படி சொல்ல முடியும்?

இன்னும் 1990ம் ஆண்டில் வெளியேறிய மக்கள் தங்களின் சொந்த இடங்களுக்குத் திரும்பி இயல்பான வாழ்க்கையை நடத்தத் தொடங்கவில்லை.

இதுதான் இன்று கிழக்கிலங்கையிலுள்ள மக்களின் நிலமை. இதனை வைத்துக்கொண்டு 'வழமைக்கு திரும்பிவிட்டது கிழக்கு' என்றால் வருத்தமாகவும் இருக்கிறது - வேடிக்கையாகவும் இருக்கிறது.

SPONSORS - COCA COLA COMPANY

நட்சத்திர நடன இசை விழா

ஷர்மிளா விளையாட்டுக்கழக
கட்டிட நிதிக்காக

எதிர்வரும் ஏப்ரல் 22–23–24ம் திகதி
மாலை 6.30 மணிக்கு
விகாரமகாதேவி பூங்காவில்
(சத்துடு உயன)

ஏப்ரல் 22
பிரபல சிங்கள கலைஞர்களின் நாடகம்
கோப்பி கடே

ஏப்ரல் 23
பிரபல சிங்கள கலைஞர்கள்
கலந்துகொள்ளும்
இன்னிசை நிகழ்ச்சி

ஏப்ரல் 24
பிரபல இந்தியக் கலைஞர்கள்
கலந்து கொள்ளும்
நடன இசை விழா

உங்கள் டிக்கட்டுக்கு முந்துங்கள்

கிடைக்குமிடங்கள்

சர்மிளா ஸ்போர்ட்ஸ் கிளப்
101, 16வது ஒழுங்கை, காலேஜ் வீதி
தொலைபேசி: 334224

நியூ ஆரியபவான்
இல.9, டாம் வீதி, கொழும்பு–12.
தொலைபேசி: 435362

சர்மிளா டிரவல்ஸ்
பீப்பிள்ஸ் பார்க், கொழும்பு
தொலைபேசி: 436726, 436727

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க
ஏப்ரல் 23 திகதியன்று மாலை 6.30 மணிக்கு
சுகததாச ஸ்டேடியத்தில்
நட்சத்திர நடன இசை விழா இடம்பெறும்
மண்டப வாயிலில் டிக்கட் கிடைக்கும்.

சில்க் சுமிதா–இளவரசி–விசித்ரா
பபிதா, கோகிலா, கௌதம்
கல்பனா ராகவேந்தர், பிரசன்னா ராகவேந்தர்

பாடகர்கள்: ராகேஷ், வெங்கட், சிவபிரசாத்
எல்.ஆர்.ஈஸ்வரி - சுபா - மலேசியா வாசுதேவன்
ஜெய்குமார் இசைக்குழுவுடன் மாபெரும் நிகழ்ச்சி

நட்சத்திர நடன விழா!

பவ வருடம்

சிறிமுக வருடம் முடிந்து பவ வருடம் 14.4.94 வியாழக்கிழமை பிறக்கிறது. சூரியன் மேட இராசிக்குள் பிரவேசிக்கும் காலமே தமிழ் வருடப் பிறப்பாகக் கணிக்கப்படுகிறது.

பூர்வ பக்கத்து திருதியை திதியும் கார்த்திகை நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் சந்திரன் ஓரையும் இராசத குணவேளையும் மீன இலக்கின இடபராசியில் புதுவருடம் பிறக்கிறது.

13ம் திகதி புதன்கிழமை இரவு 9 மணி 49 நிமிடம் முதல் 14ம் திகதி அதிகாலை 5 மணி 48 நிமிடம் வரை விஷபுண்ணிய காலமாகும். இக்காலத்தில் காலில் ஆல் இலையும் தலையில் கடம்பு இலையும் வைத்து மருத்து நீர் தேய்த்து நீராடவேண்டும்.

பொங்கல்-	*14ம் திகதி வியாழக்கிழமை காலை 5 மணி 10 நிமிடம் தொடங்கி 6 மணி 05 நிமிடம் வரை.*
பெரியோர் தரிசனம், ஆசீர்வாதம்-	*14ம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணி 35 நிமிடம் தொடங்கி 9 மணி 05 நிமிடம் வரை.*
கைவிசேடம் பெறுதல்-	*14-04-94 வியாழக்கிழமை காலை 7 மணி 35 நிமிடம் முதல் 9 மணி 05 நிமிடம் வரை.*
	15-4-94 வெள்ளிக்கிழமை காலை 6 மணி 04 நிமிடம் தொடங்கி 7 மணி 34 நிமிடம் வரை.
	16.4.94 சனிக்கிழமை பிற்பகல் 3 மணி 04 நிமிடம் தொடங்கி 4 மணி 34 நிமிடம்வரை.
விருந்துண்ணல்-	*வருடப்பிறப்பன்று வியாழக்கிழமை பகல் 10 மணி தொடங்கி 1 மணிவரையுள்ள காலத்தில் விருந்துண்ணலாம். 16ம் திகதி சனிக்கிழமையே வெளியிடத்தில் விருந்துண்ண ஏற்ற காலம்.*
புதுக்கணக்குப் பதிதல்-	*14ம், 15ம், 16ம் திகதிகளில் மேற்கூறிய சுப நேரங்களில் புதுக்கணக்குப் பதிதல் சிறப்பு தரும்.*

(திரு.எஸ்.தெய்வநாயகம் அவர்களின் 'பஞ்சாங்க கையேட்'டிலிருந்து தொகுக்கப்பட்டது.)

தினமுரசு செய்திக்கு விரைவில் பலன்!

அமைச்சர்கள் விஜயம் வைத்தியசாலைக்கு!!

(தினமுரசு நிந்தவூர் நிருபர்)

நிந்தவூர் அரசினர் ஆஸ்பத்திரி விரைவில் மாவட்ட ஆஸ்பத்திரியாகத் தரமுயர்த்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்பொழுது சுற்றயற்கூறு தரத்தில் இயங்கும் இந்த ஆஸ்பத்திரியைத் தரமுயர்த்துமாறு நீண்டகாலமாகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடக்கம் சுகாதார அமைச்சு மட்டம்வரை கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையையிட்டு 'தினமுரசு' கடந்த பெப்ரவரி 20-26ம் திகதிய இதழில் செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தமை தெரிந்ததே!

"நித்திய சோதனையில் நிந்தவூர் ஆஸ்பத்திரி! தரமுயர முடியாமல் தாமதமாவது ஏன்?" எனும் தலைப்பில் வெளியிடப்பட்டிருந்த அந்தச் செய்தியில் பலமுக்கிய விடயங்கள் அப்பட்டமாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர் ஜனாப்.ஏ.ஆர்.மன்சூர் அவர்களின் அழைப்பை ஏற்று அம்பாறை மாவட்டத்திற்கு அண்மையில் விஜயம் செய்த சுகாதார மகளிர் விவகார போதனா வைத்திசாலைகள் அமைச்சர் திருமதி. ரேணுகா ஹேரத் அவர்கள் நிந்தவூர் ஆஸ்பத்திரிக்கும் விஜயம் செய்து, தரமுயர்த்தல் தொடர்பாக ஆராய்ந்தார்.

அமைச்சரின் இந்த வருகையின் போது பிரதம வைத்திய அதிகாரியும், பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளருமான டாக்டர் ஜனாப்.ஏ.எல்.பரீத், மாவட்ட வைத்தியசாலையாக இதனைத் தரமுயர்த்துவதற்கான வளங்கள் குறித்து விளக்கிக்கூறினார்.

அமைச்சர் திருமதி ரேணுகாவின் இந்த விஜயம் காரணமாகவும், நிந்தவூர் மக்கள் பால் அமைச்சர் ஜனாப் ஏ.அர். மன்சூர் அவர்கள் கொண்டுள்ள பெரும் அன்பு காரணமாகவும் இந்த ஆஸ்பத்திரி மிகக் கூடிய விரைவில் தரமுயர்த்தப் படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போது பேச அரசு முன்வருமா?

அதனால் சாதகம் அரசுக்கா? புலிகளுக்கா?

ஏப்ரல் முதலாம் திகதி சபாநாயகரை யாழ் வாருங்கள், வரவேற்கத் தயாராக இருக்கிறோம் என்று புலிகள் அறிவித்திருந்தார்கள்.

ஏப்ரல் முதலாம் திகதிதான் ஏப்ரல் பூல் தினமும் அனுஷ்டிக்கப்படுவதுண்டு.

இப்போது சபாநாயகரின் விஜயம் ஒத்திப்போடப்பட்டுவிட்டதால், ஏப்ரல் முதல் தேதி சபாநாயகர் வருகிறார் என்று யாழ்ப்பாணத்தில் வெளியான செய்திகளுக்கு ஏமாற்றமே மிச்சமாகிவிட்டது.

"தென் மாகாணத் தேர்தலின் பின் தற்காப்பு ஆட்டம் ஆடவேண்டிய நிலையில் அரசு"

விசாரித்ததில் வெளிநாடு போயிருக்கிறார் என்று தெரிந்தவுடன் உடனே ஊகங்கள் செய்து செய்திகள் வந்தன.

வெளிநாட்டில் சபாநாயகர் புலிகளைச் சந்தித்து பேசியிருக்கிறார். வடக்கே செல்வதற்கு முன்னர் முதல் சுற்றுப் பேச்சை புலிகளது வெளிநாட்டில் உள்ள பிரமுகர்களோடு நடத்தியிருக்கலாம் என்று கற்பனை செய்து செய்திகள் வந்தன.

அப்படியொன்றும் கிடையாது. சபாநாயகரை எப்படியிருக்கிறீர்கள் சௌக்கியமா? என்று போனில் கூட விசாரிக்கவில்லை; என்பது மாதிரியான அர்த்தத்தில் புலிகளது பாரிஸ் பிரதிநிதி லோரன்ஸ் திலகர் அங்குள்ள பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்திருக்கிறார்.

அவர் பொய் சொல்லவில்லை. வெளிநாட்டில் சபாநாயகரும், புலிகளும் பேசவில்லை என்பது சபாநாயகர் விடுத்துள்ள அறிக்கையிலும் வெளிப்பட்டுள்ளது.

சபாநாயகர் தரப்பிலிருந்து வடபகுதி விஜயம் பற்றிய தெளிவான செய்தி எதுவும் பத்திரிகைகளுக்கு வழங்கப்படவில்லை.

ஆனால் புலிகளோ அவர் வருகிறார். அவரோடு இரண்டுபேர் கூட வருகிறார்கள் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்கள்.

அதனை சபாநாயகருக்கு தொடர்புடைய வட்டாரங்கள் உறுதிப்படுத்த முடியாதபோது பத்திரிகைகள் ஊகங்களைச் செய்தியாக்க வேண்டியதாயிற்று.

இப்போது காற்றுப்போன ரயர் மாதிரி எதிர்ப்பார்ப்புகள் 'புஸ்' என்று இறங்கிப் போய்விட்டன.

புலிகளோடு பேசச் செல்லுவதை ஜனாதிபதியும் விரும்பியே இருந்தார் என்பதுபோல சபாநாயகர் அவர்கள் கூறியிருக்கிறார்.

அடுத்த பிறவியிலும் புலிகளுக்கு எதிராகப் போராடுவேன் என்று அடித்துச்சொன்ன

இந்த நேரத்தில் சபாநாயகர் வடக்கே போனால் தோல்வி காரணமாக அரசு புலிகளை நாடிச்செல்கிறது;

தேர்தலுக்கு முன்னர் புலிகளை அழிப்போம் . என்றவர்கள் தேர்தலுக்குப் பின்னர் புலிகளை அணைப்போம் என்கிறார்கள் என்று பேச்சுக்கள் எழும்.

யாழ் செல்லும் சபாநாயகர் புலிகளோடு பேசிவிட்டு வந்து அவர்கள் பேசத் தயார் என்று அறிவித்தால் அரசின் நிலை பெரும் தர்மசங்கடமாகிவிடும்.

சபாநாயகர் என்ற பதவி காரணமாக அவர் பொதுவான ஒருவராக பாராளுமன்றத்தில் செயற்பட்டாலும்கூட ஆளும் கட்சியை சேர்ந்தவர் என்பதும் மறப்பதற்கில்லை.'

எனவே-அதனால் அவர் யாழ் செல்வதும், சென்று வந்து சொல்லும் கருத்துக்களும் அரசாங்கத்திற்கு மட்டுமல்லாமல் ஆளும் கட்சிக்கும் கையைப் பிசையும் நிலையை ஏற்படுத்தலாம்.

எல்லாவற்றையும் யோசித்துத்தான் இப்போது வேண்டாம் என்று ஜனாதிபதி தடுத்திருக்கிறார் என்று தோன்றுகிறது.

இனி எப்போது சபாநாயகர் போகக்கூடும் என்பது அரசியல் நிலவரங்களைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

தென் மாகாண தேர்தலில் வாக்காளரின் தீர்ப்பு திருப்தியளிப்பதாக அமைந்திருந்தால் ஆளும் கட்சியிடம் ஒரு தெம்பு இருந்திருக்கும்.

தன்னை நோக்கிவரும் ஒவ்வொரு பந்தையும் ஓங்கி அடித்து, எல்லைக் கோட்டை தாண்டவைக்க முடிகிறதோ இல்லையோ குறைந்த பட்சம் எதிர்த்தரப்பை நோக்கியாவது துரத்தியடிக்க முடிந்திருக்கும்.

ஆனால் இப்போது தற்காப்பு ஆட்டம் ஆடவேண்டிய நிலையில் இருக்கிறது ஆளும் கட்சி.

இந்த நிலையில் தனது தரப்பில் இருந்தே தற்காப்பு ஆட்டத்திற்கு ஆபத்து வருவதை அது விரும்பாது.

பெருகியிருக்கின்றன. எனவே கதவு திறப்பது என்பது உடனடியாக சுலபமாக நடந்துவிடக்கூடிய காரியமல்ல.

தற்போதைய நிலையில் அரசு புலிகளோடு பேசினால் புலிகளுக்கே அது சாதகமாக இருக்கும்.

இன்றைய நிலையில் அரசாங்கம் தனது இருப்பை பாதுகாக்க வேண்டிய நிலையில் இருக்கிறது.

பாதுகாக்க வேண்டிய நிலையில் புலிகளோடு பேசப்போனால், நீங்களும் ஒரு கைகொடுங்கள் என்று புலிகளிடம் அரசாங்கம் கேட்பது போலத்தான் இருக்கும்.

புலிகள் அரசாங்கத்தோடு உடன்பாட்டுக்கு வருவதென்றால் முதலில் கை கொடுத்து உதவுகிறோம். பின்னர் தீர்வுகள் பற்றிப் பேசலாம் என்று சொல்லுவார்கள் என்று நினைக்க முடியாது.

புலிகள் முன்வைக்கும் கோரிக்கைகளில் சிலவற்றை அரசாங்கம் நிறைவேற்றி வைக்க வேண்டியிருக்கும்.

அப்படியில்லாமல் ஒரு கட்டம் வரை பேசிவிட்டு , புலிகள் சரிப்பட்டு வருகிறார்கள் இல்லை என்று சொன்னால் அதனை வாக்காளர்கள் எந்தக் கோணத்தில் நோக்குவார்கள்?

எதிர்கட்சிகள் அதற்கு எவ்வாறான வியாக்கியானங்களை வெளியிடும்? என்பது பற்றியும் அரசாங்கம் யோசித்துப் பார்க்கும்.

கிணறு வெட்ட பூதம் வந்த கதையாக புலிகளோடு பேசப்போக அதுவே வாக்குகளைப் பறிகொடுக்கும் நிலைக்கு இட்டுச் சென்றால் என்ன செய்வது என்று ஆளும் கட்சி சிந்திக்கும்.

புலிகளின் கோரிக்கைகளில் முக்கிய மானவற்றை தீர்த்து வைத்து, இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும் கட்டத்திற்கு வந்துவிட்டதாக அரசாங்கம் சொல்ல முடியும். அது அடுத்து வரும் தேர்தல்களுக்கு ஒரு அரசியல் பலமல்லவா என்று கேட்கப்படுகிறது.

அடுத்த கதை என்று தடாலடியான முடிவு எடுக்க வேண்டும்.

அது சாத்தியம் இல்லை. தோல்வி வரும் என்று தேர்தல்களை கண்டு அரசு ஓடுகிறது என்ற கருத்து வளரும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு ஒரு கை பார்த்துவிட்டுத்தான் ஜனாதிபதி முறையை மாற்றுவது என்று அம்மையார் அவர்கள் தனது தள்ளாத வயதிலும் தளராமல் நிற்கிறார். ஜனாதிபதித் தேர்தலில் இருந்து தப்பிக்கொள்ள முன்கூட்டியே அந்த முறையை ஜனாதிபதி மாற்ற நினைக்கிறார் என்றும் அம்மையார் அவர்கள் கூறுகிறார்கள்.

ஆக, தற்போது புலிகளோடு அரசு பேச்சுக்களை ஆரம்பிப்பது என்பது அரசைப் பொறுத்தவரை புத்திசாலித்தனமான உத்தியாக கருதப்படமுடியாது.

இராணுவ நடவடிக்கைகளை தீவிரப் படுத்தி புலிகளை பலவீனமாக்கலாம் என்று அரசாங்கம் நினைக்கக்கூடும்.

ஆனால், தமிழ் மக்களது வாக்குகளும் அடுத்துவரும் தேர்தல்களில் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் முக்கிய பாத்திரம் வகிக்க இருப்பதால் முரட்டுத்தனமான இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் தயக்கம் காட்டப்பட்டே தீரும்.

எப்போதோ செய்திருக்க வேண்டிய

எக்ஸ்ரே ரிப்போர்ட் - நாரதர்

ஏற்கனவே அமைச்சர் தொண்டமானும் யாழ்ப்பாணம் போய் புலிகளோடு பேசப் போகிறேன் என்று அறிவித்திருந்தார்.

அதற்கென்ன வாருங்கள். பேசலாம் என்று புலிகள் அறிவித்திருந்தார்கள்.

உடனே தெற்கில் ஒரே புரளி. தொண்டமான் போய் புலிகளைச் சந்தித்தால் நாட்டுக்கே தோஷம் பிடித்துவிடும் என்பது மாதிரியான பிரச்சாரங்கள்.

அப்போது ஜனாதிபதியாக இருந்தவர் பிரேமா. அமைச்சர் தொண்டாவிடம் அவசரப்படாதீர்கள். ஆனாலும் முயற்சியையும் கைவிடாதீர்கள். எனினும் உடனே செல்வது நல்லதல்ல என்று சொல்லியிருக்கக்கூடும்.

எது எப்படியோ அமைச்சர் தொண்டாவின் வட விஜயம் தற்போதைக்கு என்றாலும் கைவிடப்பட்ட விஜயம் போலவே இருக்கிறது.

இதற்கிடையே சபாநாயகரின் விஜயம் பற்றிய பேச்சுக்கள்-செய்திகள் பிரபலமாகிவிட- சபாநாயகரின் அலுவலகம், இல்லம் என்று மாற்றி மாற்றி தொலைபேசி எடுத்து நிருபர்கள் ஒரே தொல்லை.

எப்போது போகிறீர்கள்? என்று கேட்டு உறுதிப்படுத்திவிடலாம் என்றால் சபாநாயகர் ஊரில் இல்லை.

எங்கே போயிருப்பார் என்று

அவர்கள் புலிகளோடு சமரசம் காண ஜனாதிபதி விரும்பினார் அல்லது சமரச ஏற்பாடுகளுக்கு ஆதரவு தந்தார் என்பது புதிய செய்தி.

சபாநாயகர் சொல்வதை நம்பாமலிருக்கக் கூடாது என்றால் ஜனாதிபதி தான் உற்சாகமாக இருப்பதை மக்களுக்குத் தெரியப்படுத்தவே சற்று உரத்த தொனியில் பேசினாரோ என்று ஐயப்படுவதில் அர்த்தமுண்டு.

சபாநாயகரின் விஜயத்திற்கு போக்குவரத்துப் பிரச்சனையே தடை என்பது பொருத்தமான காரணமாகப்படவில்லை.

தடுக்கக்கூடியவர்களே கைகொடுத்து வரவேற்கிறோம் என்றபின் போக்குவரத்தில் என்ன தடை இருக்க முடியும்?

ஆனால் தடை இருக்கிறது. அந்த தடைதான் குறுக்கே நிற்கிறது என்பது மெய். அது வழக்கமான தடைதான். அரசியல்தான் அந்தத்தடை.

தென் மாகாண தேர்தலில் தோல்வி கண்டபின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களே தெளிவாகக் குறிப்பிட்டிருப்பது போல ஆளும்கட்சிக்கு "தென் மாகாண வாக்காளர்கள் அபாய அறிவிப்பு கொடுத்திருக்கும்" நிலையில் இனி எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியையும் மிக கவனமாக எடுத்துவைக்க வேண்டிய நிலை அரசாங்கத்திற்கு. குறிப்பாக ஆளும் கட்சிக்கு!

தென் மாகாண சபையின் தோதல் முடிவுகளை அடுத்து இன்னொரு ஊகமும் சில விமர்சனப் புலிகளால் வெளியிடப் பட்டிருக்கிறது.

அரசு புலிகளோடு பேசக்கூடும் என்பது அவர்களது கணிப்பு.

இரு தரப்பும் அடிக்கடி உச்சரிக்கும் சில வார்த்தைகளை மட்டும் வைத்துக் கொண்டு அவர்கள் அப்படியொரு கணிப்புக்கு வருகிறார்கள்.

சமாதானக் கதவுகள் திறந்திருக்கிறது என்று இரு தரப்புமே சொல்கிறது.

எங்கே அந்தக் கதவுகள் இருக்கின்றன என்பது மட்டும் சொல்லுவோருக்கும் தெரியவில்லை; சொல்லக் கேட்போருக்கும் தெரியவில்லை.

ஜனாதிபதியையோ, அல்லது புலிகளின் தலைவரையோ யாரும் சுலபமாக சந்தித்துவிட முடியாது.

ஜனாதிபதி மாளிகை உள்ள கடற்பகுதியே தடை செய்யப்படவேண்டியிருக்கிறது.

புலிகளின் தலைவரது பாதுகாப்பு வேலிகள் மேலும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

அப்படியானால் என்ன அர்த்தம்?

இரு தரப்புத் தலைவர்களும் தமது வாசல் கதவுகளை இறுக மூடியுள்ளது மட்டுமல்லாமல், கதவுகளுக்கு வெளியேயும் பாதுகாப்பு அரண்களை விரிவாக்கி இறுக்கமாக்கி இருக்கிறார்கள்.

அந்தளவுக்கு விரோதங்கள் விரிவாகிப்

ஆனால் அது அததனை சுலபமலல. புலிகளுக்கும் அரசுக்கும் உடன்பாடு ஏற்பட்டால் அடுத்துவரும் தேர்தல்களில் குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கட்சிக்கு சாதகமாக முடியும்.

வடக்கு-கிழக்கில் புலிகளது ஆதரவு பெற்ற அணியொன்று தேர்தலில் நிற்குமானால் அமோக வெற்றி பெறக்கூடிய நிலைதான் தற்போது காணப்படுகிறது.

எனவே அரசு-புலிகள் உடன்பாடு வருவதை எதிர்க்கட்சிகள் பார்த்துக்கொண்டிருக்கப் போவதில்லை.

யார் குத்தியும் அரிசியாகட்டும் என்று பொது நோக்கு இங்கு இருந்திருக்குமானால் இனப்பிரச்சனை எப்போதே தீர்ந்திருக்கும்.

அவ்வாறான பொது நோக்கை, அதுவும் தேர்தலில் வெற்றி பெற்றுவிடலாம் என்ற எதிர்பார்ப்போடு உள்ள நேரத்தில்போய் எதிர்க்கட்சிகளிடம் எதிர்பார்க்கக்கூடாது.

நாம் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணுமாறு கூறினோமே தவிர புலிகளிடம் அதிகாரத்தை கொடுக்கச் சொல்லவில்லை. அரசாங்கம் நாட்டின் ஒரு பகுதியை புலிகளுக்கு தானம் கொடுத்துவிட்டது என்று எதிர்க்கட்சிகள் உடனே சுருதியை மாற்றிக் கொண்டு பேசத் தொடங்கலாம்.

இல்லாவிட்டால் ஒரு வழி இருக்ககிறது. தேர்தல்களை எல்லாம் ஒரேயடியாக ஒத்தி வைத்துவிட்டு, முதல் பிரச்சனை இனப் பிரச்சனை, அதற்கு தீர்வு கண்டு விட்டுத்தான்

"தனது தரப்பில் இருந்தே தற்காப்பு ஆட்டத்திற்கு ஆபத்து வருவதை அரசு விரும்பாது"

முயற்சிகளை காலம் தள்ளிப்போட்டதால் இப்போது குறுகிய கால அவகாசத்திற்குள் நின்று முடியைப் பிய்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

அரசியலில் எதை எப்போது தள்ளி வைக்கவேண்டும். எதனை உடனே எடுத்து தீர்வுக்கு வரவேண்டும் என்பது பிரதானமானது.

புண் என்றால்கூட மருந்து போட்டு கட்டுப்போட்டு வலியை குறைத்துவிட்டதாகக் கூறலாம். ஆனால் புற்று நோயை சற்று விட்டுப் பார்ப்போமே என்றிருக்க முடியுமா?

ஆனால் இருந்துவிட்டார்கள். அதுதான் இன்று பூதாகரமாகி நிற்கிறது.

அதிரடி அய்யாத்துரை



அதிகாரம் உள்ள கட்சிக்குள் முணுமுணுப்புகள் கொஞ்சம் அதிகமாகியிருக்கிற மாதிரித்தான் தெரியுது. செயலர் விட்ட அறிக்கைகூட மறைந்தவரை மறந்தது பிழை எண்ட மாதிரித்தான் மெல்லக் குத்திக் காட்டியிருக்குது.

இப்பவே எங்கடை வடக்கு-கிழக்கு வெகுஜன பிரதிநிதியள் சிலருக்கு அடுத்த முறை நெத்தியடிதான் கிடைக்கும் எண்டு தெரிஞ்சு போச்சாம். அதாலை தேசியக் கட்சியளின்ரை தேசியப் பட்டியல் பக்கம் கண் போயிருக்குது எண்டு ஒரு கதை.

புதுக் கட்சி ஒண்டு துவக்க வேணும் எண்டு சிலர் ஒற்றைக் காலிலை நிக்கினம். ரெண்டு எழுத்தாரின்ரை ஆதரவும் தங்களுக்கு இருக்கும் எண்ட மாதிரியும் சொல்லுகினம். ஏற்கனவே அபிவிருத்தி நிறுவனம் எண்டு வேலை செய்யிற சிலர்தான் அந்த முயற்சியிலை பின்னுக்கு நிண்டு இயங்குறதா தெரியுது பாருங்கோ. எல்லாருக்கும் கட்சி நடத்த ஆசை. ஆனால் சனத்தின்ரை உச்சி குளிரப் பண்ணத்தான் ஆட்கள் இல்லை.

கொழும்பிலை புதுவருச வியாபாரங்கள் கலாதியா நடந்துகொண்டிருக்குது. தடக்கி விழுந்தால் தமிழ் ஆட்களிலைதான் விழவேணும். வடக்கு-கிழக்கிலை புது வருசம் களைகட்டுதோ இல்லையோ, அங்கையிருந்து வந்திருக்கிற எங்கடை சனம் களைப்பே இல்லாமல் வருசக் கடைகளுக்கு ஏறி இறங்கிக் கொண்டிருக்கினம்.

மலையக தனித்துவத் தலைவர் தென் தேர்தல் பிரச்சாரங்களுக்கு போய் எட்டிக்கூடிப் பார்க்கேல்லை. ஆனால் அடுத்தவர் போய் பேசினவர். அதைப் பற்றி தனித்துவத் தலைவரிடம் யாரோ கேட்டவையாம்.

"அவர் போய் பேசினா தோல்வி வரும் எண்டு தெரிஞ்சுதான் பேசாமல் இருந்தனான்" எண்டாராம் தனித்துவ தலைவர். அப்படியொரு பேச்சு அரசியல் வட்டாரங்களிலை உலவுது பாருங்கோ.

தமிழ் பத்திரிகை நிருபர் ஒருவருக்கு மூன்றுமாத தடுப்புக்காவல். யாரும் கவனிச்சதா தெரியேல்லை. அவர் உள்ளுக்கை இருந்து யோகாசனம் செய்யிறாராம். அதைப் பார்த்த காவலர்கள் இவர் அப்பாவிதான். நாங்கள் என்ன செய்யிறது எண்டு பேசுறதாய் கேள்வி.

வடக்கிலை ரெண்டு எழுத்துக்காரர் தனிக்காசு புழக்கத்திலை விடப்போகினம். இப்ப பாருங்கோ கிளாலியிலை மட்டும்தான் கியூ நிக்குது. காசு புழக்கத்திற்கு வந்தா வெளியிலே வர முந்தி அதைக் குடுத்து இலங்கைக் காசு மாத்திக் கொண்டு வரவும் சனம் கியுவிலை நிக்க வேணும். எங்கட சனம் [illegible]ருக்க மட்டும்தானே பழக்கப்படுதுகள்.

கிழக்கிலை முக்கிய பொறுப்பிலை இருந்தவரை தூக்கி வேறை இடத்திலை போட நினைச்சது அரசியல் விளையாட்டுத்தான் எண்டமாதிரித்தான் கதைக்கினம். அவர் தன்ரை உறவுக்கார பிரதிநிதி ஒருவருக்கு சார்பாய் நடக்கிறதா மற்றக் கட்சிக்காரர் சொல்லுகினமாம்.

எழுத்தாளர் பாலகுமாரன் எழுதின கதை ஒண்டு வாசிக்க முடிஞ்சுது. அதில் இடையிலை ஒரு கவிதை. துக்கத்தை புதுக்கவிதை முறையிலை சுள்ளென்று மனசை தாக்குற மாதிரி எழுதியிருக்கிறார். பாலகுமாரன் கதை எழுத முதல் கவிதைதான் எழுதினார்.

"கவிழ்ந்த இருட்டில் மறைந்து கிடந்த
உயரத் தென்னை நெற்றொன்று
வீசிய காற்றில் பிடிப்பைத் தளர்த்தி
மண்ணில் விழ்ந்தது சொத்தென்று.
இருளில் கையை விரித்துத் தடவி
நெற்றைத் தேடிய ஐயங்கார்
திரும்பக் காயுடன் என்னைக் கடக்க
குனிந்து கேட்டார் "தூங்கலையா"
பதிலாய் மெல்லிய சிரிப்பைக் கொடுப்பினும்
மனசோ சொல்லும் வெகு உரக்க,
நெற்றுத் தென்னை கழன்றதற்கே
தூக்கம் போச்சே உங்களுக்கு
நெஞ்சே கழன்று வீழ்ந்து கிடக்க
தூக்கம் எங்கே சொல்லுங்கோ."

ஹெலிகாப்டர்கள் துரத்துகின்றன

கிளர்ச்சியாளர்களோ வளருகிறார்கள்

என்ன செய்யலாம்? எகிப்து யோசிக்கிறது!

அரசின் ஆயுதப்படை வீரர்களுக்கும் கிளர்ச்சியாளர்களுக்குமிடையில் மோதல்கள் ஏற்படுவது, தொடர்ந்து அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவது, அகதிகளாக மக்கள் வெளியேறுவது, அல்லற்படுவது.... இவை இன்றைய உலகில் உள்ள பெரும்பாலான நாடுகளிலும் வழக்கமான நடைமுறையாகி விட்டன.

இப்பொழுது எகிப்தும் கிளர்ச்சியாளர்களின் சவால்களை எதிர்நோக்கி பெரும் யுத்தக் களரியாக மாறிக் கொண்டு வருகிறது.

மேற்கத்தைய நாகரிகத்தைப் பின்பற்றி எகிப்து வளர்ந்து வருவதை விரும்பாத இஸ்லாமியத் தீவிரவாதக் கிளர்ச்சியாளர்கள் வன்முறை நடவடிக்கைகளில் இறங்கி விட்டனர்.

இஸ்லாமிய மதக் கோட்பாடுகளுக் கமைவான ஆட்சி முறையினை எகிப்தில் நிறுவவேண்டுமென்பதே இஸ்லாமியத் தீவிரவாதிகளின் கோரிக்கை.

முன்னர் அடிக்கடி சிறு சிறு மோதல்களுடன் மட்டுமே இருந்த இத்தீவிரவாதிகள் இப்போது தங்கள் கிளர்ச்சிகளை நவீனரக ஆயுதங்களுடன் நடத்த ஆரம்பித்துவிட்டனர்.

துப்பாக்கி வேட்டுகளும் குண்டு வெடிப்புகளும் பல உயிர்களைப் பலி வாங்குகின்றன. ஆயுதப் படையினரும் தங்கள் எதிர்த் தாக்குதல்களை முடுக்கி விட்டுள்ளனர்.

தரை மார்க்கமாகவும் ஆகாய மார்க்கமாகவும் தாக்குதல்கள் நடை பெறுகின்றன.

தலைநகரான கெய்ரோவிலிருந்து தெற்கே 350 கிலோமீட்டர் தொலைவிலுள்ள சிட்ஃபா என்ற கிராமத்தில், கடந்த மாத பிற்பகுதியில் ஒரு பொலிஸ் வாகனத்தை மடக்கிய கிளர்ச்சியாளர்கள் 5 பொலிசாரைக் கொன்றதுடன் 7 பேரைக் காயப்படுத்தியுள்ளனர்.

கரும்புச் சாகுபடி செய்யப்படும் பிரதேசமான இங்கு குன்றுகளும் காணப்படுகின்றன. இங்கு ஒளிந்திருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கு முடிவு கட்ட கெய்ரோவிலிருந்து 3000 கொமாண்டோக்களை அரசாங்கம் ஏவியிருக்கிறது.

ஹெலிக்கொப்டர்களின் உதவியுடன் தேடுதல் வேட்டை நடைபெற்றது. கிளர்ச்சியாளர்கள் 6 பேர் கொல்லப் பட்டுள்ளனர். நூற்றுக் கணக்கானோர் கைதாகியுள்ளனர்.

எகிப்துக்கு ஏராளமான அந்நியச் செலாவணியைத் தேடித்தருவது உல்லாசப் பயணத்துறையாகும். கடந்த காலங்களில் பிறநாட்டு உல்லாசப் பயணிகளில் நால்வர் கொல்லப்பட்டதுடன் 31 பேர்- கிளர்ச்சியாளர்களின் தாக்குதலால் படுகாயமடைந்துள்ளனர். இதன் பின்னர் உல்லாசப் பயணத்துறையினால் பெறப்படும் வருமானத்தில் பெரும் வீழ்ச்சி காணப்படுகிறது.

எகிப்திலுள்ள சகல அரசியற் கட்சிகளையும் ஒன்றுபடுத்தி, பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க ஒத்துழைப்புத் தருமாறு ஜனாதிபதி முபராக் கேட்டுள்ளார். ஆனால் இஸ்லாமியத் தீவிரவாத இயக்கங்களில் ஒன்றான இஸ்லாமிய சகோதரத்துவம் என்ற இயக்கத்தை அழைத்து அதன் கருத்தையும் கேட்டறிய முபராக் முயற்சி எடுக்கவில்லை. நிலமையை மேலும் சிக்கலாக்குவதாகவே இது முடியும் என்று நடுநிலையாளர்கள் கூறுகின்றனர். "அதிகாரத்தை பரவலாக் குவதுடன் இதுகால வரை ஒதுக்கப்பட்டும் புறக்கணிக்கப்பட்டும் வந்தவர்களை அணைத்துக்கொள்வதன் மூலம் நிலமை மோசமடையாமல் பார்த்துக்கொள்ள முடியும்" என்பதே இவர்களின் கருத்தாகும்.

எகிப்திய வீதியில் கிளர்ச்சியாளர்களை நோக்கி பொலிசின் கண்ணீர்ப்புகை

மொஸாம்பிக்கில் ஆயுத ஒப்படைப்பு ஆரம்பம்!

கிளர்ச்சித் தலைவரின் வீட்டுக்கதவில் சமாதான வாசகம்!!

தென் கிழக்கு ஆபிரிக்க நாடான மொஸாம்பிக்கில் அமைதி திரும்பி விட்டது. 16 ஆண்டுகாலம் நீடித்து, ஏறத்தாழ 10 இலட்சம் மக்களின் உயிரைப் பலிவாங்கிய உள்நாட்டுப் போர் அந்நாட்டை விட்டு விலகியதும் அந்த நாட்டில் இருந்து வெளியேறிய 17 இலட்சம் அகதிகளும் நாடு திரும்புகின்றனர்.

ஐ.நா.அகதிகளுக்கான உயர்ஸ்தானிக நிறுவனத்தின் உதவியுடன் வந்து சேரும் அகதிகள் தங்கள் சொந்த மண்ணில்- பிறந்த பொன்னாட்டில் கால் பதித்ததும் ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றனர். ஆடிப்பாடி மகிழ்கின்றனர்.

ஒரு வருடத்துக்கு முன்னரே வந்து குடியேறியவர்கள் சிறுசிறு குடிசைகளை அமைத்து, மண் திருத்தி பயிரும் விதைத்து இன்று அறுவடைப் பயனும் அடைந்த களிப்போடு இன்று வந்து சேரும் மக்களை வரவேற்கின்றனர்.

தங்கள் சொந்தக் கழனியிலே-தங்கள் கைகளால் விதைத்து இறுதியில் அடைந்த பயனை, பூரிப்புடன் இன்று வருவோருக்கும் பகிர்ந்தளித்து மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தில் மூழ்குகின்றனர்.

உள்நாட்டுப்போர் மட்டுமல்ல, இயற்கையும் மொஸாம்பிக் மக்களை கடந்த காலங்களில் கடும் சோதனைக்குள் உட்படுத்திவிட்டது. பல வருடங்கள் பருவ மழை பொய்த்தமையினாலும் பட்டினிச் சாவுகளும் அதிகரித்தன. அயல் நாடுகளான மாலாவி, மற்றும் சுவாஸிலாந்து ஆகிய நாடுகளில் அகதிகள் சென்று குடியேறினர். எதிர்வரும் ஒக்டோபரில் ஜனநாயக முறையிலான பொதுத் தேர்தல் நடைபெற விருக்கிறது. இதற்கிடையில் வெளியேறிய அகதிகள் அனைவரும் நாடு திரும்பி விடுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களும் தங்களுக்கான பிரதிநிதியை, பிரதிநிதிகள் சபைக்குத் தேர்வு செய்து அனுப்பும் உரிமையைப் பெறுவார்கள்.

உள்நாட்டுப் போரில் ஈடுபட்ட ஆயுதந்தாங்கிய கிளர்ச்சியாளர்களை அடக்குவதற்காகவும் அழிப்பதற்காகவும் அரசாங்கத்தால் சேர்க்கப்பட்ட ஆயுதப் படைப்பிரிவு- (60,000 பேர் கொண்ட படை) கலைக்கப்படுகிறது.

கிளர்ச்சிகளில் ஈடுபட்ட 'ரெனாமோ' இயக்கத்தைச் சேர்ந்த 19,000 வீரர்களும் தங்கள் ஆயுதங்களை ஒப்படைக்கத் தொடங்கிவிட்டனர். ஐ.நா. அமைதிப் படையினர் இந்த ஆயுதக் களைவினை மேற்பார்வையிடுகின்றனர்.

மொஸாம்பிக் நாட்டில் கிளர்ச்சிகளுக்கு தலைமை தாங்கியவர்களுள் முக்கியமான கிளர்ச்சியாளர்களின் தலைவர் என்று கணிக்கப்பட்ட நொவெல்லா றொமாவோ 1983ல் தனது இருமனைவியருடன் இரு பிள்ளைகளுடன் சுவாஸிலாந்தில் அடைக்கலம் புகுந்தார்.

1992 இறுதியில் ஏற்படுத்தப்பட்ட சமாதான உடன் படிக்கையைத் தொடர்ந்து அயுதங்களைக் களைந்து மொஸாம்பிக் திரும்பியிருக்கிறார்.

சுவாஸிலாந்தில் அகதியாகத் தங்கியிருந்தபோது அவர் அமைத்திருந்த அகதி இல்லத்தின் முன்புறக் கதவினை தன்னுடன் கொண்டு வந்து, தனது புதிய வீட்டின் முன்புறம் பொருத்தியிருக்கிறார்.

அந்தக் கதவில் காணப்படும் வாசகம்- **"நான் எனது ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டேன்..... நீங்கள்!"** ●



> ❝நான் எனது ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டேன்... நீங்கள்!❞

இப்படியும் ஒரு விமான சேவை!



போர் நடைபெறும் பகுதிகளில் விமானங்கள் குண்டு போடும்.

அல்லது அறிவித்தல் பிரசுரங்களை போடும். சமயத்தில் உணவு மற்றும் நிவாரணப் பொருட்களையும் விமானங்கள் போடுவதுண்டு.

உள்நாட்டுப்போரில் சிக்கித் தவிக்கும் பொஸ்னியாவில் உணவுப் பொருட்களை விமானங்கள் மூலமாக போட்டுவரும் ஐக்கிய நாடுகள் சபை இன்னுமொரு பொருளையும் போடுவதற்கு முடிவு செய்துள்ளது.

அது குடும்பக் கட்டுப்பாட்டுக்கான ஆணுறைகள்.

ஐ.நா இந்த முடிவை செய்தவுடன் தென் கொரியா உடனே ஒரு கப்பலை தயார்படுத்தி ஒரு இலட்சம் குடும்பக் கட்டுப்பாட்டு 'கொண்டம்'களை அனுப்பி வைத்துள்ளது.

குடும்பக் கட்டுப்பாடு பயங்கரமாக பாதிக்கப்பட்டுவிட்டதாம். பொஸ்னியாவின் கள்ளச் சந்தையில் 'கொண்டம்'கள் விலை உயர்ந்துவிட்டதால் யாரும் வாங்குவதில்லை. அதனால்தான் இந்த ஏற்பாடு.

இனிமேல் பொஸ்னியாவின் வானத்தில் இருந்து உணவுப் பொருட்களை மட்டுமல்லாமல், கொண்டம்களையும் விமானங்கள் பொழியும். குடும்பத்தைக் காக்க உணவு, குடும்பக்கட்டுப்பாட்டுக்கு உறைகள்.

ஸ்போர்ட்ஸ்

மீண்டும் விளையாட மியன்டாட் விருப்பம்!

"என்னால் முடியாது என்பது பொய்"



பாகிஸ்தானிய கிரிக்கெட்டின் இரு தூண்களில் ஒரு தூணான ஜாவெட் மியாண்டாட் பாகிஸ்தான் அணியிலிருந்து நீக்கப்பட்டது பாகிஸ்தானில் ஒரு உள்நாட்டுக் குழப்பத்தையே உண்டு பண்ணியது. இப்போதும் அது அணையாத புகையாகவே புகைந்து கொண்டிருக்கிறது.

பாகிஸ்தான் அணியின் பங்களாதேஷ் மற்றும் நியூசிலாந்து சுற்றுப் பயணத்திற்கு ஜாவெட் மியாண்டாட்டை நீக்கியது அட்ஹாக் கமிட்டி என்றாலும் அதற்கு முழுப் பொறுப்பு பாகிஸ்தானிய கிரிக்கெட்டின் மற்றொரு தூணான இம்ரான்கான் மற்றும் அவரது சிஷ்யர் வாசிம் அக்ரம் ஆகிய இருவருமே என்பது ஜாவெட் மியாண்டாட்டின் ஆணித்தரமான நம்பிக்கை.

ஜாவெட் மியாண்டாட்டின் நீக்கத்திற்கு அப்போதைய உதவிக் கப்டன் வக்கார் யூனுஸ் தலைமையில் ஒன்பது வீரர்கள் எதிர்ப்பு தெரிவித்துக் கிளர்ச்சி செய்தாலும் கப்டன் பொறுப்பிலிருந்து வாசிம் அக்ரம் தூக்கப்பட்டு சலீம் மாலிக்கிற்கு அந்தப் பதவி கொடுக்கப்பட்டதுடன் மியாண்டாட்டை அணியில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை கிடப்பில் போட்டு விட்டு பாகிஸ்தான் அணிக்காக நாட்டுப் பற்றைக் காட்டி விட்டார்கள்.

இதனால் தனது நீக்கத்திற்கு இது காரணம், இவர் காரணம் என்று சாடிக் கொண்டிருந்த முன்னணி கிரிக்கெட் வீரரான ஜாவெட் மியாண்டாட்டும் இறங்கி வந்து விட்டார். அதை அவர் வெளிப்படையாக பத்திரிகையாளர்களிடமும் தெரிவித்தார்.

"சலீம் மலிக் கப்டன்ஷிப்புக்குக் கீழ் நான் விளையாட மாட்டேன் ஏன்று நினைப்பது தவறு. அப்படியொரு தற்பெருமை பிரச்சனை எனக்கு இல்லை. ஏனென்றால் சலீம் மாலிக் ஒரு மூத்த வீரர், மேலும் நாங்கள் இருவரும் பல வருடங்கள் பாகிஸ்தான் அணிக்காகவும், ஹபீப் வங்கி அணிக்காகவும் இணைந்து விளையாடியுள்ளோம்.

"உள்நாட்டு கிரிக்கெட் போட்டிகளில் ஹபீப் வங்கியின் கப்டனாக சலீம் மாலிக் இருக்கும்போது அவருக்குக் கீழ் விளையாடிய போது எனக்கு எந்தப் பிரச்சனையும் எழுந்ததில்லை. இன்னும் சொல்லப் போனால் ஹபீப் வங்கியின் கப்டன் பொறுப்பை எடுத்துக் கொள்ள சலீம் மாலிக்கைக் கேட்டுக் கொண்டவனே நான்தான். எங்களுக்குள் எந்தக் கருத்து வேறுபாடும் இருந்ததில்லை.

பாகிஸ்தான் அணியின் கப்டனாக இருக்க அனைத்துத் தகுதிகளும் எனக்கு இருந்தும் தேசிய நலன் கருதி பல்வேறு கப்டன்களின் கீழ் நான் விளையாடியுள்ளேன். அதே போல் இப்போது விளையாடுவதில் எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை.

இப்போதும் இந்த சீசனில் விளையாட நான் மிகவும் ஆர்வமாக உள்ளேன். அதற்காக கடுமையான பயிற்சிகளையும் மேற்கொண்டு வருகிறேன். பாகிஸ்தானுக்காக விளையாட என்னை மீண்டும் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அட்ஹாக் கமிட்டி தேர்வு செய்யும் என்ற நம்பிக்கையை நான் இழந்து விடவில்லை.

பாகிஸ்தானிய பாராளுமன்றத்தில் பேசிய விளையாட்டு அமைச்சர், நான் தற்போது ஃபோமில் இல்லாததால் தான் அணியிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாகக் கருத்துத் தெரிவித்துள்ளார். இதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. இது ஒரு நிரந்தர குறையும் அல்ல என்பதால் அட்ஹாக் கமிட்டி மீண்டும் அழைத்தால் நாட்டுக்காக விளையாட நான் தயாராகவே இருக்கிறேன்," என்று கூறியுள்ளார் மியாண்டாட்.

மியாண்டாட் 124 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 8832 ரன்களைக் குவித்துள்ளார். 23 சதங்கள் உட்பட சராசரியாக 52.57 ரன்களைப் பெற்றுள்ளார். பாகிஸ்தானின் முன்னாள் கப்டனாகவும் இருந்துள்ள 36 வயது மியாண்டாட் 10 ஆயிரம் டெஸ்ட் ரன்களை எட்டவேண்டும் என்ற இலட்சியத்துடன் இருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ●

பிரபாகரர் இல்லாதது பேரிழப்பு! அசாருதீன் வருத்தம் சரியானது!!

அண்மையில் நியூசிலாந்துக்குச் சென்ற இந்திய கிரிக்கெட் அணியில் இடம் பெற்றிருந்த மனோஜ் பிரபாகர் விளையாடாமல் நாடு திரும்பினார்.

அவரது காலில் ஏற்பட்டிருந்த காயம் காரணமாக கப்டன் அசாருதீன் அவரை விளையாட அனுமதிக்கவில்லை.

அது பற்றிய அசாருதீன் கூறியதாவது, "பிரபாகருக்கு ஏற்பட்டுள்ள காயம் சிறிய காயம்தான். அது பெரிதாகிவிடக்கூடாது. அதனால்தான் அவரை நாங்கள் விளையாட அனுமதிக்கவில்லை. இதுபோல முன்பு இம்ரான் தனக்கு ஏற்பட்ட காயத்தை கவனிக்காமல் விட்டதால் இரண்டு ஆண்டுகள் ஆட முடியாமல் போனது.

"பிரபாகர் இல்லாதது இரண்டு சிறந்த வீரர்கள் இல்லாதது போன்று வருத்தமாகத்தான் இருக்கிறது." என்று கூறியிருந்தார் அசாருதீன்.

இந்தியா-நியூசிலாந்து நாடுகளுக்கிடையே நடைபெற்ற ஒரு தினப் போட்டித் தொடர் வெற்றி தோல்வியின்றி முடிந்துள்ளது. இறுதியாக நடைபெற்ற ஒரு தினப் போட்டியில் அனில் கும்ளே மட்டுமே வெகு சிறப்பாக பந்து வீசினார். மனோஜ் பிரபாகர் இருந்திருந்தால் ஒருவேளை முடிவு வேறு விதமாக இருந்திருக்கக்கூடும்.

நியூசிலாந்தில் டெஸ்ட் போட்டி நடந்த ஆடுகளம் விசித்திரமாக இருந்ததாகவும் இந்திய அணி கப்டன் அசாருதீன் கூறியிருந்தார்.

இன்னொரு செய்தியும் உண்டு. மனோஜ் பிரபாகர் இந்தியா திரும்புவதற்கு முன் நியூசிலாந்தில் உள்ள துனிடன் நகரில் இந்திய கிரிக்கெட் அணிக்கும், நியூசிலாந்து வளரும் வீரர்கள் அணிக்கும் இடையில் நடைபெற்ற மூன்றுநாள் ஆட்டத்தில் மனோஜ் பிரபாகர் 147 ஓட்டங்கள் எடுத்திருந்தார். சஞ்சய் மஞ்சுரேக்கர் 134 ரன்கள் எடுத்தார். போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருந்தது. சதம் அடித்த திருப்தியோடுதான் பிரபாகர் இந்தியா திரும்பினார். ●

அலசுவது—இராஜதந்திரி

நெருங்கிவரும் தேர்தல்களுக்கு முன்னர் —
ஆளுங்கட்சி திருந்திக்கொள்ள கால அவகாசம் போதுமா?

யுத்த நீடிப்பை நிராகரித்துள்ள தென் மாகாண தேர்தல் முடிவுகள்!

சீனாவிடமிருந்து நவீன போர்க் கப்பல்களை வாங்குவது தொடர்பாக கடற்படைத் தளபதி மொஹான் சமரசேகரா சீன ஆயுத வியாபாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

அதேவேளை இராணுவத்துக்கு மேலும் சுமார் ஐயாயிரம் பேரைத் திரட்டுவதற்கான பணிகளையும் இராணுவத் தலைமைப்பீடம் முன்னெடுத்துள்ளது.

இவைதவிர இராணுவத் தலைமைப் பீடத்திலும் பல மாற்றங்கள் செய்யப்படவிருப்பதாகவும் உயரதிகாரிகளின் பொறுப்புக்கள் விஸ்தரிக்கப்பட்டு அவர்களின் கீழ் பல படையணிகள் யுத்தப் பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்படவிருக்கின்றனவென்றும் இராணுவ வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யுத்த தளபாடங்களின் கொள்வனவு, படையணிகளின் அதிகரிப்பு என்பன குறித்த தகவல்கள், யாழ்குடாநாடு மீதான இராணுவ நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படவிருப்பதனையே புலப்படுத்துவனவாக இருக்கின்றன.

கடந்த ஒரு தசாப்த காலத்தில் இலங்கையின் பாதுகாப்புப் படைகள், அவற்றின் சக்திக்கு மீறிய வகையில் விரிவு பெற்றுள்ளதையே அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

அயல் நாடுகளான இந்தியாவும், பாகிஸ்தானும் தத்தமது பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் அடிக்கடி போர்த்தளபாடங்களை வாங்குவதனையும், எல்லைப் புறங்களில் படைகளைக் குவிப்பதனையும் வழக்கமாகக் கொண்டுள்ளன.

ஆனால் இந்தியாவும், பாகிஸ்தானும் இரு வேறு நாடுகளாகும். அவற்றின் எல்லைப் புறங்கள் அரபுக் கடலிலிருந்து இமயமலைச் சாரல்வரை நீண்டிருக்கக் காணப்படுகின்றன.

எனவே இருவேறு நாடுகள் என்ற வகையில் இந்தியாவும், பாகிஸ்தானும் தத்தமது பிரதேசங்களின் அரசியல் சூழ்நிலைகள், மற்றும் சர்வதேச நிலவரங்கள் என்பவற்றுக்கமைய தத்தமது பாதுகாப்பு நிலவரங்களில் அவ்வப்போது தீவிர கவனஞ் செலுத்தும் நிர்ப்பந்தத்துக்குள்ளாகின்றன.

ஆனால் இலங்கையில் காணப்படும் நிலைமை முற்றிலும் வித்தியாசமானதாகவே இருக்கின்றது. அயல் நாடுகள் எதனுடனும் இலங்கை இராணுவ ரீதியிலான பூசல்களுக்கு உட்பட்டிருக்காத போதிலும், உள்நாட்டில் நிலவும் ஆயுதப் போராட்டத்தைக் கையாளுவதற்கு, ஒரு பாரிய இராணுவ விஸ்தரிப்பை மேற்கொண்டதாகவே இலங்கை தற்போது விளங்கியிருக்கின்றது.


ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா

1983ம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு தமிழ் ஆயுதக் குழுக்கள் இலங்கையின் ஆயுதப்படையினருக்கெதிராகப் போராட்டங்களை ஆரம்பித்திருந்தன.

ஆனால் 1987ம் ஆண்டின் பின்னர் நிலைமை வேறு. தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர ஏனைய அனைத்து இயக்கங்களும் படையினருக்கெதிரான போராட்டத்தைக் கைவிட்டிருந்தன.

இருந்த போதிலும் தற்போது படையினரை எதிர்த்து தனியொரு ஆயுதக் குழுவாக இயங்கிவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர், மிகப் பலம் பொருந்திய போராட்டக் குழுவினராகவே இருக்கக் காணப்படுகின்றனர்.

இந்திய மேஜர் ஜெனரலான அசோக் மேத்தா என்பவர்கூட அண்மையில் தாம் எழுதிய கட்டுரையொன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்த நடவடிக்கைகளைப் பாராட்டியிருந்தார். கூடவே அவர்கள் உலகில் ஒரு தலைசிறந்த போராட்டக் குழுவாக இயங்கி வருகின்றனர் எனவும் மேஜர் ஜெனரல் மேத்தா தமது கட்டுரையில் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

புலிகள் உலகில் ஒரு தலைசிறந்த போராட்டக் குழுவாகக் காணப்படலாம். மறுபுறத்தே அவர்களை எதிர்கொள்ளும் பொருட்டு இலங்கையின் ஆயுதப் படையினரும் தமது ஆட்பலம், ஆயுதபலம் என்பவற்றைப் பெருக்கிக் கொள்ளலாம்.

ஆனால் புலிகளின் பலம், மற்றும் ஆயுதப் படையினரின் வளர்ச்சி என்பன எந்தவிதத்திலும் சமாதான விரும்பிகளைக் கவராதவையாகவே இருக்கக் காணப்படுகின்றன.

அண்மையில் நடந்து முடிந்த தென்மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் கூட தென்னிலங்கையர்கள் வடக்கு-கிழக்கில் யுத்த நிலமை நீடிப்பதை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதனையே வெளிப்படுத்துவனவாக இருந்தன.

சிறுபான்மை, பெரும்பான்மை இன வேறுபாடுகள் குறித்து ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க பிரஸ்தாபித்து வந்தார்.

இந்த வேறுபாடுகள் குறித்த தமது கருத்துக்கள் தம்மை பெரும்பான்மை இனத்தவரிடையே ஒரு 'ஹீரோ'வாக மாற்றிவிடும் என்ற அபிப்பிராயத்தையே திரு.டி.பி.விஜேதுங்க கொண்டிருந்தார்.

வடக்கு-கிழக்குப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கான அங்கீகாரமாக தென்மாகாணத்தில் தமது கட்சியினரை வெற்றி பெறச் செய்யும்படி திரு.விஜேதுங்க கோரிக்கை விடுத்திருந்தார்.

“அரசியல் ரீதியாகவே வடக்கு-கிழக்கு பிரச்னை தீர்க்கப்பட வேண்டும்.”

திரு மதி. சந்திரிக்கா

ஆனால் தென் மாகாணசபைத் தேர்தல்கள் ஜனாதிபதியின் நிலைப்பாடு, தவறானதென்பதனையே புலப்படுத்தியுள்ளன. வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கான அங்கீகாரமாக தென்மாகாணத்தில் தமது கட்சியினரை வெற்றி பெறச் செய்யும்படி திரு.விஜேதுங்க கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆயினும் மக்கள் அரசாங்கத்தின் வடக்கு-கிழக்குப் பிரச்சனை குறித்த அணுகுமுறைகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதனைத் தெரிவிப்பது போலவே தென்மாகாணத் தேர்தல் முடிவுகள் விளங்கியிருந்தன.

வடக்கு-கிழக்குப் பிரச்னையை ஆயுதபலம், ஆட்பலம் என்பனவற்றைக் கொண்டு அணுகுவதிலேயே அரசு ஆர்வங்காட்டி வருகின்றது.

கோடிக்கணக்கான ரூபாய்கள் பண விரயமாக வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கெனச் செலவிடப்பட்டுள்ளன. அத்துடன் ஆயிரக் கணக்கான உயிர்களும் இதுவரை இந்த யுத்தத்திற்கென 'தாரை வார்க்கப்பட்டுள்ளன.'

எதிர்காலத்தில் வடக்கு-கிழக்கு பிரச்னை குறித்து பணத்தையும் உயிரையும் விரயமாக்க மக்கள் தயாராக இல்லை என்பதனையே தென் மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் எடுத்தியம்பியுள்ளன.

தென் மாகாண சபைத் தேர்தலின் போது மக்கள் கூட்டணியின் சார்பில் பிரசாரங்களை முன்னெடுத்திருந்த திருமதி.சந்திரிக்கா குமாரணதுங்க பண்டாரநாயக்கா வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்து ஒரு தெளிவான கண்ணோட்டத்தை முன்வைத்திருந்தார்.

அரசியல் ரீதியாகவே வடக்கு-கிழக்குப் பிரச்னை தீர்க்கப்படவேண்டும் என்று அவர் தமது பிரசாரக் கூட்டங்களின் போது குறிப்பிட்டு வந்தார்.

தென் மாகாணம் அரசியல் ரீதியாக கடந்த காலங்களில் பல்வேறு சவால்களையும் எதிர்நோக்கிய ஒரு பிரதேசமாகும்.

ஜே.வி.பி.தீவிரவாதப் பிரச்னையின் போது இம் மாகாணம் பல்வேறு வகையான நெருக்கடிகளையும் எதிர்நோக்கியிருந்தது. ஆயினும் நாட்டின் தேசிய அரசியலைப் பொறுத்தவரை ஆட்சியிலிருப்போரைவிட தென் மாகாணத்தவர்கள் நாட்டின் பல்வேறு பிரச்னைகள் குறித்தும் தெளிவான கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளார்கள் என்பதனையே மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டியுள்ளன.

காலித் துறைமுக அபிவிருத்தி, கதிர்காமம் வரையிலான புகையிரதப் பாதை விஸ்தரிப்பு உட்பட பல்வேறு திட்டங்கள் பற்றியும் அரச தரப்பினர் மாகாணசபைத் தேர்தல் மேடைகளில் முழங்கி வந்தனர். இசை நிகழ்ச்சிகளை நடத்தியும், கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து கூட்டங்களை ஏற்பாடு செய்தும் தேர்தல் பிரசாரங்களை அரச தரப்பினர் முன்னெடுத்த போதிலும், தென் மாகாணத்தவர்கள் அவற்றை வெறும் 'மாயை' என்றே நிராகரித்துள்ளனர்.

இந் நிலையில் மக்கள் கூட்டணியினருக்கு கிடைத்துள்ள வெற்றியானது நாட்டில் ஆட்சி மாற்றத்தை மக்கள் விரும்புவதையும், வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்பதை நாட்டு மக்கள் முன்பைவிட தற்போது நன்கு உணரத் தலைப்பட்டுள்ளதையுமே தெளிவு படுத்துவதாக இருக்கின்றது.

தென்னிலங்கையின் அரசியல் நிலவரத்தை ஆராயும்போது, மேல் மாகாண சபை முதலமைச்சர் திருமதி.சந்திரிக்கா குமாரணதுங்க பண்டாரநாயக்காவின் செல்வாக்கு கணிசமானளவு அதிகரித்து வருவதையே அறியக்கூடியதாக இருக்கின்றது.

ஆட்சியாளர்கள் சந்திரிக்கா குறித்து எச்சரிக்கையடையுமளவிற்கு தென் மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் விளங்கியுள்ளன.

சந்திரிக்கா பங்கு பற்றிய கூட்டங்களில் பெருமளவு மக்கள் திரண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

அநுரா, காமினி ஆகியோரைத் தம் பக்கம் சேர்த்துக் கொண்டதன் மூலம் தமது பலத்தை அதிகரிக்க முடியுமென ஆட்சியாளர்கள் கருதியிருந்தனர். ஆனால் காமினி, அநுரா ஆகியோர் வெறும் 'செல்லாக்காசுகளே' என்பது தென்மாகாணத் தேர்தலின்போது தெளிவாகியுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் அநுரா, காமினி ஆகியோர் அவர்களது சொந்த பாராளுமன்றத் தொகுதிகளில் வெற்றி பெறுவார்களா? என்பது கூட சந்தேகத்துக்குரியதாகவே இருக்கின்றது.

சந்திரிக்காவின் கணவரான மறைந்த பிரபல சிங்கள சினிமா நட்சத்திரமும், ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவருமான விஜயகுமாரணதுங்க வடக்கு-கிழக்கு பிரச்னை குறித்து தமிழ் அமைப்புக்களின் தலைவர்களை நேரடியாகச் சந்தித்திருந்தார்.

வடக்கிற்கு திரு.குமாரணதுங்க விஜயம் செய்திருந்ததுடன், அங்கே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகரான சதாசிவம் கிருஷ்ணகுமாரையும் (கிட்டு) சந்தித்திருந்தார். அத்துடன் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு மனிதாபிமான அடிப்படையில் அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென்று திரு. குமாரணதுங்க யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்திருந்தார்.

திரு.குமாரணதுங்க தமிழ் நாட்டுக்கும் விஜயம் செய்து அங்கே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம், மற்றும் புளொட் இயக்க தலைவர் உமா மகேஸ்வரன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி செயலதிபர் கே.பத்மநாபா ஆகியோரையும் சந்தித்திருந்தார்.

இச்சந்திப்புக்களின்போது சந்திரிக்காவும் தமது கணவர் குமாரணதுங்கவுடன் உடனிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன, மத ரீதியிலான அரசியலுக்கு முக்கியமளிக்காத நிலைப்பாட்டையே அன்று திரு. விஜயகுமாரணதுங்க கொண்டிருந்தார்.

ஆனால் இன்று திரு. விஜயகுமாரணதுங்க உயிருடனில்லாத நிலையில் அவரது மனைவியார் திருமதி.சந்திரிக்கா குமாரணதுங்க தம்மை ஒரு பலம்மிக்க அரசியல் சக்தியாக மாற்றிவருவதையே அறியக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கையில் கடந்த 17 வருட காலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி நிலவி வருகின்றது. இப்பதினேழு வருடகால ஆட்சியில் மூன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள், நான்கு பிரதமர்கள் உருவாகியுள்ளனர்.

1977ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி ஆரம்பமாகியிருந்தது. அப்போது திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனா பிரதமராக இருந்தார். 1978ம் ஆண்டு புதிய அரசியலமைப்புடன் இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்பட்டதையடுத்து திரு.ஜே.ஆர். ஜயவர்த்தனா இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டார்.

ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை இலங்கையில் திறந்த பொருளாதாரத் திட்டத்துக்கு வழிவகுத்திருந்தது.

ஜே.ஆரின் இத்திறந்த பொருளாதாரத் திட்டம் பல்வேறு வர்த்தக, கைத்தொழில், மற்றும் சுதந்திர வர்த்தக வலய முயற்சிகளுக்கு விரிவான வாய்ப்புக்களை வழங்கியிருந்தது.

ஆயினும் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னை ஜே.ஆரின் நிறைவேற்று அதிகாரத்துக்கும் பெரும் சவாலாகவே இருந்து வந்தது. அரசியல் ரீதியாகவோ அல்லது இராணுவ ரீதியாகவோ வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்க்க முடியாதவராகவே திரு.ஜயவர்த்தனா காணப்பட்டிருந்தார்.

இந்நிலையில் இலங்கையில் இன்று திறந்த பொருளாதாரத் திட்டத்தின் காரணமாக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தோன்றியுள்ள போதிலும், வடக்கு-கிழக்கின் சர்ச்சை காரணமாக, பெருமளவு பணம் யுத்தத்திற்காகவே செலவிடப்படும் நிலை காணப்படுகின்றது.

திரு.ஜே.ஆர். ஜயவர்த்தனாவைத் தொடர்ந்து திரு.ரணசிங்க பிரேமதாசா இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவாகியிருந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நாட்டை நிர்வகித்த இந்த இரு தலைவர்களும் அக்கட்சியின் பலம் மிக்க தலைவர்களாகவே கருதப்பட்டிருந்தனர். ஆயினும் இராணுவ, அரசியல் ரீதியாக வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்ப்பதில் திரு.ஜே.ஆர்: ஜயவர்த்தனா, திரு. பிரேமதாசா ஆகியோர் தோல்வியையே தழுவியிருந்தனர்.

இராணுவ ரீதியாகப் பார்க்கும்போது கடந்த பத்து வருடகாலமாக யுத்தத்தில் ஈடுபட்டுவரும் தமிழீழ விடுதலைப் புலிகளும், ஆயுதப்படையினரும் பெருமளவு பலமடைந்திருப்பதனையே அறியக்கூடியதாக இருக்கின்றது.

இரு தரப்பினரதும் இப்பலமானது ஒருவரையொருவர் விட்டுக்கொடாததாகவும், எத்தரப்பினராலும் ஒரு வெற்றியை இலகுவில் பெற்றுவிட முடியாததாகவுமே இருக்கக் காணப்படுகின்றது.

இந்நிலையில் இராணுவ நடவடிக்கைகளில் தொடர்ந்து நம்பிக்கை வைத்திருப்பது, இரு தரப்பிலும் அர்த்தமற்ற உயிரிழப்புகளுக்கே வழி வகுக்கும் சூழ்நிலைகளை உருவாக்குவதாக இருக்கக்காணப்படுகின்றது.

தென்மாகாண சபைத் தேர்தல் எதிரணியினருக்கு பலத்த வெற்றியைக் கொடுத்துள்ள அதே சமயம், ஆளுங் கட்சியினருக்கு தமது பலத்தையும், தலைமைத்துவத்தையும் எடை போடுவதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்கியிருப்பதாகவே காணப்படுகின்றது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தி, மற்றும் சர்ச்சைக்குரிய வடக்கு-கிழக்குப் பிரச்னை என்பனவற்றை மையமாகக் கொண்ட நிலையில் ஆளுங்கட்சியினர் முன்வைத்த தேர்தல் பிரசாரக் கோஷங்கள் முற்று முழுதாக நிராகரிக்கப்பட்ட நிலையே தென்மாகாணத் தேர்தலின் போது ஏற்பட்டிருந்தது.


முன்னால் ஜனாதிபதி ஜே.ஆர்.

இந்நிலையில் இலங்கையில் ஒரு புதிய அரசியல் சிந்தனை தோற்றம் பெற வேண்டுமென்ற பேரவா தோன்றியிருப்பதனையும், அப்பேரவா, ஒரு பேரலையாக தென்மாகாண சபைத் தேர்தலில் எதிரணியினருக்கு பெருவெற்றியைக் கொடுத்திருந்தது.

எனவே ஆட்சியிலிருப்போர், இந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் இடம் பெறவிருக்கும் பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் போன்ற நாடு தழுவிய தேர்தல்களில் குதிப்பதற்கு முன்னர் தமது நிலைப்பாடுகளை மாற்றியமைத்து, தம்மையும் திருத்திக் கொள்வதற்கு கால அவகாசம் போதுமானதாக இருக்குமா? என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

உறவுக்குள் திருமணம் கந்தது தானா?

டாக்டர் எஸ். ஞானசுந்தரி–தமிழ்நாடு

காலங்காலமாக உறவுக்குள் திருமணங்கள் நமது தாயகத்தில் நடந்து கொண்டே வருகிறது. மனித சமுதாயமும் வாழையடி வாழையாகப் பெருகிக்கொண்டே தான் வருகிறது. ஆனால் இப்போது மருத்துவத் துறையினரும் அறிவியலாளரும் உறவுக்குள் திருமணம் நல்லதல்ல எனும் ஒரு விழிப்புணர்வைத் தூண்டி விடுகிறார்களே! இது அவசியம்தானா என்பதை அனைவரும் அறிய விரும்புவது இயற்கையே.

இது பற்றி நம் வாசகர்களுக்காக- இது வரை 20,000 மகப்பேறுகளைக் கண்ட சாதனையாளர் டாக்டர் எஸ். ஞானசௌந்தரி அவர்கள் அளித்த பேட்டி இதோ:

"ஆயிரங்காலத்துப் பயிரை விளைவிக்கும் தம்பதியினரின் மணவாழ்வு பொன்னாலும், பொருளாலும், புகழாலும் மட்டும் நிறைவு பெறுவதில்லை. ஆரோக்கியமான அறிவிற் சிறந்த பண்பிற்சிறந்த குழந்தைகளைப் பெறுகின்றபோதுதான் பூரணமாகின்றது. ஒவ்வொரு குழந்தையும் பிறந்த உடனேயே அதன் நிறம், காது, மூக்கு, கண் ஆகியவற்றைக் கொண்டு 'தாயைப்போல' 'தந்தையைப்போல' 'பாட்டியைப்போல' 'பாட்டனைப்போல' என்று தலைமுறைகளுக்கிடையே முடிச்சுப் போடுகிறோம். பூட்டன், பாட்டன், தகப்பன், மகன், பேரன் என நீண்டுகொண்டே போகிற இந்த வம்சாவழித் தொடர் நல்லாரோக்கியத்துடனும், நல்லறிவுடனும் உள்ள பரம்பரையைத் தொடர வேண்டும் என்பதுதானே அனைவரின் அவாவும். அதற்கு உறவுத் திருமணங்கள் துணை புரிகிறதா? தடை செய்கிறதா? என்பதை அறிவியலாளர் உணர்த்தத் தொடங்கியுள்ளனர்.

பண்புகளின் தொடர்ச்சிக்குக் காரணம் இரத்தக் கலப்பு அல்ல. பின் எது? ஆணும், பெண்ணும் இணைகிறபோது ஆணிடத்தில் தோன்றுகிற விந்தணுவும், பெண்ணிடத்தில் தோன்றுகிற கருவணுவும் இணைந்து சினை முட்டை ஆகிறது. அன்பில் ஒன்றிக் கலந்தால் உருவாகிற சினை முட்டைதான் தாயிடமிருந்தும், தந்தையிடமிருந்தும் அவரவர்களின் இலட்சக்கணக்கான மரபுக் கூறுகளை சரிபாதியாகப் பெறுகிறது. இந்தக் கருவாகிய சினை முட்டை பல்கிப் பெருகி விஸ்வரூபம் கொண்டு வளர்ந்து சிசுவாக உருவாகிறபோது தாய், தந்தை ஆகிய இருவரின் மரபுக் கூறுகளும் அச்சேயைச் சென்று அடைகின்றன. நிறம், அழகு, உயரம், உருவம், உடற்பருமன், கூந்தல், பல்வரிசை, கண், மூக்கு, காது, வாய் ஆகியவற்றின் அமைப்புகள் போன்ற எண்ணற்ற பண்புகள் தாய் வழியாகவும், தந்தை வழியாகவும் குழந்தையைச் சென்று அடைகிறபோது அவை முறைப்படி பொருத்தமாக இணைந்து ஒரு நிலையாக நின்று செயல்படுகின்றன.

தாய், தந்தையிடமிருந்து பெறுகின்ற மரபுக் கூறுகளில் ஏதாவது ஒன்றிற்குக் குறையேற்பட்டாலும் பிறக்கப்போகும் குழந்தை குறையோடு பிறக்கலாம். வெண் குஷ்டம் என்று சொல்லப்படுகின்ற பாண்டு நோய், பிறவிச்செவிடு, நிறக் குருடு, கிட்டப் பார்வை போன்ற ஆயிரக்கணக்கான நோய்கள் தோன்றுவதற்கு குறைபாடுள்ள மரபுக் கூறுகள் பெற்றோரிடம் இருப்பதே காரணம் என அறியப்பட்டுள்ளது.

இக்குறைபாடான மரபுக்கூறுகள் மறைந்திருந்து பல தலைமுறைகளுக்குப் பின்னரும் கூட பாதிக்கலாம். பெரும்பாலன மரபுக் கூற்று மாற்றங்கள் உடனே வெளிப்படுவது இல்லை. ஆனால் குறைபட்ட மரபுக்கூறுகள் இருக்குமானால் அவை பெற்றவர்களிடம் வெளிக் காணப்படா விட்டாலும் ஒடுங்கியிருந்து பின்வரும் சந்ததியினரைப் பாதித்து விடலாம். உறவுத் திருமணத்தின் வாயிலாக சந்ததியினர் இருவரிடமும் ஒடுங்கிக் கிடக்கும் குறைபாடுள்ள இம்மரபுக்கூறுகள் இணைவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாவதால் ஊனமுற்ற குழந்தைகள் பிறப்பதற்கான வாய்ப்புகளும் அதிகமே. எனவே பிறவிக்குருடு, செவிடு போன்ற குழந்தைகள் பிறக்கின்ற விகிதம் உறவுத் திருமணங்களின் மூலம் பிறக்கின்ற குழந்தைகளிடமே சற்று அதிகமாகக் காணப்படுவதால் அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளில் உறவுத் திருமணங்களை சட்டமியற்றித் தடை செய்யதுள்ளனர்.

அப்படியானால் உறவுக்குள் திருமணமே கூடாதா? என்கிற எண்ணம் எழலாம். தாய்வழி வம்சாவழியையும் தந்தைவழி வம்சாவழியையும் ஆராய்ந்தறிந்து கருச்சிதைவு, குறைமாதப் பிறப்பு, ஊனமுற்ற குழந்தைகள் பிறப்பு, முழுச்செவிடு, கண் குருடு போன்ற பல நோய்களின் பாதிப்புகள் எவருக்கேனும் தலைமுறை தலைமுறையாக வந்துள்ளதா எனும் விவரங்களைச் சேகரித்து அத்தகைய குறைபாடுகள் மூதாதையரின் வழியில் காணப்படவில்லை எனில் உறவுத் திருமணங்களில் தவறில்லை. வம்சாவழி அட்டவணையைப் பார்த்து ஏதேனும் மரபுவழி நோய் வரக்கூடிய சாத்தியமுள்ளவர்கள் அந்நோய் இல்லாத வம்சத்தில் திருமணம் செய்து கொள்வதே நல்லது. அயல் குடும்பங்களில் திருமண உறவு கொள்ளும்போது ஊனமுற்ற குழந்தைகள் பிறக்கின்றனரே எனும் கேள்வி எழலாம். அப்போதும் கணவன், மனைவி ஆகியோரின் வம்சாவழியைப் பார்க்கின்ற போது எவருக்கேனும் பாதிப்புகள் இருந்திருக்கக் கூடும். குறுகிய உறவு வட்டத்தைத் தாண்டி திருமண உறவு ஏற்படுகிறபோது எல்லாத் திருமணங் களிலும் கோளாறுள்ள குழந்தைகள் பிறக்கக்கூடிய வாய்ப்புகள் பற்றி அறிய முடிவதில்லை. ஆனால் உறவுத் திருமண பந்தங்களிலே கோளாறுள்ள குழந்தைகள் தோன்ற வாய்ப்புகள் உள்ளன என்பதை முன்கூட்டியே தெரிந்துகொண்டால் அவற்றை மட்டுமாவது தவிர்த்து விடலாமல்லவா?

லேடீஸ் ஸ்பெஷல்

மனம் திறந்து பேசினால்

மகிழ்ச்சியாக வாழலாம்

ஆண்பாதி-பெண்பாதி!

வாழ்க்கை இனிக்க வழி!

மனமொத்த தம்பதிகள் என்ற வர்ணனைக்குப் பொருத்தமானவர்கள், தங்கள் பிரச்சனைகளைத் தத்தம் துணைவருடன் பகிர்ந்து கொள்பவர்களே! கணவனுக்கும் மனைவிக்குமிடையில் சுமுகமான உறவு வளர வேண்டுமானால் ஒருவரோடு ஒருவர் மிகத் தாராளமாகக் கருத்துப்பரிமாறிக் கொள்ள வேண்டும். எந்தப் பிரச்சனையானாலும் ஒளிவுமறைவின்றி பேசி முடிவெடுக்கும் தம்பதிகள் என்றும் மகிழ்ச்சியாக வாழ்வார்கள் என்பது திண்ணம்.

பெண்களில் பெரும்பாலானோர் தங்கள் உள்ளக் கிடக்கைகளைத் தங்கள் கணவனிடம் வெளிப்படையாகக் கூறமாட்டார்கள். அவர் தானாகவே அறிந்துவிடவேண்டும் என்றே நம்புவார்கள். ஆனால் கணவனுக்கோ தன் மனைவியின் மனத்தை அளந்துபார்க்க முடியாதிருக்கும். தன் மனத்திலிருப்பதை அவரால் ஏன் அறிந்துகொள்ள முடியவில்லை என்ற தாக்கம் மனைவியின் மனதினுள் இருந்து செல்லரிப்பது போல் அரித்து ஒருநாள் பூகம்பமாக வெடிக்கும். இதனால் இருவருக்குமிடையில் விரிசல் ஏற்படுமே தவிர பிரச்சனைகள் தீர்வதற்கான மார்க்கம் கிடைக்கப் போவதில்லை.

ஆண்களிலும் இத்தகைய மனோநிலை ஏற்படுவதுண்டு. தன் மனதில் உள்ளதை உணர்ந்து தன் மனைவி நடக்க வேண்டுமென எதிர்பார்ப்பார் கணவர். மனைவிக்கோ கணவனுடைய கருத்தில் புகுந்தவற்றைக் கண்டு பிடிக்கும் சக்தி இருக்க நியாயமில்லை.

இதனால் மனைவிமீது சதா சீறிவிழுந்து கொண்டே இருப்பார். தான் தன் கணவனுக்கு வேண்டிய பணிவிடைகள் அனைத்தையும் செய்தும் தன் மீது காரணம் எதுவுமின்றி எரிந்து விழுகிறாரே என்று அடுத்த வீட்டு மாமியிடம் அழுது புலம்புவார்.

சில தம்பதியர் இருவருமே கருத்துக்களை வெளிப்படுத்தாமல் தங்கள் துணையே அறிந்துகொள்ளவேண்டும் என்று மனதுக்குள் கருவிக் கொண்டிருப்பர். இதனால் இருவரிடத்திலும் வேண்டாத விபரீதக் கற்பனைகள் விஸ்வரூபமெடுக்கும். இந்நிலையில் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும் நிலை இவர்களுடைய குழந்தைகளுக்கே ஏற்படும்.

கணவன் மனைவிக்கிடையில் விரிசல் தோன்றாமலிருக்க கருத்துப் பரிமாற்றமே உதவ முடியும். எத்தகைய மன உழைச்சலையும் தம்பதியினர் மனம் விட்டுப் பேசினால் மனத்தை அழுத்தும் பாரம் குறையும்.

குடும்பத்தை இரட்டை மாட்டுவண்டிக்கு ஒப்பிடுவார்கள். குடும்பப் பிரச்சனைகள் என்ற சுமையை இருவரும் சமமாகப் பகிர்ந்து, ஒருவருக்கு மற்றவர் உதவி, கருத்தொருமித்து வாழப்பழகிக் கொண்டால் மட்டுமே குடும்ப வண்டி திசை மாறாமல் செம்மையாக ஓடும்.

ஒல்லியான உடம்பா உங்களுக்கு?

கவலைதீர கைவசம் சில யோசனைகள்

ஒல்லியாக இருக்கிறோமே என்று சிலர் வருத்தப்படுகிறார்கள்.

ஒல்லியான தேகத்தோடு இருப்பது பெரிய குறையல்ல. ஆனால் பலவீனமாக இருக்கக்கூடாது.

உடம்பில் பலம் குன்றினால் முதலில் முடி உதிரும்.

உடல் பெருக்க டொனிக்குகள், மாத்திரைகள் என்று சாப்பிட்டால் மட்டும் பலன் ஏற்படாது.

தினமும் என்னென்ன சாப்பிட வேண்டும் என்பதற்கு ஒரு பட்டியல் தரப்படுகிறது. முயன்று பாருங்கள்.

1. தினமும் இரண்டு உருளைக் கிழங்கை வேகவைத்து தோலுரித்து அதனோடு இரண்டு ஸ்பூன் நெய் அல்லது வெண்ணெய்யுடன் சாப்பிடவும்.
2. தினமும் சாப்பாட்டில் ஏதாவது ஒரு கீரை இருக்க வேண்டும். கீரையைப் பொடியாக்கி நறுக்கி பயத்தம் பருப்பு வேகவைத்து கீரையுடன் சேர்த்து (தேங்காய் சேர்க்காமல்) சாப்பிடலாம்.
3. தினமும் முட்டை ஒன்று. பால் இரண்டு தம்ளர் குடிக்க வேண்டும்.
4. காரமில்லாத சாப்பாடு எதுவானாலும் சாப்பிடலாம்.
5. வயிற்றுக் கோளாறு இல்லாதபோது வாழைப்பழம் சாப்பிடுவதும், பாலில் இரண்டு ஸ்பூன் தேன் கலந்து சாப்பிடுவதும் உடலுக்கு பலத்தைத் தரும்.
6. கூடியவரை மருந்து சாப்பிடுவதைத் தவிர்த்து, அதே விட்டமின்கள் அடங்கிய காய் கறிகளை சாப்பிட வேண்டும்.
7. வேர்க்கடலை ஒரு பிடி எடுத்து ஒரு சிறிய வெல்லக் கட்டியோடு சாப்பிட்டால் தேவையான இரும்புச் சத்தும் புரதமும் கிடைக்கும்.
8. கோவா, காரட், தக்காளி, வெங்காயம், எலுமிச்சைப்பழம், பீட்ரூட் இவைகளைப் பொடியாக நறுக்கி மிளகுத்தூள், உப்புத்தூள் கலந்து சாப்பிடலாம். ஏ.சி.பி. விட்டமின்கள் தாராளமாகக் கிடைக்கும்.
9. முடிந்தால் தினமும் நான்கு பாதாம் பருப்பு சாப்பிடலாம்.

நீங்களும் தைக்கலாம்

பெண்பிள்ளை கால் சட்டை

10 முதல் 12 வயது பெண் அளவு

(10 to 12 Yrs. Girl's Measurement)



பெண்ணினுடைய இடுப்பு முட்டி நீட்டளவு 14 அங்.

பெண்ணினுடைய இடுப்பு அளவு 26 அங்.

துணியை நீட்டு வசமாகவும் குறுக்கு வசமாகவும் சுருக்கம் இல்லாமல் மடித்துக் கொள்க.

குறுக்காகவும் நெடுக்காவும் மூன்று பாகங்களாகப் படத்தில் காண்பித்த பிரகாரம் குறுக்கு 4 1/3 அங்குலம், நெடுக்கு 5 1/3 அங்குலம் அளவு வீதம் பங்கிட்டுக்கொள்க.

E ஆனது Dயிலிருந்து 5 1/3 அங்குலம்.

F ஆனது D யிலிருந்து 4 1/3 அங்குலம்.

CF கால் அகல அளவு.

G ஆனது 2 அங்குலம் B யிலிருந்து உள்ளடங்கியிருக்கிறது. I (ஐ)யானது Aயிலிருந்து 2 4/6 அங்குலம் கீழ் இறங்கி இருக்கிறது. IG ஆனது பின் இடுப்பைக் குறிக்கிறது.

குறிப்பு: உயரம் 14"+2"=16"

H ஆனது 2 அங்குலம் B யிலிருந்து கீழும் 4 1/3 அங்குலம் உள் அடங்கியும் இருக்கிறது.

IH ஆனது முன் இடுப்பைக் குறிக்கிறது.

AI இடுப்பு ஆழம்.

IH, HE, EF முன் கால் பாகத்தைக் குறிக்கிறது.

IG, GE, EF பின் கால் பாகத்தைக் குறிக்கிறது. முன்கூறியது போலவே பின் பாகம் முன்னும் பிறகு மேல் மடிப்பைப் பிரித்து முன் பாகம் பின்னும் வெட்ட வேண்டும்.

முன்புறம் திறந்து வைக்கவும் பொத்தான் தைக்கவும் I (ஐ)யிலிருந்து 4 அங்குலம் கீழ் வரை வெட்டவும்.

குறிப்பு: கால் குட்டையாக வேண்டுமானால், முன்கூறிய பிரகாரம் முழுப்பாகத்திற்கும் மார்க்குச் செய்த பிறகு தேவையான அளவு காலைக் குட்டையாக்கிக் கொள்ளவும்.

பரிசுத் திட்ட கூப்பன்
இல–8

தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுத் திட்டம்

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.

ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.

சமைப்போம் சுவைப்போம்

மட்டன் மசாலா வறுவல்

தொகுத்துத் தருவது–சுகந்தினி

தேவையான பொருட்கள்:

மட்டன் -1/2 கிலோ
மிளகாய் வற்றல் –8
இஞ்சி - ஒரு துண்டு
பூண்டு - 9 பற்கள்
தேங்காய்த் துருவல் - 2 மேசைக்கரண்டி
வெங்காயம் - 2
முந்திரிப் பருப்பு - 10
பாதாம் பருப்பு - 5
கொத்தமல்லி - 2 தேக்கரண்டி
மசாலாத்தூள் - 2 தேக்கரண்டி
தயிர் - 1/2 கோப்பை
மிளகு - 1 தேக்கரண்டி

செய்முறை:

மட்டனைச் சற்றுப் பெரிய துண்டுகளாக நறுக்கிச் சுத்தப்படுத்தவும். வெங்காயத்தை நறுக்கவும். தயிர், உப்பு, மஞ்சள்தூள் கூட்டி இறைச்சியை ஊறவைக்கவும். இஞ்சி, பூண்டு, மிளகு, வறுத்த கொத்தமல்லி, வற்றல் மிளகாய் இவைகளை மைய அரைத்தெடுத்து வழிக்கும் முன் மசாலாத்தூள் சேர்த்து மசாலாவில் நன்றாகக் கலக்கும்படி அரைத்து எடுக்கவும்.

இறைச்சித்துண்டுகளுடன் மசாலாவைப் பிசிறி 10 நிமிடங்கள் இன்னும் ஊறவைக்கவும். முந்திரிப் பருப்பு, வெந்நீரில் ஊறவைத்த பாதாம் பருப்பு, தேங்காய்த் துருவல் தடவிவிட்டு இன்னும் சற்று நேரம் ஊறவைக்கவும். வாணலி யில் எண்ணெய் விட்டு நறுக்கிய வெங்காயம் சேர்த்து வதக்கி இறைச்சித்துண்டுகளைப் போட்டு சிவக்க வதக்கவும். நீர் வற்றியதும் 2 கோப்பை நீர் சேர்த்து வேகவைக்கவும். நீர் வற்றி, கறிவெந்து சிவக்க வறுபட்டதும் எடுத்துப் பரிமாறவும்.



வளர்ந்து கொண்டேயிருந்த இளைஞர்!

இடையில் ஏற்பட்டது ஒரு தடங்கல்

உலக வரலாற்றில் அதி உயரமான மனிதன் என்று ஒப்புக்கொள்ளப் பட்டவர் ரொபட் வாட்லோ.

அமெரிக்காவில் இல்லினொயிஸ் மாநிலத்தில் அல்ரொக் என்ற பகுதியில் வாட்லோ பிறந்தது 1918 பெப்ரவரி 22ல்!

1940ல் வாட்லோவின் வயது 22. அவரது உயரமோ 8 அடி 11.1 அங்குலம்.

வளர்ந்கொண்டேயிருப்பவர் என்று மருத்துவர்கள் சொன்னார்கள்.

ஆனால், அந்த சாதனை மனிதனை, அதிசய இளைஞனை பாழாய்ப்போன மரணம் பற்றிக்கொண்டது.

1940ல் ரொபட் வாட்லோ இறந்துபோனார்.

அவர் உயிரோடு இருந்திருந்தால் 9 அடிவரை வளர்ந்திருப்பார் என்கிறார்கள் மருத்துவர்கள்.

அதற்குமேல் கூட வளர்த்திருக்கலாம்.

வாட்லோ இறுதியாக அணிந்த பாதணியின் அளவு 18 1/2 அங்குலம். (47 செ.மீ)

இன்னொரு தகவல்- வாட்லோ இரண்டு வயதாக இருந்தபோது குடலிறக்க நோய் ஏற்பட்டது. நோய் தீர்க்க இரு தடவைகள் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. அதன் பின்னரே மளமளவென்று அவர் உயரம் கூடத் தொடங்கியது.

வாட்லோ இன்று உயிரோடு இல்லை. ஆனால் அவரது படம் உலக சாதனைப் புத்தகத்தில் இன்றுவரை இருக்கிறது.

படத்தில் வாட்லோ அருகில் இருப்பது அவரது சகோதரர்கள்.

20ம் பக்கத்தில் உயிரோடு இருக்கும் உயர்ந்தவர் பற்றிய விபரம் உண்டு. சென்று பாருங்கள்.

நகமோ – இது – நகமோ?

நதிபோல் அன்றோ இருக்குது!

இந்தியத் தலைநகர் புதுதில்லி. அங்கே இருக்கும் ராகேஸ் சர்மாவுக்கு மிக நீளமான நகங்கள்.

மரம் வளர்ப்பதுபோல நகம் வளர்த்திருக்கிறார்.

மரம் வளர்த்திருந்தால் நிழல் கிடைத்திருக்கும். ராகேஸ் சர்மா, நகம் வளர்த்தார். புகழ் கிடைத்திருக்கிறது.

உலக சாதனைப் புகழ். 1973ம் ஆண்டுக்குரிய உலக சாதனைப் புத்தகத்தில் இவரது பெயர்தான் பெரிய நகவீரராக பொறிக்கப்பட்டிருக்கிறது.

சர்மாவுக்கு இப்போது வயது 54. ஐம்பதிலும் ஆசை வரும்.

நகம் வளர்க்கும் ஆசையால் அவர் பட்டுவரும் அவஸ்தைகள் இருக்கிறதே.... அப்பப்பா... அதை அவரே சொல்கிறார் கேளுங்கள்.

"பெரும்பாலான நேரம் பாதுகாப்புக்கான உறையினை மாட்டிக்கொண்டு நடமாட வேண்டியுள்ளது."

"வீட்டில் மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்களின் கண்டனங்களை பொறுமையுடன் ஏற்க வேண்டியிருக்கிறது."

"வெளியே கிளம்பும்போதெல்லாம் பார்ப்பவர்கள் என்னை ஏதோ தீண்டத்தகாத ஜந்துபோல் அருவருப்புடன் பார்ப்பதையெல்லாம் சகிக்க வேண்டியிருக்கும். எனது அன்றாடப் பணிகளிலும் பல இடையூறுகள்.

"படுக்கைக்குச் செல்லும்போதும் அவஸ்தைதான். இப்பொழுதெல்லாம் 30 நிமிடம்வரைதான் தூங்க முடிகிறது. அதிகம் தூங்கினால் ஆசையோடு வளர்த்து வரும் நகங்களுக்கு தீங்கு ஏற்படலாம் என்று பயமாக இருக்கிறது."

இந்த அவஸ்தைகளை சுமார் 32 வருடங்கள் அனுபவித்திருக்கிறார் சர்மா.

1973ல் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்தபோதுதான் பட்ட அவஸ்தைகளுக்கு பலன் கிடைத்த நிம்மதி ஏற்பட்டதாம்.



"சாதனைக்காக சந்தித்த சோதனைகளோ அப்பப்பா..... போதுமடா சாமி"

"சாதனைகள் என்பது சாதாரணமானவையல்ல. எடுத்த முயற்சியை இறுதிவரை செய்து முடிக்கும் மனபலம் முக்கியம்" என்கிறார் சர்மா.

பனிப்படலத்தில் சிக்கியது நாய்!

பறந்துவந்து உதவியது 'ஹெலி'!!





தகவல் பெட்டி

மனிதர்களை காப்பாற்றுவதற்குக்கூட பெரிய அக்கறைப்படாத காலம் இது.

போர் நடைபெறும் நாடுகளில் ஹெலிகளும், விமானங்களும் குண்டுத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்படுவதுண்டு.

இழக்கப்படும் உயிர்களைவிட போரின் வெற்றியில்தான் குறி.

ஒன்பது அப்பாவி உயிர்கள் உதிர்ந்து போனாலும் ஒரு எதிரி மடிந்தால் போதும் என்பது போர் வெறி வளர்த்துவரும் விதியாகி வருகிறது.

இதற்கிடையேகூட ஒரு நாயின் உயிரைக் காப்பாற்றுவதற்கு ஒரு ஹெலிக்கொப்டரில் பொலிசார் பறந்து திரிந்து அலைந்தனர் என்றால் நம்பமுடிகிறதா?

ஆச்சரியம்தான். ஆனால் நடந்திருக்கிறது. எங்கே தெரியுமா? அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில்!

கடந்த ஜனவரி மாதம் 15ம் திகதி நியூயோர்க் அருகில் உள்ள ஹட்சன் நதியின் நீர் முழுவதும் உறைந்துபோய் பனிப்படலமாகிவிட்டது.

அந்த உறைபனியில் மாட்டிக் கொண்டது ஒரு நாய்.

செல்லமாய் சீராட்டி அந்த நாயை வளர்த்தவர்கள் நியூயோர்க் பொலிசாரிடம் புகார் செய்தனர்.

"அப்படியா விசயம்? தேடிப் பார்க்கிறோம், கிடைத்தால் சொல்லியனுப்புகிறோம்" என்று விட்டு பேசாமல் இருந்துவிடவில்லை பொலிசார்.

உடனே தேடும் படலம் தொடங்கியது. பனிப்படலம் நடுவில் நாய் மாட்டிக் கொண்டதை அறிந்த பொலிசார் உடனடியாக ஹெலிகொப்டர் ஒன்றின் உதவியோடு பனிப்படலம் மீது பறந்து அந்த நாயைக் காப்பாற்றிக் கரை சேர்த்தனர்.

ஒரு நெடிய தடியில் சுருக்கு அமைத்து நாயின் கழுத்தில் அதை ஹெலியில் இருந்தபடி மாட்டி பக்குவமாய் நடந்தது மீட்பு முயற்சி!

இப்போது நாய் நலம். அதற்கு ஹட்சன் என்று பெயரிட்டுள்ளார்கள்.

ஹெலியால் குண்டும் போடலாம். தொண்டும் செய்யலாம். பின்னதே சிறந்தது.

விசித்திரமான சடங்குகள்

பர்மியர்கள் தங்களுக்கு குழந்தை பிறந்தவுடன், பிறந்த குழந்தையை தங்களது புனித நதியான ஜாவாநதியில் நீராட்டுவார்கள். அப்படிச் செய்தால் தங்கள் குழந்தைக்கு சளியே பிடிக்காது என்று நம்பிக்கை.

ஸ்வீடனில் குழந்தை பிறந்த தினத்தன்று வெள்ளிக் கரண்டியை பரிசாகக் கொடுப்பார்கள். ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் அப்படிப் பரிசளிப்பது வழக்கம். வெள்ளிக் கரண்டி அதிஷ்டத்தின் சின்னம் என்று நினைக்கிறார்கள். அதுதான் கரண்டிக்கு மரியாதை.

நாகலாந்தில் குழந்தை பிறந்தவுடன் வெந்நீரால் குளிப்பாட்ட மறக்கமாட்டார்கள். அந்த சூட்டைத் தாங்கிக் கொள்ளப் பழகிய குழந்தை எதிர்காலத்தில் எதிர்வரும் துன்பங்களை தாங்கிக் கொள்ளுமாம். மண்ணுக்கு வந்ததவுடனேயே மன தைரியத்தையும் உருவாக்கும் முயற்சி.

விசையை அழுத்தினால் விசேஷம்!

புத்தம் புதிய கண்டுபிடிப்பு

இது என்ன புதுவகையான பிஸ்டல் ரகமோ என்றுதானே நினைக்கிறீர்கள்?

அதுதான் இல்லை.

இது ஒரு சானல் மாற்றி. ரி.வி, டெக் போன்றவற்றை இயக்க, நிறுத்த, சானல் மாற்ற இருந்த இடத்தில் இருந்தே ட்றிகரைத் தட்டினால் போதும்.

ரி.விக்கு என்று தனியாகவும், 'டெக்'குக்கு என்று தனியாகவும் றிமோட் கொன்ட்றோல்கள் உண்டு. ஆனால் இந்த புதிய கண்டுபிடிப்பு இரண்டுக்குமே பொதுவாகப் பயன்படும்.

ட்றிகரைத் தட்டினால் முனையில் இருந்து செவ்வூதா நிற ஒளிக்கற்றை ஒன்று புறப்பட்டு சென்று உங்கள் உத்தரவை 'ஒ.கே' பண்ணும்.

அதுசரி, துப்பாக்கி வடிவில் (பிஸ்டல்) இதை ஏன் தயாரித்திருக்கிறார்கள்?

இது ஒரு நல்ல கேள்வி. ஆயுத மோகம் யாரைத்தான் விட்டது. அமெரிக்க விஞ்ஞானிகளும் அதற்குள் அடக்கம்.

இன்னொரு விசயம். நம் நாட்டில் இதனை பாவிப்பது சற்றுச் சிரமம்.

தேடுதல் சோதனைகளின் போது அவதிப்பட வேண்டியிருக்குமே! அதுதான்.



சினி விசிட்

விஜயகாந்த்-
படம்-பதவிப் பிரமாணம்

மினிசினி

★ பிரபுவை அறிமுகப்படுத்திய சி.வி.ராஜேந்திரன் தயாரிக்கும் இன்றுமுதல்.. படத்தின் பெயரை மாற்றத் திட்டமிட்டுள்ளனர். முதலில் பிரபுவுக்கு ஜோடியாக நடிக்கவிருந்த கௌதமிக்குப் பதிலாக தற்போது வினிதா கதாநாயகியாக நடிக்கவுள்ளார்.

★ 'மகாநதியை' அடுத்து கமல் 'உழைப்பாளி' படத்தைத் தயாரித்த விஜயாவாஹினி நிறுவனம் தயாரிக்கும் படமொன்றில் நடிக்கவுள்ளார். இப்படத்தை தேசிய விருது பெற்ற 'மறுபக்கம்' படத்தை இயக்கிய சேது மாதவன் இயக்குகிறார்.

★ 'பாசம்', 'புதிய காற்று', 'மூன்றாம்படி' போன்ற படங்களை இயக்கியவர் கார்வண்ணன். இவர் தானே கதாநாயகனாக இயக்கும் படம் 'தொண்டன்'. இந்தப் படத்தில் முக்கிய வேடமொன்றில் நடிக்கவுள்ளார், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ்.

★ தமிழில் போதிய வாய்ப்பின்றி தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளில் சிறு சிறு வேடங்களில் நடித்து வரும் மோகினி, அண்மையில் ராம்கி ஜோடியாக இரண்டு படம், 'பட்டுக்கோட்டை பெரியப்பா', 'புதிய மன்னர்கள்' போன்ற படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

★ பத்தாண்டுகளுக்கு முன்னர் நாடகங்களில் இணைந்து இசையமைத்த தேவாவும், சந்திரபோஸும், தாமரை படத்தில் மீண்டும் இணைந்துள்ளனர். இப்படத்தில் தேவா இசையமைப்பில் சந்திரபோஸ் ஒரு பாடலை பாடியுள்ளார்.

★ அண்மையில் வெளிவந்த 'மகளிர் மட்டும்' படத்தின்மூலம் பலரின் பாராட்டுக்களைப் பெற்ற ரோஹிணி தற்போது 'அகிலன்' படத்தில் வில்லியாக நடித்து வருகிறார். இப்படம் தனக்கொரு திருப்புமுனையாக அமையும் என்று நம்புகிறார்.

★ 'ஊரைத் தெரிஞ்சுகிட்டேன்', 'காவல் பூனைகள்' போன்ற படங்களை இயக்கி நடித்தவர் கலைப்புலி ஜி.சேகரன். இவர் 'அதிசய உலகம்' என்ற விஞ்ஞானப் படத்தை எவ்வித விளம்பரமுமின்றி ஓசைப்படாமல் எடுத்து முடித்துள்ளார்.

★ 'உறவை', 'அதிபதி', 'புதுசா பூத்த ரோசா' ஆகிய படங்களில் நடித்தவர் அஜய். தற்போது பட வாய்ப்புகளின்றி இருக்கும் இவர் சொந்தமாகப் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.

★ ஸ்ரீதேவியைப் போன்று, 'தூதுபோ செல்லக்கிளியே' படத்தில் அறிமுகமான செண்பகமும் மூக்கைச் சிறிதாக்க பிளாஸ்டிக் சேர்ஜரி செய்துள்ளார்.

★ 'சீவலப்பேரி பாண்டி' திரைப்படத்தில் சூர்யா ராஜகோபால் என்னும் புது பாடகரை அறிமுகப்படுத்தியிருக்கிறார் அப்படத்தின் இசையமைப்பாளரான ஆதித்யன்.

★ [illegible] விரைவில் வெளிநாடுகளுக்குச் சென்று இசை நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

ஸ்ரீதேவி 'வீட்ல விசேஷங்க'

பாக்கியராஜின் 'வீட்ல விசேஷங்க' தமிழில் சூப்பர் ஹிட். உடனே சூட்டோடு சூடாக இந்தியில் தயாராகிறது. தமிழில் பாக்யராஜ் நடித்த வேடத்தில் இந்தியில் நடிக்கப் போகிறவர் அனில் கபூர். பிரகதி நடித்த பாத்திரத்தில் ஸ்ரீதேவி நடிக்கிறார். பாக்யராஜ் இல்லாமலா? இயக்குவது அவர்தானே. இன்ஸ்பெக்டர் பாத்திரத்திலும் நடிக்கிறார்.

உளவாளியில் ராம்கி!

தேசியப் பிரச்சனையை மையமாக வைத்து உருவாகிவரும் படம் 'உளவாளி'. போலீஸ் அதிகாரி வேடத்தில் கதாநாயகனாக நடிக்கிறார் ராம்கி. அவரது ஜோடியாக வினிதா நடிக்கிறார். ஏப்ரல் 27ம் திகதி படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.

முதல் ஐந்து இடங்கள்

தமிழ் நாட்டில் பாடல் கசட் விற்பனையில் முதல் ஐந்து இடங்களில் உள்ள படங்கள்.

1. 'சீவலப்பேரி பாண்டி'. இசை-ஆதித்யன்.
2. 'வீரா' -இசை-இளையராஜா.
3. 'மகாநதி'-இசை-இளையராஜா.
4. 'இந்து'-இசை-தேவா.
5. 'கேப்டன்'-இசை-சிற்பி.

1 1/2 இலட்சம் கேட்கிறார் சில்க்!

சில்க்ஸ்மிதா தனது சம்பளத்தை உயர்த்திக்கொண்டேயிருக்கிறார். துணிகளை மட்டும் குறைத்துக் கொண்டிருக்கிறார். இப்போது அவரது சம்பளம் 1 1/2 இலட்சம். தெரிந்த தயாரிப்பாளராக இருந்தால் போனால் போகட்டும் என்று ஒரு ஐம்பதோ இருபத்தைந்தோ (ஆயிரங்களில்) குறைத்துக் கொள்கிறார்.

கனகாவின் கனவு!

சிறப்பாக நடிக்கும், முதல்தரக் கதாநாயகி என்ற இலக்கை கனகாவால் எட்டிப்பிடிக்க முடியவில்லை. அதனால் இப்போது கவர்ச்சியும் காட்டி நடித்து வருகிறார். கதைப்படி இல்லாமல் அனாவசியமாக உடம்பை காட்டமாட்டேன் என்று சொல்லும் கனகாவுக்கும் ஒரு கனவு இருக்கிறது. 'சலங்கை ஒலியில்' கமல்ஹாசன் நடித்ததைப் போல் 'கிளாஸிகல் டான்சராக' நடிக்க வேண்டுமாம். அதுதான் கனவு. முறைப்படி நடனம் கற்று வைத்திருக்கிறாராம்.

கார்த்திக்-கனகா
படம்-சீமான்

'ஹவுஸ்புல்' மனது!

'அமைதிப்படை' வெற்றிக்குப் பின்னர் ரஞ்சிதா படு பிஸி. புதிய பட வாய்ப்புக்கள் நிறைய வருகின்றன. 'தோழர் பாண்டியனில்' சத்யராஜின் ஜோடியாக நடித்துக்கொண்டிருக்கிறார்.

ஸ்ரீதர் சொந்தமாக தயாரித்து இயக்கும் படமொன்றில் நடிக்க பல கதாநாயகிகள் போட்டி போட்டார்கள்.

ஆனால் அதிஷ்டக் காற்று 'ரஞ்சிதா' பக்கமே வீசியிருக்கிறது. அவரே நாயகி. அதனால் மன நிறைவோடு இருக்கிறார். ஒரு சுற்றுப் பருத்துவிட்டது போலவும் தெரிகிறது.

'சின்ன மேடம்'

'புதுவசந்தம்', 'கப்டன்' போன்ற படங்களைத் தயாரித்த சூப்பர் குட் பிலிம்ஸ் தயாரித்து வரும் படம் 'சின்ன மேடம்'. கதாநாயகன் ராம்கி. கதாநாயகியாக நடிப்பவர் நதியா. வினிதாவும் உண்டு. நதியாவுக்கு நாதுபட்ட வேடம்.

-ரோஜா-

★ புதிய பாதை வகுத்து பிரபலமாகி ராமனின் மனைவியின் பெயர் கொண்ட நடிகையை திருமணம் செய்த இயக்குநரும் நடிகருமானவர் தொண்டையில் வைத்தியம் செய்ய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு 'நர்ஸ்' ஒருவரிடம் அவர் சில்மிஷம் செய்ய 'நர்ஸ்' தன் கைப்பலத்தை காட்டிவிட்டாராம். இப்போது கதை உள்ளே வெளியே எல்லாம் பேசப்படுகிறது.

★ 'அரண்மனைக்கிளி' நாயகி சென்னையில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தார். அவர் அங்கிருப்பதை மோப்பம் பிடித்த சிலர் விளக்கு வைத்த நேரத்தின் பின்னர் போய் கதவைத் தட்டுகிறார்களாம். தயாரிப்பாளர்கள்தான் வந்திருக்கிறார்கள் என்று கதவைத் திறந்தால் உற்சாக பானத்தில் அவர்கள் நிற்பதைப் பார்த்து வெறுத்துப் போகிறார் நாயகி. அதனால் இப்போது வாடகைக்கு வீடு தேடுகிறாராம்.

காதோடு சொல்லுகிறோம்

★ ரஞ்சிதமான நடிகை ஒரு இயக்குநரோடு தகராறுபட்ட கதை கோடம்பாக்க வட்டாரத்தில் அடிபடுகிறது. பணத்தை வாங்கிவிட்டு நடிக்க மறுத்துவிட்டாராம். பணத்தைத் திருப்பிக் கேட்டதற்கு பணமா? வாங்கவேயில்லையே என்று கைவிரிக்கிறாராம். வளரும்போதே இப்படியா என்கிறார்கள்.

★ 'ரு' நடிகை பிணியானவர்போல் சோகமாக இருக்கிறாராம். ஆடும் காட்சிகளுக்குக்கூட அழைப்பில்லையாம். அதனால் பம்பாய் போய்விடும் எண்ணத்தில் இருக்கிறாராம்.

★ முன்பு தமிழ் படங்களில் பரபரப்பை ஏற்படுத்திய 'மாதவி' நடிகை இப்போது மலையாளத்தில் திறமை காட்டி வருகிறார். சொந்தமாக வீடும் கட்டிவிட்டார். திருமணம் எப்போது என்று கேட்டால் "அதுக்கு இன்னும் பக்குவம் வரவில்லை" என்கிறாராம்.

★ 'வீட்ல விசேஷங்க' நாயகி சான்ஸ் கேட்டு தயாரிப்பாளர்கள் சிலரை துரத்தோ துரத்து. அவர் பெயரைக் கேட்டாலே சில தயாரிப்பாளர்கள் தலை தெறிக்க ஓடுகிறார்களாம்.

★ முத்தக் காட்சிகளில் நடிக்க ஓகே என்று போட்டி போட்டுக்கொண்டு அறிக்கை விடும் சீசன் கோடம்பாக்கத்திலும் ஏற்பட்டுவிட்டது. வேகமான முன்னேற்றம்.

★ 'ரா' நடிகர் மீண்டும் தமிழில் பல படங்களில் நடிக்கத் தொடங்கியிருக்கிறார். மீண்டும் முன்னர் போல் வம்பு தும்புகளில் மாட்டாமல் இருந்தால் பிழைத்துக் கொள்வார் என்கிறார்கள்.

எச்சரிக்கை!

அருகே
ஆபத்தான வளையல்கள்!
தவறி விழுந்து
காணாமல் போகலாம்
இதயம்!!

...பாடுவார்!

...திரங்கள் ...ந்திப்பு

...நாயக் ...ஜோடி!

...ணியான படம்

...த சான்ஸ்

...க சரிதா

'என்னால் முடியாது'

எத்தகைய பாத்திரத்தில் உங்களால் நடிக்க முடியாது? என்று சுகன்யாவிடம் கேட்டார்கள்.

அது நடிகையைப் பார்த்து கேட்கிற கேள்வியா இது? என்று அவர் கோபப்படவில்லை. பதில் சொல்லியிருக்கிறார். "கிழக்குச் சீமையிலே" படத்தில் ராதிகா நடித்த விருமாயி பாத்திரத்தில் நிச்சயம் என்னால் நடிக்க முடியாது. ராதிகா ஒருவரால் மட்டுமே அதற்கு உயிர் கொடுக்க முடியும் என்பதுதான் சுகன்யாவின் பதில். ஒளிக்காமல் சொன்ன உண்மை!

வீரா–படப் பிடிப்பில்

சென்னை வாகினி ஸ்டுடியோவில் இருந்தார்கள் ரஜனியும்-ரோஜாவும்.

தினமுரசின் இந்தியச் செய்தியாளர் ஏழுமலையும், முரசின் சினிமா நிருபர் வெங்கடேசன் அவர்களைச் சந்தித்தார்கள்.

தினமுரசை முழுவதும் புரட்டிப் பார்த்து, முக்கிய செய்திகள், தகவல்களில் விழிகளை தரிக்கவிட்டு திருப்தியில் புன்னகைத்தார் ரஜனி.

"மிக நன்றாக இருக்கிறது. தொடர்ந்து எனக்கொரு பிரதி அனுப்புங்கள்," என்றார்.

புகைப்படம் ஒன்று எடுக்க வேண்டுமே என்று கேட்க, தனது வழக்கமான எளிமையான தன்மையோடு "ஓ அதற்கென்ன – தாராளமாக எடுக்கலாம். நான் ரெடி." முரசோடு ரஜனி தயாராக கிளிக் கிளிக்.

ரோஜா அட்டகாசமான ஆசத்தும் உடையோடு ரஜனிக்கு அருகில் இருந்தபடி "நானும் ஓ.கே" என்றார். ஏற்கனவே முரசோடு பரிச்சயம் என்பதால் தானே முன்வந்து ஒத்துழைத்தார்.

முரசின் முகப்பில் இன்று அலங்கரிப்பது ரஜனியும், ரோஜாவும் வீரா படப்பிடிப்பில் இருந்தபோது கமரா வாங்கிக்கொண்ட காட்சிகளில் இரண்டு.

இதுவரை வெளிவந்த ரஜனி படங்களை விட 'வீரா' அதிக விலைக்கு போயிருக்கிறது.

நீண்ட நாள் இடைவெளிக்குப் பின்னர் வெளிவரும் ரஜனி படம் என்பதால் பெரிய எதிர்பார்ப்புகளோடு இரசிகர்கள் காத்திருக்கிறார்கள்.

'வீரா' படப் பாடல் கசெட்டுக்கள் வேகமாக விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன. ■

"என்னை பயன்படுத்துங்க." –வினிதா ஒத்துழைக்கிறார்

தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், கதாநாயகர்கள் என்று மூன்று தரப்பிலிருந்தும் ஒத்துழைப்புக் கொடுக்கும் ஒரே கதாநாயகி யார் என்று கேளுங்கள். உடனே கோடம்பாக்கம் வட்டாரம் தயாராக வைத்துள்ள பதில் – வினிதா.

அதற்கு உதாரணமாக ஒரு சம்பவமும் உண்டு.

அவர் நடித்துவரும் படம் ஒன்றில் அட்டகாசமான கவர்ச்சிக் காட்சி ஒன்று. காட்சியை விளக்க தயாரிப்பாளரும், இயக்குநரும் தயங்கினார்களாம்.

அவர்கள் தயக்கத்தை புரிந்துகொண்ட வினிதா உடனே சொன்னாராம்.

"இதற்குப் போய் ஏன் தயங்குறீங்க? நடிக்கவந்த பிறகு அப்படி நடிக்க மாட்டேன். இப்படி நடிக்கமாட்டேன் என்று சொன்னால் எப்படி?

'நீச்சல் உடை காட்சி, முத்தக் காட்சிகளில்கூட நடிக்க நான் தயார். என்னை 'யூஸ்' பண்ணிக்கங்க."

கதாநாயகி என்றால் இவர்தாண்டா கதாநாயகி என்று அந்த தயாரிப்பாளரும் இயக்குநரும் புகழ்ந்து தள்ளுகிறார்களாம். ●

கார் குழல் விரிந்திருக்க
போர் விழிகள் திறந்திருக்க
யார் வரவுக்காக
இந்த காத்திருப்பு?

–கெளதமி–

இளையராஜா இசையில் 'ரப்' பாடல்!

'[illegible] பாட்டு' படத்திற்கு முதன் முதலாக 'ரப்' இசையில் பாடல் அமைத்துள்ளார் இளையராஜா. 'நாட்டு ராஜாக்களை நாடுகள் போற்றிய பாட்டு ராஜாவை யுகங்கள் வாழ்த்திடும்... இசை பட்டுத்தான் சொட்ட கட்டு ஆனந்த யார்...' என்று வாலி பாடல் எழுதியுள்ளார். எஸ். பாலசுப்ரமணியம் பாடியிருக்கிறார். படத்தில் பாடலுக்கு வாயசைப்பது [illegible].

இசையமைப்பாளராக ரஜனி!

[illegible] இருந்து கஷ்டப்பட்டு [illegible] சென்னைக்கு வருகிறார் அந்த வாலிபன்.

சென்னை வந்து இசையமைப்பாளராக மாறி புகழ் குவிக்கிறான். பணமும் குவிகிறது. அவன் பெயர் முத்துவீரப்பன்.

'வீரா' படக் கதைதான் இது. 90 நாட்கள் தொடர்ச்சியாக நடித்திருக்கிறார் ரஜனி. நடனம், சண்டை, நகைச்சுவை என்று அமர்க்களமாக உருவாகியிருக்கிறது வீரா.

மீனா, ரோஜா, செந்தில், விவேக், ஜனகராஜ், ஒய்.ஜி. மகேந்திரன், வடிவுக்கரசி, [illegible], வினுச் சக்கரவர்த்தி, அஜெய்ரத்னம், விசித்ரா, சரண்ராஜ் ஆகியோரோடு வில்லனாக தோன்றுகிறார் இந்திப் படவுலக மகேஷ் ஆனந்த்.

ரஜனி–படம்–வீரா

இதயங்களின் உணர்ச்சியே காதல்! –குஷ்பூ

இந்த வருடத்தில் பிரபுவுடன் மீண்டும் நடிப்பேன் என்று கூறியிருக்கிறார் குஷ்பூ. இந்து படத்தில் ஒரு பாடல் காட்சியில் மட்டும் நடிக்க அதிக பணம் வாங்கினாரா என்று பேசப்படுவதை மறுத்திருக்கிறார்.

காதல் பற்றி என்ன நினைக்கிறார் குஷ்பூ?

'லவ் இஸ் பியூட்டிபுல் பீலிங் எமோஷனல் ஆப் ஹியூமன். காதல் ஒரு இயல்பானது. அழகான உணர்வு மனித இதயங்களின் உணர்ச்சி பிரதிபலிப்பு' என்று கவிதைத் தனமாகச் சொல்கிறார்.

பானுப்பிரியாவின் நடனம், கௌதமியின் உடல், சில்க் ஸ்மிதாவின் செக்ஸ் லுக், ராதிகா, ரேவதி ஆகியோரின் நடிப்புத் திறன் என்பவை தான் பொறாமைப்படும் விஷயங்கள் என்கிறார் குஷ்பூ.

முடியும் தறுவாயில் 'கிருஷ்ணா'

பிரசாந்த்–ஹீரா–கஸ்தூரி ஆகியோர் ஜோடியாக நடித்துவரும் 'கிருஷ்ணா' படத்தின் படப்பிடிப்புகள் கடந்தமாதம் ஆரம்பமாகி முடியும் தறுவாயில் இருக்கிறது.

'சக்கச்சக்கமா திப்பா திப்பா... அல வெக்கம் கெட்ட பொண்ணுதான் எப்பா... எப்பா... இள மொட்டுக்கள் நெஞ்சுல தைப்பா... தைப்பா...' என்றொரு பாடல் காட்சியும் பிரசாந்த்–ஹீரா நடிக்க படமாக்கப்பட்டுள்ளது. விரைவில் திரைக்கு வர ஏற்பாடாகிவருகிறது.

சுகன்யா பாடுவார்

சினிமாவில் நடிக்க வருவதற்கு முன்னர் கர்நாடக பாடல்களை அழகாகப் பாடுவாராம் சுகன்யா.

கடந்தமாதம் திருவையாறு என்னுமிடத்தில் தியாகராஜா ஆராதனை விழாவில் கலந்துகொண்டு பஞ்சரத்ன கீர்த்தனைகளை பாடியுள்ளார்.

அடுத்து சுகன்யாவின் இலக்கு சினிமாவில் சொந்தக் குரலில் பாடி ஜமாய்த்துக்காட்டுவது. நல்லதுதானே. முயற்சி திருவினையாகட்டும்.

முத்தக்காட்சிக்கு முன் ஒரு ஒத்திகை!

'எங்க வீட்டு வேலன்', 'இதய நாயகன்', 'பொண்டாட்டியே தெய்வம்' போன்ற படங்களில் நடித்திருப்பவர் ரூபஸ்ரீ. ஒரு பேட்டியின் போது அவர் படபடவென்று சொன்ன கலகலப்பான பதில்கள்:

கேள்வி: முதல் முதலில் கதாநாயகன் உங்களைத் தொட்டபோது எப்படியிருந்தது?

பதில்: ஒரு பெண்ணுக்குரிய கூச்சம் ஏராளமாக இருந்தது. என்றாலும் நடிப்பு என்று வந்தபின் இதை ஒரு பெரிய விஷயமாக எடுக்கக்கூடாது.

கேள்வி: உங்களிடம் உள்ள கவர்ச்சியான அம்சம்?

பதில்: முதலில் என் உதடுகள். அடுத்தது முகம்.

கேள்வி: முத்தக் காட்சியில் நடிப்பதற்கு முன் ஒத்திகை பார்த்துக் கொள்வீர்களா?

பதில்: ஓ... பலமுறை பார்த்திருக்கிறேன்! அப்போதுதான் கமரா முன்போய் நின்று 'உணர்ச்சிகரமாக' உதட்டோடு உதடு அழுத்தி முத்தமிட முடியும்.

பளிச் பளிச் பதில்கள்தான்.

குஸ்பூ-ரேவதி இணைந்து தரும்படம்

'தேவர்மகன்', 'ஆவாரம்பூ' போன்ற படங்களை இயக்கியவர் பரதன். அவர் திரைக்கதை எழுதி இயக்கும் புதிய படம் 'அக்னிப் பிரவேசம்'. வசனங்களை எழுத்தாளர் பாலகுமாரன் எழுத, இசை–இளையராஜா. பாடல்கள்–வாலி. கதாநாயகனாக நடிப்பவர் ஜெயராம். அவருக்கு ஜோடி குஷ்பூ. ரேவதி முக்கிய பாத்திரம் ஒன்றில் நடிக்கிறார். சத்யராஜ், ஜனகராஜ், செந்தில், கே.ஆர். விஜயா, சித்ரா ஆகியோரோடு ரகுவரன் வில்லனாக தோன்றுகிறார். 'ஒரு கூட்டில் சின்ன இளம் ஜோடி ஒன்று கூடும் இன்று வாலிபம் திரண்டு' என்ற பாடல் படத்திற்காக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஏப்ரல் 16ம் திகதி படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.

குஷ்பூ-பிரபுதேவா
படம்-இந்து

மீனாட்சி சேஷாத்திரி
படம்-டூயட்



பரந்த கடல் மீதிலே

ஆழ்ந்த பெரிய கடலிலே
அழகுக் கப்பல் போகுதே
அசைந்து அசைந்து போகுதே
அமைதியாகப் போகுதே

பள்ளம் மேடு இல்லாத
பரந்த கடலின் மீதிலே
பென்னம் பெரிய கப்பலும்
பெருமையாகப் போகுதே

பாரம் ஏற்றிச் செல்லவே
மர்ம கப்பல் வந்ததே
தூர தேசம் செல்லவே
துறைமுகத்தில் நிற்குமே

பி. நிஷாந்தி
நம்மாதா பாடசாலை-நுவரெலியா.

> "சாதிகள் இல்லையடி பாப்பா!- குலத்
> தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;
> நீதி உயர்ந்த மதி கல்வி - அன்பு
> நிறைய உடையவர்கள் மேலோர்."
> -சுப்பிரமணிய பாரதியார்-

பாப்பா முரசு சிறுகதை

குருசாமியின் குழப்பம்



குருசாமியிடம் ஒரு கெட்ட வழக்கம் குடிகொண்டிருந்தது. அவன் யார் எதைச் சொன்னாலும் அப்படியே நம்பி விடுவான். அது நல்லதா, கெட்டதா; அதைச் செய்யலாமா, கூடாதா என்பதை எல்லாம் சிந்திக்க மாட்டான்.

குருசாமியிடம் நெருங்கிப் பழகும் நண்பன் சேது அவனைத் திருத்த எவ்வளவோ முயன்று பார்த்தான். ஆனால் அது நடக்கவில்லை. என்றாலும் குருசாமி எந்த வேலையையும் தானே செய்து முடிக்கும் கடின உழைப்பாளியாக இருந்து வந்தான். தொழில் விவசாயம்தான்.

ஒரு சமயம் மழை பெய்யாமல் அவன் விளைநிலம் வரண்டு போயிற்று. கிணற்றிலும் தண்ணீர் வற்றி விட்டது. அதனால் வேறு ஊருக்குக் குடி போனான்.

வேறு ஊருக்குப் புறப்படும் முன்பு நண்பன் சேதுவைப் பார்த்து, தான் இடம் மாறப்போகும் விசயத்தைச் சொன்னான். அவன் குருசாமியைப் பார்த்து, "மழை இல்லை என்பதற்காக நீர் ஊர் மாறினால் அந்த ஊரில் மட்டும் மழை பெய்யும் என்பது என்ன நிச்சயம்?" என்று கேட்டான்.

அதற்கு குருசாமி, "மழை பெய்யா விட்டால் நான் கிணறு வெட்டி நீரை வரவழைப்பேன்," என்றான்.

சேது மறு பேச்சு பேசாமல், "சரி போய்வா. உனக்கு ஏதாவது பிரச்சனை இருந்தால் என்னிடம் வந்து சொல். உனக்கு உதவ முயற்சிக்கிறேன்," என்று சொல்லி அனுப்பினான்.

மூன்று மைல் தூரத்தில் உள்ள வேறு ஊருக்குக் குடிபோனான் குருசாமி. இதுவரை சேர்த்து வைத்திருந்த பணத்தை எல்லாம் போட்டு மூன்று ஏக்கர் நிலம் வாங்கினான். அதில் நீர்வளம் பார்த்துக் கிணறு வெட்ட ஆரம்பித்தான். வேறு யாரையும் உதவிக்கு வைத்துக்கொள்ளாமல் பூமிக்குப் பூசை செய்து தானே கிணறு வெட்ட ஆரம்பித்தான்.

நீர்வள ஆராய்ச்சியாளர் எண்பது அடி தோண்டியதும் தண்ணீர் வரும் எனக் கூறியிருந்தான். முப்பது அடியை அவன் ஒரே வாரத்தில் தோண்டிவிட்டான். தண்ணீர் வந்த பாடில்லை. கவலையோடு வந்து வரப்பு மீது அமர்ந்து கொண்டிருந்தான். இன்னமும் ஐம்பதடி தோண்ட வேண்டுமே.

அப்போது அந்தப் பக்கம் வந்த ஒருவர் குருசாமியின் சோர்வுக்குக் காரணம் கேட்டார். தன்னுடைய நிலையைச் சொன்னான் குருசாமி.

அதற்கு அவர், "உனக்கு அறுபதடிக்குள் தண்ணீர் வரும் இடத்தை நான் காட்டுகிறேன். வா அங்கே தோண்டு," என்று அழைத்துச் சென்று அந்த பூமியின் வலது கோடியில் ஓரிடத்தைக் குறியிட்டுக் காட்டினார்.

குருசாமி உற்சாகத்துடன் கிணறு வெட்ட ஆரம்பித்தான். ஒரே வாரத்தில் நாற்பதடி தோண்டியாகி விட்டது. இன்னமும் இருபது அடிதான் தோண்ட வேண்டி இருந்தது.

அப்போது அந்த வழியே வந்த ஒருவர், "தம்பி நீ ஊருக்குப் புதுசா?" என்று கேட்டார்.

"ஆமாம்." என்றான் குருசாமி.

"இவ்வளவு கஷ்டப்பட்டுக் கிணறு தோண்டுகிறாயே! கிணற்றில் தண்ணீர் ஊறவில்லை என்றால் என்ன செய்வாய்? அதோ பார், அந்த மூலையில் தோண்டு. முப்பது அடியிலேயே தண்ணீர் வந்துவிடும்," என்றார்.

"அடடே! முன்பே இது தெரியாமல் போயிற்றே," என்றபடியே மண்வெட்டியைத் தூக்கிக்கொண்டு மூன்றாவது இடத்தையும் தோண்ட ஆரம்பித்தான்.

அந்த இடத்திலும் முப்பது அடி தோண்டினான். தண்ணீர் வரவில்லை. மிகுந்த கவலையாகப் போயிற்று குருசாமிக்கு. அப்போது நண்பன் சேதுவிடம் போய் நடந்ததைச் சொன்னான்.

"முதலில் சொன்னவர் எத்தனை அடி வெட்டினால் தண்ணீர் வரும் என்றார்?"

"எண்பது அடி."

"எவ்வளவு தோண்டினாய்?"

"முப்பது அடி."

"இரண்டாவது இடத்தில் எத்தனை அடி தோண்டினாய்?"

"இரண்டாவது இடத்தில் நாற்பது அடி தோண்டினேன்."

"மூன்றாவது இடத்தில் எத்தனை அடி தோண்டினாய்?"

"முப்பது அடி தோண்டினேன்."

"மொத்தம் எத்தனை அடிகள் தோண்டி இருக்கிறாய்?"

"ஒரு முப்பது, ஒரு நாற்பது, ஒரு முப்பது மொத்தம் நூறு அடி தோண்டியிருக்கிறேன்."

"முதலில் நீர்வள அதிகாரி சொன்னபடி ஒரே இடத்தில் எண்பது அடி தோண்டியிருந்தால் தண்ணீர் வந்திருக்கும். நீ தனித்தனியாக மூன்று இடங்களில் தோண்டியது வீண் என்பதை நீ ஏன் உணரவில்லை?"

"ஆமாம் நீ சொன்ன மாதிரி ஒரே இடத்தில் நான் வெட்டியிருக்கலாம் என்று இப்போது தோன்றுகிறது."

"குருசாமி வீண் குழப்பம் ஏன்? வா நம்மூரில் மழை பெய்துள்ளது. கிணற்றிலும் தண்ணீர் உள்ளது. விவசாயம் செய்யலாம்," என்றார் சேது.

இந்த முறை சேதுவின் வார்த்தையை மீறவில்லை குருசாமி.

குழந்தைகளே! பிறர் சொல்லுக்கு செவிமடுக்க வேண்டும். பிறகு நாமும் சுயமாகச் சிந்திக்க வேண்டும். அப்போது தான் எடுத்த காரியத்தில் வெற்றி பெற முடியும் என்பதை உணருங்கள். ●

சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 16.04.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 36
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

விடுகதைகளும் விடைகளும்

1. வெள்ளத்தால் அழியாதது. வெந்தணலில் வெந்தாலும் கொள்ள கொள்ள முடியாது. அது என்ன?
2. தன்னையும் இயக்கிப் பிறரையும் இயக்கும். அது என்ன?
3. காதிருக்கும். ஆனால் கேட்காது. அது என்ன?
4. ஏறினால் வழுக்கும், பழம் இனிக்கும், காய் துவர்க்கும். அது என்ன?
5. காட்டிலும் மேட்டிலும் முளைக்காத பனை. என்ன பனை?
6. வாயும் காதும் கொண்டு வாழ்வை ஓட்டுவான். அவன் யார்?
7. ஓடுவார், ஆடுவார், ஒற்றைக் காலில் நிற்பார். அவர் யார்?
8. மாசியில் பூவாகி, பங்குனியில் காய்க்கும் காய். என்ன காய்?
9. அடிக்காமல் அழுவான். அவன் யார்?

விடைகள்

1. கல்வி 2. இதயம் 3. ஊசி
4. வாழைப்பழம் 5. கற்பனை
6. தொலைபேசி 7. கதவு
8. மாங்காய் 9. ஐஸ்

செல்வி பி. நஸ்லிஹா
கு/ஹிஸ்புல்லா ம.வி, தெலியாக்கொன்ன.

1. வேலி கட்டிய வீட்டினுள் பதுங்கியிருக்கிறான் வாயாடி. அவன் யார்?
2. ஆற்று நடுவிலே ஒற்றை தடி. அதில் காயிது வெள்ளைத் துணி. அது என்ன?
3. தாய் இனிப்பாள். மகள் புளிப்பாள். பேத்தி மணப்பாள். அது என்ன?
4. யாவரும் விரும்பும் பால். யாருமே குடிக்காத பால். அது என்ன?
5. தெரிந்து பூப்பூக்கும். தெரியாமல் காய்காய்க்கும். அது என்ன?
6. வெய்யிலில் மலரும். காற்றில் உலரும். அது என்ன?
7. கடித்தால் கடிபடாது. பிடித்தால் பிடிபடாது. அது என்ன?
8. தச்சன் செய்யாத பெட்டி. கொட்ட கொட்ட நிரம்பாத பெட்டி. அது என்ன?
9. இலை இல்லை. பூ இல்லை. கொடி உண்டு. அது என்ன?
10. தாய் மடியில் மகள் சுற்றி சுற்றி வருகிறாள். அது என்ன?
11. இடி இடிக்கும். மின்னல் மின்னும். மழை பெய்யாது. அது என்ன?
12. சரியான நீதிபதி. சரியான நீதியை வழங்குவான். அவன் யார்?

1. நாக்கு 2. கொக்கு 3. பால், தயிர், நெய்
4. தபால் 5. நிலக்கடலை 6. வியர்வை
7. தண்ணீர் 8. வயிறு 9. கைரேகை
10. ஆட்டுக்கல் 11. வெடி 12. தராசு

ம. தினேஸ்வரன்
பது/லுணுகலை தமிழ் மகா வித்தியாலயம்-லுணுகல.

அறிவோம் மனதில் பதிவோம்



பாம்புகளின் எச்சிலில் காயங்களைக் குணப்படுத்தும் மருந்து உள்ளது என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கி.பி.283ல் பாரசீக நாட்டுடன் நடந்த போரில் தனது தந்தை கொல்லப்பட்டபோது, அவரது மகனான நுமேரியன்ஸ், சக்கரவர்த்தி பதவி ஏற்று, தனது படைக்குத் தலைமை தாங்கி, தனது நாட்டை நோக்கி 1500 மைல் தூர பயணத்தை மேற்கொண்டார். எட்டு மாதங்கள் நீடித்த இந்தப் பயணக் காலத்தில் படையினர் யாருமே நுமேரியனஸ் சக்கரவர்த்தியை ஒரு முறைகூடப் பார்க்கவில்லை. சக்கரவர்த்திக்குக் கண்நோய் என்று அவரது மெய்க்காப்பாளர்கள் கூறிவந்தனர். கடைசியில் சந்தேகம் அடைந்த படைத்தளபதிகள் பலவந்தமாகச் சக்கரவர்த்தியின் கூடாரத்திற்குள் நுழைந்து பார்த்தபோது, சக்கரவர்த்தி பல மாதங்களுக்கு முன்பே பாலைவன வெப்பத்தைத் தாங்க முடியாமல் இறந்து எலும்புக்கூடாகி இருப்பது தெரிந்தது.

கிரேக்க நாட்டில் ஓட்டப்பந்தய வீரர்கள் வேகமாக ஓட எள் சாப்பிடுவார்கள். 3ம் நூற்றாண்டில் அவ்வாறு எள் சாப்பிடுவதை அரசு தடை செய்தது.


நீங்க எந்த ஸ்மித்?
டபிள்யூ ஸ்மித்தா?
சிடி ஸ்மித்தா?

ஆங்கிலேயர்களில் ஜோன் ஸ்மித் பெயர் உடையவர்களும், ஸ்மித் என முடியும் பெயர் வைத்திருப்பவர்களும் மிக அதிகம். ஸ்மித் என முடியும்படி பெயர் வைத்துள்ளவர்கள் ஆறு இலட்சத்து ஐம்பதினாயிரம் பேர் உள்ளனர்.

கத்தலீன் லிண்ட்சே என்ற ஆங்கில எழுத்தாளர் மிக அதிகமான நாவல் புத்தகங்களை எழுதியுள்ளார். 904 நாவல் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. இவர் எட்டு விதமான பெயர்களில் நாவல்களை எழுதியுள்ளார்.

வர்ணம் தீட்டும் போட்டி இல. 33

பரிசுக்குரியவர்
செல்வன் எம்.ஐ. முகம்மது முனாஸ்
புஹாரி வித்தியாலயம்
முன்னிப்பொத்தானை.

பாராட்டுக்குரியவர்கள்

ஆர். சிவகுமாரி
தெகிந்த-நாவலப்பிட்டி.

எம்.இஸட். ஷாமீஷ்
அருப்பெலவத்தை-கண்டி.

ஏ. றிஸானா-கல்முனை-03.

அ. முஹம்மத் அஸாம்
ஸாஹிரா மத்திய கல்லூரி-புத்தளம்.

ஏ.ஆர்.எம். பௌசான்
மு.மகா வித்தியாலயம்-இகிரிகொல்லாவ.

எஸ். பிரசன்னா-கல்முனை-02.

வி. கௌரிதாசன்
புனித சூசையப்பர் கல்லூரி-திருகோணமலை.

சிவஞானம் ரமேஸ்
றோ.க.த.க. பாடசாலை-தேத்தாத்தீவு.

ஆர். ரஞ்சித் குமார்-ஹெந்தளை-வத்தளை.

ஸம்ஸம்ஜானி-அல்-ஹிரா முஸ்லிம் மகா வித்தியாலயம்-கொட்டாறமுல்லை.

ஏ. நொஜால் எஜின்
அலகொல்ல-உடபுசல்லாவ.

தமிழ் நாட்டில் உள்ள சமூக விடுதலைக்கான அக்கறையுடைய பெண் எழுத்தாளரில் பிரபலமான ஒருவர் அரசு மணிமேகலை. முரசுக்காய் கவிதை ஒன்று கேட்க, தனது தெளிந்த சிந்தனையின் வீச்சுக்களை பதிவு செய்து தந்திருக்கிறார். அக்கரையில் இருந்து சமூக அக்கறையோடு எழுதியிருப்பது இக்கரையில் உள்ள நிலவரங்களும் கச்சிதமாய் பொருந்துகிறது. இது இரசிக்கவல்ல, குறுகிய மனங்களை விரித்து விசாலப்படுத்திக்கொள்ள தூரப்படும் கவிதை.

யோசிப்போம் நண்பர்களே

அரசு மணிமேகலை

மதங்கள், சாதிகள்
மனங்களைப் பிரிக்கும்
மதில்களாய் மாறுவதா?

□□□

யோசிப்போம் நண்பர்களே!
மனிதனுக்காக மதங்களா?
இல்லையேல்,
மதங்களுக்காக மனிதர்களா?

□□□

பிறப்பாலா உயர்வு
வரும்?
செயல்களால் அல்லவா
சிறப்புகள்
தேடிவரும்?

□□□

ஒருமைப்பாடு என்று
உதடுகளால்
முனகிவிட்டு,
இதயமண்டபத்தை
இறுக்கிப் பூட்டுவதா?

□□□

பார்க்கின்ற இடமெல்லாம்
உலகில்,
படிப்பாளிகள் மட்டுமே!
அறிவாளிகள் ஏன்
அகப்படவில்லை?

□□□

சாதி மதம்
பார்த்து,
உலகில் மனிதனை
உயர்வாய் நினைப்பவர்
மனத்தின் செழுமையை
ஏன்
மறந்துபோகிறார்?

□□□

விரிந்திருக்கும்
வான்போன்ற
விசால இதயமும்,
அகன்றிருக்கும்
நிலம்போன்ற
அன்பின் பிரவாகமும்
ஊனக் கண்களுக்கேன்
ஒருபோதும்
தெரிவதில்லை?

□□□

அறிவென்னும்
ஆயுதத்தைத்
தவறவிட்டு, இப்படி
அர்ச்சுனர்கள் நித்தமும்
அலைபாய்வதால்தான்,
பகவத் கீதைகள்
பகரப்பட்டாலும்,
நின்று கேட்பதற்கு
இவர்களுக்கு
நிமிடங்கள்
கிடைப்பதில்லை!

□□□

இதய ஒளி
வற்றிப் போனால்,
கருணைப் பூக்களும்
கருகியே போகாதா?
என்ன இது பிடிவாதம்?

□□□

ஆள்காட்டி விரலே
அடுத்த விரலுக்குப்
பகையாகிப் போனால்
அன்னிய விரலுக்கு
அவசியமே கிடையாதே!

□□□

யோசிப்போம் நண்பர்களே!
இனியேனும் நாம்
மதத்தைத் துறந்து
மானுடம் வளர்ப்போமா?

குயிலே கூவாதே!

குயிலே கூவாதே!
காலக் கண்ணாடியை
தொலைத்துவிட்டு-நான்
கண்ணீருள்
தேடிக் கொண்டிருக்கிறேன்.

வசந்தம்
வருகின்றதென்று-நீ
முன்வந்துவிட்டாயா?
குயிலே கூவாதே!

இணையைத் தேடி-நீ
உச்சாணிக் கொப்பில் நின்று
உதயத்தில்
உரத்துக் கூவுகின்றாய்!

நான் கண்முன்னால்
கொலையுண்ட
கணவனுக்காய், மகனுக்காய்
குடிசையின்
மூலைக்குள் இருந்து
முனகிக் கொண்டிருக்கிறேன்!

வசந்தத்தை
வாங்குவதற்காகத்தான்
நான்
என் வசந்தத்தை ,
விலையாகக் கொடுத்திருக்கிறேன்!
உயிராக, இரத்தமாக...

விடிவு
வினாக்குறியாகி
தொக்கும் போது
நீ வந்து
வேதனையைத் தூண்டுகின்றாய்!

குயிலே கூவாதே!
நான்
காலக் கண்ணாடியை
கண்ணீருள்
தேடிக்கொண்டிருக்கிறேன்!

மாவை-வரோதயன்.
கொழும்பு-6.

தேசமும் நேசமும்

அன்பே
பல மாதங்களாய்
உன் மடல்
காணாமல்
என் மனம்
'வடக்கு கிழக்கு போல்
அமைதியின்றி
போராடிக் கொண்டிருக்கிறது.

நேசமென்பதும்
விலாசத்தை
தொலைத்துவிட்ட
நம் தேசத்தை
போன்று
நிலை தடுமாறுவதுதானோ?

என்னூரில் சலசலக்கும்

சிற்றருவிபோல
நீ
இதயத்திலே
இதமாக நுழைந்து
தந்திரமாய்
கழன்று விட்டாயே!

இதோ பார்!
உடைந்து போன என்
உயிரற்ற இதயத்துக்கு
இனி யார்
உயிர் கொடுப்பது...?

ஞா.அருணா-கிண்ணியா.

ரத்த தாகம்

புறப்படுங்கள்
விழிகள் புரியப்படாத
கரிபூசிய
அந்த
புளுக்க கிடங்குகளுக்குள்

□□

வரவுகளுக்காக
தினம்தினம்
ஆவல் பொங்கும்
'ராட்சஸ' ரசனையுடன்
வாய்பிளந்து
கொண்டிருக்கிறது
எப்போது
வந்து வீழ்வீர்களென்று!

□□

நம்
வாழ்க்கையின்
வடிவம் பார்த்து•
அசீதமாய்
எதுவும்
வசீகரிக்கப் போவதில்லை.
வார்த்தைதான்
இங்கே
போலி முலாம்
பூசிக்கொண்டிருக்கிறது.
தேடிப் பாருங்கள்
கிடைத்துவிடும்
சிதைபட்டுப்போன
உருவின்
சின்னமாய்
வாழ்க்கை...?

□□

சாரலின்
வேகத்தில்
சரிந்துபோன
மண்மேடுகளைப் போல்
நீளமாய்
எரிந்துகொண்டிருக்கிறது.
நிஜம்....

□□

பலவீனப் பட்டுப்போன
நினைவுகள்
படுத்துக்கொள்ளும்
பாவம்
நாங்கள்
ஞாபகங்களை
எதனால்
தூசி தட்டிக்கொள்வது..?

□□

எல்லாமே
முடிந்து போனது
எலும்பொட்டிய
ஊசல் உயிரைவிட
அதுவும் சீக்கிரம்
உரித்துக்கொள்ளப்படும்
காத்திருங்கள்...!

□□

மண்ணுக்குத்தான்
எத்தனை தீவிரம்
மனுஷனை
தின்றுதீர்ப்பதற்கு
உயிர்;
தீயால்
கருக்கப்படும்
புயலால்
உருக்கப்படும்
வெள்ளத்தால்
வடிக்கப்படும்
வேண்டாததற்கு
துப்பாக்கியால்கூட
உறிஞ்சப்படும்.
மொத்தத்தில்

மொத்தமாய்
உயிர்கள்
மண்ணுக்கு
தானமாய்
கொடுக்கப்படும்.

□□

புறப்படுங்கள்
மண்ணுக்கு
பசியாய்
இருக்கிறது.

□□

கிண்ணியா சபறுள்ளா.

என் காதலிக்கு...



நீதான்,
எடுத்ததற்கெல்லாம்
பயப்படுகிறாயே!
நான் என்ன செய்வது?
காதலிக்கத் தெரிந்தால்
..........வும்,
தெரிந்திருக்க வேண்டும்.
இல்லாவிட்டால்-நம்
காதல் அரோகரா!

ஏன் நடுங்குகிறாய்?
உன் அப்பனை நினைத்தா?
கவலையை விடு!
அவன் வில்லனாக
இருந்துவிட்டுப் போகட்டும்.
அவன் வில்லனாக இருந்தால்தான்
நான் ஹீரோவாக முடியும்!

அழகே!
இனி எல்லாமே
உன் முயற்சியில்தான்....
சரி...இந்தா
சில சூடான
முத்தங்கள்...

-எம். சுரேஷ்-

தேன் கிண்ணம்

இறந்து போவேன்!

நானும்
ஒருநாள்
இறந்து போவேன்...!

•••

ஜனனத்திற்கு அப்பால்
முடிவிலி
தூரத்தில்
என்
(ஜீவ) முகவரிகள்
தொலைந்து போகும்......
பூமியின்
பக்கத்து கிரகத்தில்
என்
புதிய முகவரி
தெளிவாய்
தெரியும்....

•••

வாழ்க்கைக்கு வெளியே
வேதனைகள் யாவும்
வற்றிப் போகும்....
கவலைகள்
காற்றோடு ஜீரணிக்கும்....
ஒரு
நிசப்தம் மட்டும்
எனக்குள்
நிரந்தரமாகும்....

•••

சுவாசங்கள்
சுத்தமாய்
சுருங்கிப் போகும்....
இருதயம்
இறுதித் துடிப்பை
பிரகடனம் செய்யும்....
என்
உதிர
உறவுகள்
சில கணங்கள்
கதறி அழும்.....
........!
பக்குவம் சுமந்த
எனக்கு
பாடை வந்து
படுக்கை விரிக்கும்.....
ஓ.....
நானும்
ஒரு நாள்
இறந்து போவேன்.....!

•••

ஒட்சிசன்
ஓரளவுக்கு
மிஞ்சிப் போகும்....
அப்போது மட்டும்
என்
வெற்றி (இ)டத்தை
இன்னொரு
ஜீவன் வந்து
நிரப்பிக் கொள்ளும்...!
இனி-
நானும்
ஒருநாள்
இறந்து போவேன்...!

அ. சுதாசேகர்-பொத்துவில்

துருவங்கள்!

வேறுபட்ட துருவங்கள்
ஒன்றையொன்று
வேகமாய் ஈர்க்கும்
என்கிறது
ஏட்டுச் சுரைக்காய்.
கறிக்கு உதவத்தானோ
நம் காளையரின்
கால்கள்....கைகள்...
கன்னியரின்
உப்புக் கன்னங்கள்?

ஜெ. மதுபாஷினி-வவுனியா.

மரணம்!

ஆசைகளின்
அசைவுகளில்
இன்பம்
காணும்வேளை
இறைவனின்
திமிர் 'விசா'!.....

புகை!

மனித
மடியில்
மலர்ந்த
புதிய
எய்ட்ஸ்...!

-சிறாஜ் நகர் றகுமான்-

இந்த வாரம் உங்கள் பலன்

(10.04.94 முதல் 16.04.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

நவக்கிரக சஞ்சாரம்

மீனம் - சூரியன், புதன், செவ்வாய்
மேடம் - வெள்ளி
இடபம் - கேது
துலாம் - வியாழன்
விருட்சிகம் - இராகு
கும்பம் - சனி

14.04.94இல் மேடச் சூரியன், பவ வருடப் பிறப்பு.

சந்திரன்- மீனம், மேடம், இடபம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்

மீனம்:

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

		சுப நேரம்
ஞாயிறு-	வெளியிடப் பயணம், மனக் கவலை.	பி.ப 2 மணி
திங்கள்-	பொருள் வரவு, உயர்ந்த நிலை.	காலை 7 மணி
செவ்வாய்-	முன்னேற்றம், பணத்தட்டுப்பாடு.	பகல் 12 மணி
புதன்-	நடைக் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு.	காலை 7 மணி
வியாழன்-	தெய்வானுகூலம், பணவரவு.	பகல் 11 மணி
வெள்ளி-	முயற்சி மேன்மை, உறவினர் உதவி.	பி.ப 2 மணி
சனி-	குடும்ப மேன்மை, கௌரவம்.	பி.ப 3 மணி

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 7

மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

		சுப நேரம்
ஞாயிறு-	காரிய சித்தி, பணவரவு.	காலை 8 மணி
திங்கள்-	தெய்வானுகூலம், மனமகிழ்ச்சி.	காலை 10 மணி
செவ்வாய்-	உறவினர் உதவி, காரியானுகூலம்.	பி.ப 1 மணி
புதன்-	தூரஇடப் பயணம், முயற்சி மேன்மை.	காலை 7 மணி
வியாழன்-	தனலாபம், பெரியோர் நட்பு.	பகல் 12 மணி
வெள்ளி-	தெய்வ நம்பிக்கை, செய்தொழில் விருத்தி.	காலை 8 மணி
சனி-	செலவு மிகுதி, உயர்ந்த நிலை.	பகல் 11 மணி

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 4

இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

		சுப நேரம்
ஞாயிறு-	புதிய முயற்சி, மன மகிழ்ச்சி.	காலை 9 மணி
திங்கள்-	தனலாபம், வெளியிடப் பயணம்.	காலை 10 மணி
செவ்வாய்-	வெளிவட்டார பழக்கம், உயர்ச்சி.	காலை 9 மணி
புதன்-	பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை.	பி.ப 1 மணி
வியாழன்-	வீண் மனஸ்தாபம், கௌரவம் குறைவு.	பகல் 11 மணி
வெள்ளி-	அந்நியர் பகை, அதிகார விருத்தி.	பகல் 12 மணி
சனி-	செலவு மிகுதி, பணக்கஷ்டம்.	காலை 8 மணி

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

		சுப நேரம்
ஞாயிறு-	பணவரவு, காரிய சித்தி.	காலை 9 மணி
திங்கள்-	செய்தொழில் விருத்தி, முன்னேற்றம்.	பி.ப 1 மணி
செவ்வாய்-	உத்தியோக உயர்ச்சி, முன்னேற்றம்.	காலை 9 மணி
புதன்-	உறவினர் உதவி, மனமகிழ்ச்சி.	பி.ப 1 மணி
வியாழன்-	வீண் மனஸ்தாபம், கௌரவம் குறைவு.	காலை 10 மணி
வெள்ளி-	அந்நியர் உதவி, செலவு மிகுதி.	காலை 7 மணி
சனி-	எதிர்பார்த்த கருமம் வெற்றி, உயர்ச்சி.	பகல் 12 மணி

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

		சுப நேரம்
ஞாயிறு-	உயர்ந்த நிலை, கௌரவம்.	காலை 7 மணி
திங்கள்-	மன மகிழ்ச்சி, புதிய முயற்சி.	பகல் 12 மணி
செவ்வாய்-	உறவினர் உதவி, குடும்ப நன்மை.	காலை 10 மணி
புதன்-	பொருள் வரவு, காரியானுகூலம்.	காலை 8 மணி
வியாழன்-	செய்தொழில் நட்டம், மனப்பயம்.	பி.ப 2 மணி
வெள்ளி-	முன்னேற்றம், உயர்ந்த நிலை.	பி.ப 1 மணி
சனி-	செலவு மிகுதி, பணக்கஷ்டம்.	காலை 6 மணி

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 3

மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

		சுப நேரம்
ஞாயிறு-	வெளியிடப் பயணம், தொழில் சித்தி.	காலை 7 மணி
திங்கள்-	காரிய சித்தி, பணவரவு.	பி.ப 2 மணி
செவ்வாய்-	மனக் கலக்கம், தொழில் கேடு.	காலை 8 மணி
புதன்-	வீண் சந்தேகம், சிநேகிதர் உதவி.	பகல் 12 மணி
வியாழன்-	மனக்குறை நீங்கும், புதிய முயற்சி.	காலை 9 மணி
வெள்ளி-	அந்நியர் உதவி, பணவரவு.	பகல் 11 மணி
சனி-	தெய்வ நம்பிக்கை, செலவு மிகுதி.	காலை 7 மணி

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -1

கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

		சுப நேரம்
ஞாயிறு-	மனமகிழ்ச்சி, உயர்ந்த நிலை.	பி.ப 2 மணி
திங்கள-	தனலாபம், பெரியோர் நட்பு.	காலை 9 மணி
செவ்வாய்-	வீண் தொல்லை நீக்கம், குடும்ப சுகம்.	பகல் 12 மணி
புதன்-	வெளியிடப் பயணம், கௌரவம்.	காலை 10 மணி
வியாழன்-	தெய்வானுகூலம், காரிய சித்தி.	பி.ப 1 மணி
வெள்ளி-	உயர்ந்த எண்ணம், மகிழ்ச்சி.	காலை 9 மணி
சனி-	பயனற்ற செயல், அரச விரோதம்.	பி.ப 2 மணி

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

		சுப நேரம்
ஞாயிறு-	துயர் நீங்கும், குடும்ப மகிழ்ச்சி.	காலை 8 மணி
திங்கள்-	வீண் மனக்கவலை, உறவினர் உதவி.	பகல் 12 மணி
செவ்வாய்-	வெளியிட வாசம், தனலாபம்.	பி.ப 2 மணி
புதன்-	செய்தொழில் நட்டம், உயர்ச்சி.	காலை 10 மணி
வியாழன்-	அரச சன்மானம், மன மகிழ்ச்சி.	பகல் 12 மணி
வெள்ளி-	தூரஇடப் பயணம், காரியசித்தி.	காலை 9 மணி
சனி-	உயர்ந்த எண்ணம், மனமாற்றம்.	பி.ப 1 மணி

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

		சுப நேரம்
ஞாயிறு-	உறவினர் உபசாரம், செய்தொழில் மேன்மை.	காலை 9 மணி
திங்கள்-	அரச சன்மானம், உயர்ந்த நிலை.	பகல் 12 மணி
செவ்வாய்-	முயற்சி மேன்மை, பணவரவு.	காலை 9 மணி
புதன்-	பணவரவு, கௌரவம்.	பி.ப 3 மணி
வியாழன்-	அந்நியர் உதவி, அரச சன்மானம்.	காலை 7 மணி
வெள்ளி-	குடும்ப சுகம், பாராட்டு.	பி.ப 2 மணி
சனி-	தெய்வானுகூலம், மன மகிழ்ச்சி.	காலை 6 மணி

அதிஷ்டநாள்-வியாழன்,அதிஷ்ட இலக்கம் -4

விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

		சுப நேரம்
ஞாயிறு-	வெளியிடப் பயணம், முன்னேற்றம்.	பகல் 12 மணி
திங்கள்-	தனலாபம், காரியானுகூலம்.	காலை 10 மணி
செவ்வாய்-	பெரியோர் நட்பு, முயற்சி பலிதம்.	காலை 10 மணி
புதன்-	காரிய சித்தி, கடன் பயம்.	பி.ப 1 மணி
வியாழன்-	உறவினர் பகை, உயர்ச்சித் தடை.	பி.ப 2 மணி
வெள்ளி-	தெளிவற்ற மனநிலை, வீண் வாக்குவாதம்.	காலை 7 மணி
சனி-	உத்தியோக மாற்றம், உயர்ச்சி.	பகல் 12 மணி

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

		சுப நேரம்
ஞாயிறு-	பணக்கஷ்டம், மனக் கவலை.	பி.ப 1 மணி
திங்கள்-	புதிய முயற்சி, மனக் குழப்பம்.	காலை 9 மணி
செவ்வாய்-	உறவினர் உதவி, கௌரவம்.	பகல் 11 மணி
புதன்-	தூர இடப் பயணம், வெற்றி வாய்ப்பு.	காலை 10 மணி
வியாழன்-	பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி.	காலை 7 மணி
வெள்ளி-	காரிய சித்தி, பணவரவு.	பி.ப 1 மணி
சனி-	பணக் கஷ்டம், செலவு மிகுதி.	காலை 9 மணி

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

		சுப நேரம்
ஞாயிறு-	பெரியோர் உதவி, முன்னேற்றம்.	காலை 9 மணி
திங்கள்-	தனலாபம், உயர்ச்சி.	பகல் 11 மணி
செவ்வாய்-	வீண் முயற்சி, புதிய தொழில் விருத்தி.	காலை 7 மணி
புதன்-	பணவரவு, காரியசித்தி.	பகல் 12 மணி
வியாழன்-	வீண் மனஸ்தாபம், மனக் கவலை.	காலை 9 மணி
வெள்ளி-	அந்நியர் உதவி, புகழ்ச்சி.	பகல் 11 மணி
சனி-	செய்தொழில் உயர்வு, முன்னேற்றம்.	காலை 7 மணி

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 5

அறிந்து கொள்ளுங்கள் — ஆரோக்கியம் பெறுங்கள் — ஆனந்தமாய் வாழுங்கள்

மருத்துவ ✝ விந்தைகள்

காதின்றி பிறந்த குழந்தை

ஆச்சரியமான சத்திர சிகிச்சை

பிறந்தது முதல் காது கேட்காமலும், அப்பகுதியில் துவாரமின்றி மூடி காதுமடலும் இல்லாமலும் இருந்த 3 வயது பெண் குழந்தைக்கு சத்திரசிகிச்சை காதுகேட்கும் சக்தியை தந்திருக்கிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வங்கி ஊழியராக இருப்பவர் சீனிவாசன். இவரது மனைவி பெயர் சுமதி. இவர்களுக்கு பிறந்த சிந்துஜாவுக்கு அங்கஹீனம் எதுவும் கிடையாது. ஆனால் இயல்பாக காது இருக்க வேண்டிய இடத்தில் சதை மட்டும் லேசாக வெளியில் தெரிந்தபடி இருந்தது.

குழந்தைக்கு கேட்கும் சக்தியும் இல்லை. பேசவும் முடியவில்லை. காது,மூக்கு, தொண்டை டாக்டர்கள் ஆலோசனையைப் பெற்று கடைசியில் சென்னை ராயப்பேட்டையில் உள்ள சிவா இ.என்.டி..ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். காது நோய் விசேஷ டாக்டர் எம்.குமரேசன் சிந்துஜாவுக்கு சிகிச்சை தர முன்வந்தார்.

குடும்பத்தில் யாருக்கும் காது கேட்காத குறை இல்லை என்றும், இயல்பாக பிறந்த குழந்தை என்பதையும் விசாரித்து அறிந்தார். உடனடியாக காது உட்பகுதியை சோதனையிட 'சி.டி.ஸ்கேன்' உட்பட பலமுக்கிய பரிசோதனைகள் நடத்தப்பட்டன. பின்பு காதுமடலுக்கு பின்புறம் மூளைப் பகுதிக்கு கீழே சத்திரசிகிச்சை செய்ய முடிவு செய்யப் பட்டது. மூளைக்கு எவ்வித பாதிப்பின்றி சத்திரசிகிச்சை செய்து காது உட்பகுதியில் உள்ள துவாரத்திற்கு தடையாக இருந்த எலும்புகள் அகற்றப்பட்டன. இயல்பாக இருப்பது போல் துவாரம் அமைய சிந்துஜா தொடைப்பகுதியில் இருந்து சதை எடுக்கப் பட்டு சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. முதன் முதலில் வலது காதை இம்மாதிரி 3 தடவையாக கடந்த 1992ல் டாக்டர் குமரேசன் செய்து முடித்தார்.

அடுத்ததாக இடது காது இப்போது சீராக்கப்பட்டிருக்கிறது. இப்போது இன்னமும் சிந்துஜாவின் இரு காதுகளிலும் புறமடல் கிடையாது. வலது காது ஆபரேஷன் முடிந்ததும் காது கேட்கும் கருவி மூலம் கேட்கும் திறனை அதிகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. பிளாஸ்டிக்கில் மடல் செய்து அதில் காதுகேட்கும் கருவியை பொருத்தி சிந்துஜாவின் தலைமுடியில் கிளிப் போட்டு நிறுத்தி வைத்தனர்.

சிறுமி சிந்துஜாவுக்கு முதலில் பயம். ஆனால் இப்போது இந்தக் கருவி இருப்பதால் வெளி உலக தொடர்பு இருப்பது கண்டு ஆர்வமாக அணிகிறாள்.

இடது காதில் முதல் கட்ட ஆபரேஷன் முடிந்து துவாரம் ஏற்படுத்தியாகிவிட்டது. இதனால் இப்போது ஒலியை சிந்துஜாவால் கிரகிக்க முடிகிறது.

ஆனால் மற்ற குழந்தைகள் போல பேச முடியவில்லை. ஆகவே இத்துடன் பேச்சுப் பயிற்சியும் தரப்படுகிறது.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் மற்ற குழந்தைகளைப் போல எந்த வித குறைபாடும் இன்றி சிந்துஜா பேசமுடியும் என்கிறார் டாக்டர் குமரேசன்.

காதுமடல் பொருத்தப்படும் ஆபரேஷன் முடிந்துவிட்டால் உள்பகுதி மட்டுமல்ல, புறத்தோற்றமும் அழகாக்கப்படும் என்கிறார் அவர்.

குழந்தையின் முன்னேற்றம் கண்டு பெற்றோருக்கு அபார மகிழ்ச்சி. ஆனால் இந்த சிகிச்சைக்கு இதுவரை ரூ 1.3 இலட்சம் செலவாகி இருப்பதாகவும், அதை கடனாகப் பெற முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரம் பெரிதும் உதவியதாக வங்கி ஊழியர் சீனிவாசன் கூறினார்.



சத்திரசிகிச்சைக்குப் பின்பு சிந்துஜா-காதில் துவாரம் இருக்கிறது.
(உள்படம் முன்பிருந்த காதின் நிலை)

பிறந்தநாளைத் தெரிந்துகொள்ள இதோ ஒரு சுலபமான வழி!

A ஆண்டுகள்				B மாதங்கள்											
1901-2000				ஜ.	பெ.	மா.	ஏ.	மே.	ஜூ.	ஜூ.	ஆ.	செ.	ஒ.	நவ.	டி.
	25	53	81	4	0	0	3	5	1	3	6	2	4	0	2
	26	54	82	5	1	1	4	6	2	4	0	3	5	1	3
	27	55	83	6	2	2	5	0	3	5	1	4	6	2	4
	28	56	84	0	3	4	0	2	5	0	3	6	1	4	6
01	29	57	85	2	5	5	1	3	6	1	4	0	2	5	0
02	30	58	86	3	6	6	2	4	0	2	5	1	3	6	1
03	31	59	87	4	0	0	3	5	1	3	6	2	4	0	2
04	32	60	88	5	1	2	5	0	3	5	1	4	6	2	4
05	33	61	89	0	3	3	6	1	4	6	2	5	0	3	5
06	34	62	90	1	4	4	0	2	5	0	3	6	1	4	6
07	35	63	91	2	5	5	1	3	6	1	4	0	2	5	0
08	36	64	92	3	6	0	3	5	1	3	6	2	4	0	2
09	37	65	93	5	1	1	4	6	2	4	0	3	5	1	3
10	38	66	94	6	2	2	5	0	3	5	1	4	6	2	4
11	39	67	95	0	3	3	6	1	4	6	2	5	0	3	5
12	40	68	96	1	4	5	1	3	6	1	4	0	2	5	0
13	41	69	97	3	6	6	2	4	0	2	5	1	3	6	1
14	42	70	98	4	0	0	3	5	1	3	6	2	4	0	2
15	43	71	99	5	1	1	4	6	2	4	0	3	5	1	3
16	44	72	00	6	2	3	6	1	4	6	2	5	0	3	5
17	45	73		1	4	4	0	2	5	0	3	6	1	4	6
18	46	74		2	5	5	1	3	6	1	4	0	2	5	0
19	47	75		3	6	6	2	4	0	2	5	1	3	6	1
20	48	76		4	0	1	4	6	2	4	0	3	5	1	3
21	49	77		6	2	2	5	0	3	5	1	4	6	2	4
22	50	78		0	3	3	6	1	4	6	2	5	0	3	5
23	51	79		1	4	4	0	2	5	0	3	6	1	4	6
24	52	80		2	5	6	2	4	0	2	5	1	3	6	1

C வாரநாட்கள்						
ஞா	1	8	15	22	29	36
தி	2	9	16	23	30	37
செ	3	10	17	24	31	
பு	4	11	18	25	32	
வி	5	12	19	26	33	
வெ	6	13	20	27	34	
ச	7	14	21	28	35	

உங்கள் பிறந்த ஆண்டு, மாதம், திகதி அத்தனையும் தெரியும். ஆனால் அன்று என்ன நாள் (கிழமை) என்பது தெரியவில்லை. கவலை வேண்டாம். 1901 முதல் 2000ம் ஆண்டுக்குள் எந்த வருடம், எந்த மாதம் எந்தத் திகதி என்றாலும் அதற்குரிய தினத்தை இந்த எளிய முறையில் கண்டு பிடிக்கலாம்.

இங்கே 3 பட்டியல்கள் வெவ்வேறாக உள்ளன.

பட்டியல் A- 1901-2000 வரையிலான வருடங்களைக் குறிக்கும்.

பட்டியல் B -ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான மாதங்களைக் குறிக்கும்.

பட்டியல் C – ஞாயிறு முதல் சனி வரையிலான வார நாட்களைக் குறிக்கிறது.

நீங்கள் 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22ம் திகதி பிறந்தவரானால் அன்று என்ன கிழமை என்று அறிய வேண்டுமா?

A-பட்டியலில் 94 எங்கே இருக்கிறது என்பதைக் கண்டுபிடியுங்கள். அங்கிருந்து வலது புறமாக உங்கள் விரலை நகர்த்தி ஆகஸ்ட் மாதத்தைக் குறிக்கும் A அடையாளமிட்ட 8வது வரிசையின் கீழ் உள்ள எண்ணைப் பாருங்கள். அங்கு இல. 1 காணப்படுகிறது. உங்கள் பிறந்த திகதி 22. அத்துடன் மாத எண்ணான 1 ஐக் கூட்டுங்கள். (22+1=23) 23 இலக்கத்தை 'C' பட்டியலில் தேடிப் பிடியுங்கள். 23ம் இலக்கம் திங்கட்கிழமை என்பதைக் காட்டும். ஆகவே 1994 ஆகஸ்ட் 22 திங்கட் கிழமை என்பதே உங்கள் பிறந்த நாளாகும். ●

கையருகில் வைத்தியம்

தோல் வறட்சியைப் போக்க:

குளிக்கும் பொழுது தண்ணீருடன் ஒரு கிளாஸ் பாலைக் கலந்து கொள்ளுங்கள். பாலிலுள்ள புரதம் தோலின் வறட்சியைப் போக்குவதுடன் அதை மிருதுவாக வைக்கவும் உதவுகின்றது. (ஒரு கப் உப்பை கூட குளிக்கும் தண்ணீரில் கரைத்துக் குளிக்கலாம். பலன் கிட்டும். உப்பு நீரை பின்பு கழுவிவிட வேண்டும்)

பூச்சிக் கடிக்கு:

கொசு, மூட்டைப் பூச்சி போன்ற பூச்சிகள் கடிப்பதால் ஏற்படும் அரிப்பைப் போக்க, உணவில் பயன்படுத்தும் சோடா மாவைத் தண்ணீருடன் சேர்த்துப் பிசைந்து கெட்டியாக கடித்த இடத்தில் பூசுங்கள். அதில் உள்ள அமிலத்தன்மை அரிப்பைக் குறைக்கும்.

உடைந்த கொப்பளத்திற்கு மருந்து:

சாதாரண கொப்பளத்திற்குச் சிறந்த மருந்து அதைத் தொல்லை செய்யாமல் விட்டுவிடுவதுதான். தானாக உடையும் பட்சத்தில், சோப்புக் கலந்த நீரால் அந்த இடைத்தைத் துடைத்து ஒரு பேண்டேஜை அதன் மீது போடுங்கள். சின்னத் தீக்காயங்களை குளிர்ந்த நீரால் சுத்தம் செய்ய வேண்டும்.

அரிப்பைக் குறைக்க:

பூச்சிக்கடி அல்லது விஷச்செடிகளினால் ஏற்படும் அரிப்பைப் போக்க, அரிப்புள்ள பகுதியின் சீதோஷ்ண நிலையை மாற்ற குளிர் நீரைப் பயன்படுத்துங்கள். அரிப்புள்ள இடத்தைச் சுற்றி குளிர்ந்த நீரில் நனைக்கப்பட்ட துணியைக் கொஞ்ச நேரம் கட்டுங்கள். மூன்று மணி நேரத்திற்கு வலி தெரியாது.

நசுங்கிய விரலின் வலியைப் போக்க:

நசுங்கிய விரலை உடனே குளிர்ந்த நீருக்குள் விடுங்கள். வலி நீங்குவதுடன் அதிகமாக வீங்காது.

வலது குறைந்தபெண்ணுக்கு

வலது கரமாய் உதவும் நாய்

நரம்புத் தளர்ச்சி நோய் கண்டு சுயமாக நடமாட முடியாத சுசான் டங்கன் என்ற 37 வயதான பெண்மணிக்கு சகல உதவிகளையும் புரிகிறது ஜோயி என்ற நாய். இத்தனைக்கும் தேடுவாரற்று வீதி வழியே திரிந்த அந்த நாயை எடுத்து வளர்த்தார் சுசான்.

கடையில்...

சுசானுக்கு தோமாஸ் டங்கன் (40) என்ற கணவனும் இரு பிள்ளைகளும் இருக்கின்றனர். இருப்பினும் ஜோயிதான் சுசானுக்கு அன்றாடம் வேண்டிய அத்தனை பணிகளையும் முடிக்க உதவும்.

பொழுது புலர்ந்ததும் சுசானை படுக்கையிலிருந்து எழுப்பிவிடுகிறது. பிஜாமா எனப்படும் இரவு நேர உடையினையும் கால் பகுதியிலிருந்து தனது வாயால் கவ்வி இழுத்து கழற்றி விடுகிறது.

கட்டிலிலிருந்த வண்ணம் சுசான் ஏறக்கூடிய விதத்தில் சக்கர நாற்காலியை கட்டிலுக்கு அருகே கொண்டு வந்து சேர்க்கிறது ஜோயி.

உடைகள் வைக்கப்பட்டிருக்கும் அலுமாரியைத் திறந்து சுசான் சுட்டிக்காட்டும் உடையினை, தனது பின்னங்கால்களில் நின்ற வண்ணமே வாயால் கவ்வி எடுத்துத் தருகிறது.

கதவு திறத்தல், தொலைபேசி மணி அடித்தால் அதனை வாயால் கவ்வி எடுத்தல் போன்ற பணிகளையும் இந்நாய் மனிதர்களைப் போன்று செய்து சுசானுக்குப் பேருதவியாக விளங்குகிறது. கடைகளுக்குச் செல்லும் சுசான் தன்னுடன் ஜோயியையும் அழைத்துச் செல்கிறார். குறிப்பிடும் பொருட்களை குறிப்பிட்டபடி கடைகளுக்குள் பொறுக்கிச் சேர்க்கிறது. சுசானின் இடதுபுறம் மிகவும் பலவீனமற்றிருப்பதால் அவர் தினசரி 15 தடவைகளாவது சரிந்து விழுந்து விடுகிறார். வேறு யாரும் இல்லாதபோது சுசான் கீழே சரிந்தால் ஜோயி உடனே அவளருகில் சென்று மேலே உயர்த்திவிட பல உதவிகளைச் செய்கிறது.

சுசானின் இயலாத்தன்மையினை நன்குணர்ந்த ஜோயி இரவு பகல் 24 மணிநேரமும் சுசானுடனேயே திரிகிறது.

சுசானுக்கு ஜோயி துணையாகக் கிடைத்ததே ஒரு பெரும் அதிஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.

தெருவழியே தேடுவாரற்றுத் திரிந்த இந்த நாயை உயிரின நல்லாதரவுச் சங்கத்தினர் பிடித்து வேறு சில பிராணிகளுடன் வைத்திருந்தனர். தற்செயலாக சுசான் அங்கு சென்றிருந்தபோது இந்த நாய் சுசானைக் கண்டு வாலை ஆட்டி தனது மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறது. இந்தச் சங்கத்தின் செயலதிபர் லிண்டா ஹைறன்ஸ் என்பவரிடம் கேட்டு இந்த நாயை வளர்ப்பதற்கு அனுமதி பெற்றார். இதற்கு ஜோயி என்ற பெயரையும் சூட்டி கடந்த 3 ஆண்டுகளாக சுசான் வளர்த்து வருகிறார்.

தனக்கு உதவ முன்வந்த பெண்ணுக்கு அந்த நாய் தன்னாலான உதவிகளைச் செய்கிறது.

இத்தகைய பணிகளைப் புரியும் ஜோயிக்கு கடந்த வருடத்திற்கான 'மனிதர்களுக்கு உதவும் பிராணி' என்ற விருது கிடைக்கவிருப்பதாக லிண்டா ஹைறன்ஸ் தெரிவித்தார்.

தொலைபேசியை எடுத்து தருகிறது......

①.. ②.. ③.. ④.. ⑤.. ⑥.. ⑦.. ⑧....

9 எழுதுவது

ரசிகன்

கொலை— விழும் நேரம்

"தூங்காத கண்ணென்று ஒன்று
துடிக்கின்ற சுகமென்று ஒன்று
தாங்காத மனமென்று ஒன்று
தந்தாயே நீ என்னைக் கண்டு.
முற்றாத இரவொன்றில் நான் வாட
முடியாத கதையொன்று நீ கூற...
உற்றாரும் காணாமல் உயிரென்று சேர்ந்தாட
உண்டாகும் சுவையென்று ஒன்று!"

-கவியரசு கண்ணதாசன்-

மறுமுனையில் பிரியாவின் குரல் கேட்க, குலாம்ஷாவின் இல்லத்தில் இவள் எப்படி? என்று மனதில் கேள்வி எழுந்துகொள்ள,

"நீயா?"

என்றார் வியப்பு ஃபோன் வழியே வெளிப்பட டி.ஐ.ஜி. டென்சில்.

"நானேதான் டி.ஐ.ஜி. அதில் என்ன சந்தேகம்?"

என்றாள் குரலில் தொனித்த கேலி ஃபோன் வழியே தெரிய பிரியா. பிரியா பசுபதி.

"நீ எப்படி?"

"அங்கே போனாய்? உனக்கெப்படி குலாம்ஷா தெரியும். ஷா அங்கில்லாதபோது நீ ஏன் இருக்கிறாய்? எப்படி ஃபோன் எடுக்கிறாய்? என்றெல்லாம் கேட்கப் போகிறீர்களா டி.ஐ.ஜி? கட் இட்! பதில் சொல்வதாக இல்லை."

"திமிரா?"

"ஐ.திங்.....நோ."

முன்னால் நின்றிருந்தால் உதைத்திருப்பார். அத்தனை திமிர் குரலில். வேண்டுமென்றே சினம் ஊட்டி மறுபக்கத்தில் வேடிக்கை பார்க்கும் உத்தி. மனதில் பிரியா என்று பெயர் எழுதி, கண்டிப்பாக, கவனமாக அவதானிக்கப்படவேண்டியவள் என்று பக்கத்தில் குறிப்பெழுதி மனதில் பத்திரப்படுத்திக்கொண்டு உள்ளேயிருந்த சினம் குரலில் வராமல் சுத்தமாய் துடைத்துக்கொண்டு கேட்டார்,

"குலாம்ஷா எங்கே?

"யூமீன் இன்ஸ்பெக்டர் குலாம்ஷா?"

திரியை தூண்டிவிடுகிறாள். உள்ளே எரிகிறது. தீ தொடாத தூரத்தில் உள்ள துணிச்சல். எரிச்சல் அடக்க முடியாமல் குரலில் பரவிக்கொள்ள,

"இந்த விளையாட்டெல்லாம் எனக்குப் பிடிக்காது பெண்ணே. மரியாதைக்கு மரியாதை. அதுதான் என் முறை."

சொல்ல, மறுமுனையில் பிரியா சிரித்தாள். எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல் குலுங்கிச் சிரிப்பது ஓசையில் புரிந்தது. சட்டென்று சிரிப்பு நிறுத்திக்கேட்டாள்,

"இல்லாவிட்டால் என்ன முறையை எந்த வகையில் பயன்படுத்துவீர்கள் என்று அறியலாமா...?"

"லாம்!"

"தாங்யூ டி.ஐ.ஜி.!"

"தேவையில்லை. அதை நீயே வைத்துக்கொள்."

சிரித்தாள்.

"உங்கள் உயிர் நண்பர் மிஸ்டர் குலாம்ஷா உங்களுக்கு கோபமே வராது என்றார் பாருங்கள். வரவைத்துக்காட்டுகிறேன் என்றேன். வைத்துவிட்டேன். வெற்றிக்கு உதவிய உங்களுக்கு நன்றி சொல்லாமல் போனால் அவ்வளவு நன்றாக இருக்காது டி.ஐ.ஜி.!"

புரிந்துகொள்ள முடியாதவளாய் இருக்கிறாள். உண்மையில் வெள்ளைத் தாள் தானா? அல்லது பொலிசின் கண்ணில் விரல் விட்டுப் பார்க்கும் ஆசையா? காரின் முதுகுக் கண்ணாடியில் ரோஜாப் படம். தொடர் கொலைகளிலும் எட்டிப்பார்க்கும் ரோஜாப்பூ. என்ன சம்பந்தம்? சந்தேகப் பட்டியலில் முதல் பெயராக இருப்பவள் எப்படி குலாம்ஷா வீட்டில்? யோசனை விரிந்தது.

"என்ன சத்தத்தையே காணவில்லை. ஏமாற்றம் வருத்தமா? அல்லது..வெட்கமா டி.ஐ.ஜி.?"

"இரண்டும் இல்லை. எங்கே குலாம்ஷா?"

"சொன்னால் கோபிக்க மாட்டீர்களே?"

"கோபிக்கலாமா இல்லையா என்பதை சொன்னபிறகுதானே தீர்மானிக்கவேண்டும் சொல்லு."

"ஒருமையில் பேசுகிறீர்கள். ஐ மீன் நீங்கள் நீயாகியிருக்கிறது. நெருங்கிவருகிறோம் நாங்கள் என்று நினைக்கிறேன்... ஆ... என்ன கேட்டீர்கள்? கிரைம்புலி குற்றவாளிகளை தேடி புறப்பட்டுவிட்டது."

டி.ஐ.ஜி. டென்சில் ஒரு கணம் திகைத்து, உண்மை சொல்கிறாளோ என்று யோசித்து,

"குலாம்ஷா இன்னமும் லீவில்தான் இருக்கிறார் மிஸ் பிரியா?"

"நாட்டின் பிரஜை பொலிசுக்கு உதவுவது கடமையல்லவா? கடமையைச் செய்யவும் விடமாட்டீர்கள் போல் இருக்கிறதே டி.ஐ.ஜி.?

"ஓ.கே.ஷா வந்தால் என்னோடு உடனே பேசச் சொல்ல முடியுமா?"

"முடியும்!"

சிரித்தாள். கேலி செய்கிறாளா தெரியவில்லை. டென்சில் ரிசீவர் சாத்தினார்.

'பிரியாவுக்கும் குலாம்ஷாவுக்கும் எப்படி உறவு? ஒருவேளை குலாம்ஷாவும் ஏமாற்றப் பட்டு, ஏமாந்துபோய்... கூடாது. குலாம்ஷா வோடு உடனே பேசவேண்டும். இப்போது எங்கே இருப்பார் குலாம்ஷா?' டென்சில் பதட்டமாகி யோசித்தார்.

■

அவன் முதலிரவு அறைக்குச் செல்லும் மணப்பெண் போல அடிமேல் அடிவைத்து, மனதில் வேகம் இருந்தாலும், நடையில் அந்த வேகம் தெரியாமல் அறை நோக்கி நிதானமாய் நடந்தான்.

கதவு மெல்லியதாய் திறந்திருக்க உள்ளே கட்டிலில் சித்ரா. சித்ராவையே கட்டிலாக்கி மேலே மனோகர் தெரிந்தான். மனோகரின் தோளில் இடக்கரத்தால் அழுத்திக்கொண்டு, வலக்கரம் உயர்த்தி அவன் காது திருகி, 'களுக்' என்று சிரித்தாள் சித்ரா.

'நன்றாய் சிரி பெண்ணே! இருளுக்கு முந்தைய ஒளிபோல, சாவதற்கு முன் சந்தோசமாகச் சிரி பெண்ணே.' அவன் மனதுக்குள் சொல்லிக்கொண்டான்.

"மூச்சு முட்டுகிறது மனோ. எத்தனை கிலோ நீ?"

கிசு கிசுப்பாய் கேட்டாள் சித்ரா.

"வண்டிடம் பூ உன் நிறையென்ன என்று கேட்பதில்லை சித்."

ஆட்காட்டி விரல் நீட்டி அவள் கீழ் உதட்டின்மீது வருடினான். அவன் தோளில் அழுத்திய இடக்கரம் இறக்கி சித்ரா அவன் முதுகில் குத்தினாள்.

"நீ மிக மோசம் மனோ."

சித்ரா தங்கச் சங்கிலி அணிந்திருந்தாள். சங்கிலியில் நீல நிறத்தில் அழகான பென்ரன் கொழுவியிருந்தாள். சித்ராவின் உயர்ந்து தாழும் இரு அழகுகளும் பென்ரனை தமக்கிடையே வைத்துக்கொண்டிருக்க, மனோகரனின் வலது கரம் விரல் நீட்டி பென்ரன் தொட,

"இது என்ன புதுசா சித்? ரொம்ப அழகாக இருக்கிறதே."

அவன் விரல்களை தனது விரல்களால் அழுத்தியபடியே, வலது கரம் உயர்த்தி அவன் தலை முடிக்குள் விரல் செலுத்திக் கோதினாள். நெருப்பை தழுவி வரும் காற்றுப்போல் வெப்பமாய் அவள் மூச்சுவிட, மனோகர் அப்படியே கவிழ்ந்தான்.

அவன் அறைக்குள் காலடி எடுத்து வைத்தான்.

சித்ராவின் கழுத்தில் முகம் புதைத்திருந்த மனோகர் முகம் நிமிர்த்த முயல, சித்ரா வலக்கரத்தால் அவன் பிடரியை அழுத்தி தடுக்க,

'நன்றி பெண்ணே' என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டு, முதுகில் தொங்கிய பைக்குள் கைவிட்டு பிஸ்டல் எடுத்தான்.

சித்ராவின் கழுத்தில் முகம் புதைத்திருந்த மனோகரின் உச்சந்தலை நோக்கி பிஸ்டல் நீட்டி குறிபார்த்தான்.

மனோகர் தலை உயர்த்தாமல் சித்ராவின் கழுத்தில் இருந்து மெல்ல முகம் இறக்கி கீழே கொண்டுபோக,

அவன் பிஸ்டல் விசையில் விரல் அழுத்தமுன் மீண்டும் ஒரு முறை குறி சரியா என்று பார்த்துக்கொண்டான்.

மனோகரின் முகம் இப்போது சித்ராவின் மார்பில் இருக்க, சூடான மூச்சோடு உடலை இருபுறமும் அசைத்து முணு முணுத்தாள். இடது கால் மடக்கி கட்டிலில் உதைத்தாள்.

'இனியும் தாமதித்தல் கூடாது' விசை நோக்கி விரல் போக,

அந்த நொடியே அவன் பின்புறமிருந்து நீண்டு அவன் உதடுகளை பொத்தியது ஒரு கரம். மறுகரம் நீண்டு பிஸ்டல் வைத்திருந்த கரத்தை பற்றியது.

எவ்வித சப்தமும் காட்டாமல் அவனை வளைத்துப் பிடித்து பின்புறமாய் நகர்த்தியபடி அறைக்கு வெளியே கொண்டுவந்தது.

"மனோ...போதும்...மனோ..."

என்று சித்ரா முணுமுணுத்துக் கொண்டிருந்தது அறைக்கு வெளியேயும் மெல்லக் கேட்டது.

உள்ளே வரும்போது முன் ஹோல் கதவை தாள் போட மறந்தது இப்போதுதான் அவனுக்கு உறுத்தியது.

அவனை மடக்கிப் பிடித்திருந்த உருவம் முகத்தை கறுப்புத் துணியால் மூடிக் கட்டியிருந்தது.

அவன் பிடறியில் அதன் மூச்சுக்காற்று பட்டுக்கொண்டிருக்க,

"எதிர்க்க நினைக்காதே. உத்தரவுப்படி நட. உனக்கு உதவுவதே என் நோக்கம்."

காதோடு கிசு கிசுத்தது. அவன் மௌனமாய் நின்றான். பிஸ்டல் இன்னமும் கையில் இருந்தது. மணிக்கட்டில் அந்த உருவத்தின் கரம் அழுத்திக்கொண்டிருந்தது.

"முன்னே செல். பின்னே திரும்ப முயற்சி செய்யாதே. ம்...போ."

போனான். பிடி தளர்த்தாமல் முதுகோடு ஒட்டியபடி உருவமும் நகர்ந்து வந்தது.

வெளியே ஒரே இருட்டாக இருந்தது.

இப்போது என்ன செய்யலாம்? யார் இவன். எனக்கு உதவுவதாக சொல்வதை எப்படி நம்புவது? உதவுவது நோக்கம் இல்லையென்றால் எதற்கு சத்தம் கித்தம் போடாமல் பத்திரமாய் மடக்கி வெளியே கொண்டு வந்திருக்கிறான்? யோசித்தான்.

"இடது புறம் திரும்பி நட."

சிறிது தூரம் நடக்கும்போது உருவம் சொன்னது.

"பிஸ்டலை உன் பைக்குள் போட்டுக் கொள். நான் உன்னை நம்புகிறேன் நூறு வீதம்!"

மணிக்கட்டில் இருந்த பிடி விலக்கியது.

முதுகுப்பையில் பிஸ்டலை வைக்கப் போனவன், மறு நொடியே முடிவு மாற்றி பலம் கொண்ட திமிறலில் பிடியில் இருந்து மீண்டு, முன்னே துள்ளி நகர்ந்து, பின்புறமாய் திரும்பி அந்த உருவத்தை நோக்கி பிஸ்டல் நீட்டினான்.

இருளை நடுங்கவைப்பது போல் இடியென்று நகைத்தது உருவம்.

■

கடற்கரையில் கூடியிருந்த கூட்டம் வழிவிட முன்னே வந்து, தரையில் கிடந்த பிணம் பார்த்தார் டி.ஐ.ஜி. டென்சில்.

நீல நிறத்தில் ஜீன்ஸ் அணிந்து அதற்குத் தோதாக நீல கோடுகள் போட்ட வெள்ளைச் சட்டை அணிந்து முகம் தரையில் முத்த மிட்டபடி இருக்க பிணமாகக் கிடந்தான்- இளைஞனாகத் தெரிந்தான்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை கடல்தடை காரணமாக படகுகள் எதுவுமில்லாமல் வெறுமையாய் தெரிந்தது கடலின் மடி.

குளிர்காற்று வந்து தொட்டுச் சென்று சூழ்நிலையின் வெப்பத்தை தணிக்கப் பார்த்தது.

"யார் முதலில் பார்த்தது?"

முன்னரே வந்து, டி.ஐ.ஜி. வரும்வரை காத்திருந்த ஏரியா இன்ஸ்பெக்டர் சிறீதரன் பதில் சொன்னார்.

"முதலில் பார்த்து தகவல் கொடுத்தது இவர்தான் சேர்."

நடுத்தர வயதான ஒருவர் கைகளை மார்பின் குறுக்கே கட்டியபடி அருகே வந்தார்.

"பார்க்கும்போது எத்தனை மணி?"

"அதிகாலை நாலு நாலரை மணி இருக்கலாம் ஐயா."

"இங்கே ஏன் வந்தீர்கள்?"

"காலையில் காலாற நடப்பது வழக்கம் ஐயா."

"சந்தேகப்படும்படி யாராவது கண்ணில் பட்டார்களா? மிஸ்டர்...உங்கள் பெயர் என்ன?"

"காரியவாசம்."

"சொல்லுங்கள் காரியவாசம். யாராவது அப்படி தெரிந்தார்களா?"

காரியவாசம் சுற்றும் முற்றும் பார்த்தார். முகத்தில் கலவரம் தெரிந்தது. டி.ஐ.ஜிக்கு மிக அருகில் போய், குரலை தாழ்த்திச் சொன்னார்,

"சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள் ஐயா? ஒரு காரில்தான் பிணத்தை கொண்டு வந்திருக்க வேண்டும். கார் புறப்பட்டுப் போனதை கண்ணால் பார்த்தேன். காருக்குள் இருந்தது யார் என்கிறீர்கள்? அது...அது.."

வேடிக்கை பார்த்த கூட்டம் காதுகளை கூர்மையாக்குவது தெரிந்து காரியவாசம் பேச்சை கை உயர்த்தித் தடுத்தார் டி.ஐ.ஜி. டென்சில்.

சொல்ல வந்ததை நிறுத்தி மௌனமானார் காரியவாசம்.

"இன்ஸ்பெக்டர் சிறீதரன். இவரை பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லுங்கள்..... வேண்டாம் நேரே என் அலுவலகத்துக்கு அழைத்துப் போங்கள். உடம்பை யாரும் தொடவில்லையல்லவா?"

"நோ சேர். நீங்கள் வந்தபின் மேற்கொண்டு எதுவும் செய்யலாம் என்று.."

"குட்....உங்கள் ஏரியாவில் நேற்றும் ஒரு கொலை. லீலா! இன்றும் ஒரு கொலை. இந்த முறை விருது பெறும் பெயர்களோடு சிறீதரன் என்றும் சிபாரிசு செய்யலாம் என்று நினைக்கிறேன். உங்கள் அபிப்பிராயம் எப்படி?"

தலையைச் சொறிந்தபடி தரை பார்த்து குனிந்தார் சிறீதரன்.

கூட்டத்தில் நின்று காரியவாசத்தையே கவனித்துக்கொண்டிருந்தன ஒரு ஜோடிக் கண்கள். காரியவாசம் டி.ஐ.ஜியையும், இன்ஸ்பெக்டரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இன்ஸ்பெக்டர் சிறீதரன் பின் தொடர பிணத்தின் அருகில் சென்றார் டி.ஐ.ஜி.

"உடம்பை திருப்புங்கள்."

உத்தரவு கேட்டு, அருகே காவலாய் நின்ற கொன்ஸ்டபிள் பிணத்தை திருப்ப, முகத்தைப் பார்த்த டி.ஐ.ஜி.,

ஆயிரம் வோல்ட் மின்சாரத்தை மிதித்தது போல, சகலமும் அதிர்ந்து, முகம் மாறி அசையாது நின்றார்.

எதிர்பாராத அதிர்ச்சிகள் ஏற்படும் போது நடந்தது பொய்யோ என்று சந்தேகம் வருவதுண்டு.

டி.ஐ.ஜி.டென்சிலுக்கும் அந்தச் சந்தேகம் வந்தது.

மீண்டும் ஒரு முறை அந்த முகத்தை உற்றுப் பார்த்தார்.

சந்தேகமேயில்லை. அது...அது...

பூபால் அன்ட் பிரதர்ஸ்' மனேஜர் மனோகரின் முகமேதான்.

அதே நேரம் காரியவாசத்தை மறந்து விட்டோமே என்று நினைத்து, திரும்பி, கூட்டத்தின் மத்தியில் காரியவாசம் எங்கே நிற்கிறார் என்று விழிகளை ஓடவைத்து தேடினார் இன்ஸ்பெக்டர் சிறீதரன்.

காரியவாசம் அங்கே காணாமல் போயிருந்தார்.

■

அந்த பொது அரங்கம் கிட்டத்தட்ட நிரம்பியிருந்தது.

நாற்காலிகளை ஆக்கிரமித்திருந்தவர்களில் அநேகமானோர் பெண்கள்.

மேடையில் இருந்த நாற்காலிகள் மட்டும் இன்னமும் சுமை வாங்காமல் வெறுமையாய் தெரிய, இரு கரங்களும் கட்டப்பட்டு, உதட்டில் ஒரு பூட்டுத் தொங்கவிட்டதுபோல் ஆளுயர ஓவியம் ஒன்று மேடையின் மையத்தில் பின் சுவரில் பொருத்தப்பட்டிருந்தது.

நகம் கடித்துக்கொண்டிருந்த பெண் மெல்ல முகம் திருப்பி தன் அருகில் இருந்த பெண்ணிடம்,

"ஏன் தாமதமாகிறது? மூன்று மணிக்கு என்று போட்டிருந்தார்களே?"

என்றாள் பொறுமையிழந்து.

"மிஸ் சூரியாவைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்."

பதில் சொல்லிக்கொண்டு கைக்குட்டை எடுத்து மெல்ல உதடுகளை ஒற்றிக் கொண்டவள்,

பிரியா.பிரியா பசுபதி.

வெளியே-கார் ஒன்று வந்து ஓய்ந்து நிற்கும் சத்தம் கேட்டது.

கூட்ட ஒழுங்கமைப்பாளப் பெண்கள் கிட்டத்தட்ட ஓடிப்போய் காரை சூழ்ந்து கொள்ள, கதவு திறந்து பின்னால் இருந்து பச்சைப் பூப்போட்ட சுரிதாருக்கு உடலைக் கொடுத்திருந்த, அழகான, இளமையான, சூரியா கையசைத்தபடி இறங்கினாள்.

இறங்கும்போது 'கிளிக்' சத்தம் கேட்டு சூரியா நிமிர, கமராவோடு சிரித்தாள் பிரியா.

சூரியாவின் முகம் மாறியது. மார்புகள் நிமிர்ந்து கம்பீரம் சொல்ல, பிரியாவைவிட அவள் கையில் இருந்த கமராவை பார்த்தபடி அவளை நோக்கிப் போனாள் சூரியா.

(இன்னும் வரும்)



பேனா நண்பர் அரங்கம்

பெயர்: ஜெரன் குமார்
வயது: 22
முகவரி: ஆர்.சி. சேர்ச்,
பாலையூற்று,
திருகோணமலை.
பொழுதுபோக்கு: சித்திரம் வரைதல், பத்திரிகை வாசித்தல், கிரிக்கெட் விளையாடுதல், ரீ.வி. பார்த்தல், வானொலி கேட்டல், பேனா நட்பு.

பெயர்: இ. கலையரசி
வயது: 21
முகவரி: சிறில் சி. பெரேரா
மாவத்தை,
புளூமென்டால்
கொழும்பு-13.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

பெயர்: ரி. ராஜன்
முகவரி: 189, மெயின் வீதி,
கொழும்பு-11.
பொழுதுபோக்கு: வழமையான பொழுது போக்குகள்.

பெயர்: எஸ்.எம்.ஏ.ஸாஜித் மௌலானா
வயது: 19
முகவரி: பயனியர் எலக்ரிக்கல்ஸ்
03, மெத மாவத்த,
வெலிகம.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

பெயர்: எஸ். பர்ஸா
வயது: 20
முகவரி: 409/1, கலுகமுவ,
கெலிஓயா.
பொழுதுபோக்கு: புத்தகம் வாசித்தல், ரீ.வி. பார்த்தல், வானொலி கேட்டல்.

பெயர்: மஸீனா காதர்
வயது: 18
முகவரி: 40, பத்தாம் பள்ளி, தெல்தோட்டை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம்.எம். தாரூஜ்
முகவரி: SATCO-RCHQ
P.O.BOX-10164
JUBAIL-31961
K.S.A.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: எஸ். கிருபானந்த செல்வம்
வயது: 20
முகவரி: 3380-EGLINTON AVE,
APT-488-SCARBOROUGH-ONT
M1J3L6
CANADA.
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரீ.வி, பேனா நட்பு.

"சில கணம்தான். எல்லோரும் மௌனமாக கலைந்து சென்றனர். அந்த அதிகபட்ச மௌனம் என்னை நடுங்க வைத்தது...."

மீண்டும் பாழடைந்த வீடுகள், இடிந்து போன மசூதி, எரிக்கப்பட்ட கோயில், ஆற்றங்கரை, சோளக்காடு....

சிதைந்த உறவுகளும் உறைந்த இரத்தமும்!

எம். சுரேஷ்

இந்தப் பிரச்சனைபற்றி சிந்திக்காதவர்கள் யாரேனுமுண்டோ? விமர்சிக்காதவர்கள் யாரேனுமுண்டோ? ஆகக் குறைந்தது எந்த வகையாலேனும் பாதிக்கப்படாதவர்களாவது யாரேனுமுண்டோ?... ஆச்சரியம்தான். பல நிகழ்வுகள் சிந்தனைக்கு அப்பாற்பட்டவையாக, மனித நேயத்தைக் குழிதோண்டிப் புதைப்பவையாக, ஒரு இனம் புரியாத உணர்ச்சிக் கலவையை நரம்புகள் வெடிக்கும்படி மண்டைக்குள் செலுத்துபவையாகவே காணப்பட்டது....

அனேகமான நேரங்களில் எனக்கு நடைமுறையோடு ஒன்றித்து சிந்தக்க முடியவில்லை. இங்கு 'நடைமுறை' என்று நான் குறிப்பிட்டது நேரத்திற்கு நேரம் நம்மைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்போர்களின் விருப்பு, வெறுப்புக்களைத் தான்..... அதைத் தவிர அதிகபட்ச கருத்துக்களை வெளியிடுவதிலும் எனக்கு ஆர்வமில்லை. காரணம் குறைந்தபட்ச வயதுடைய மனைவியும் (24), குழந்தைகளும் (6 அல்லது 7 குழந்தைகள் என்று நினைக்கிறேன்) பறிபோகும்வரை அவர்கள் எனது நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என்பது எனது நியாயமற்ற ஆசை!'

"நேரடிக்கட்டுப்பாடு" என்ற சொல்லையும், "நியாயமற்ற ஆசை" என்ற சொல்லையும் நான் எனது குடும்பத்தோடு இணைத்துப் பேசுமளவிற்கு நிலமையும் நிகழ்வுகளும் சாதாரண வாழ்க்கையைப் பாதித்திருந்த விடயம் உங்களுக்கும் தெரிந்திருக்கும்.

நடையைத் துரிதப்படுத்தினேன். எங்கோ பிணமெரிக்கும் வாடை 'கும்மென்று' நாசித்துவாரத்தை அடைக்க, மனதிற்குள் என்னமோ செய்தது. இந்த வாடை எனக்குப் பழகிப்போன ஒன்றுதான். இருப்பினும் இந்தப் பாழடைந்த கிராமத்துச் சூழலில் அது என்னை வெகுவாகப் பாதித்தது.

பாதங்கள் சடுதியாகச் செயற்பட்டன. சற்றும் எதிர்பாராத விதத்தில் சுளீரென்று தகரத்துண்டொன்று காலுக்குள் இறங்க, குருதி கொப்பளித்தது. உச்சி வெய்யில் தலையால் ஊடுருவி கால்வரை சென்று சூடுபோட்டிருக்க வேண்டும்... கண்களுக்குள் தற்காலிக இருட்டு முகாமமைக்க, லேசாகத் தலை சுற்றியது....

வழி நெடுகிலும் இருந்த எரிக்கப்பட்ட வீடுகளுக்குள் இளைப்பாற எனக்கு விருப்பமில்லை. குருதி கொட்டக்கொட்ட காலை இழுத்தபடியே "மீனாற்றுக்" குளத்தருகே, நீண்டு நிமிர்ந்து வளர்ந்திருக்கும் அரச மரத்தடியில் சென்று, தொப்பென்று உடலை நிலத்தில் கிடத்தி, கொஞ்சநேரம் அப்படியே தலையைக் கவிழ்த்து அவசர அவசரமாக (ஓடிவந்த நாயைப்போல்) மூச்சை இழுத்துவிட்டதும் கொஞ்சமாய் தெம்பு வந்தது. இரத்தம் கசிவது இன்னும் நிற்கவில்லை. மெல்ல ஊர்ந்து சென்று அடிமரத்தோடு முதுகைச் சாத்தி அமர்ந்து கொண்டேன். கொடிய வெய்யிலுக்கு அரசமர நிழல் மிகுந்த குளிர்ச்சியாய்... அண்ணாந்து மரத்தைப் பார்த்தேன். மரம் தாராளமாக கிளைபரப்பி அடர்த்தியாக வளர்ந்திருந்தாலும் ஒரு பறவையைக் கூடக் காணோம். சில கிராமங்களைப் போல்!

மீண்டும் பாழடைந்த வீடுகள், இடிந்து போன மசூதி, எரிக்கப்பட்ட கோயில், ஆற்றங்கரை, சோளக்காடு... எல்லாவற்றையும் பார்க்கிறேன். எல்லாவற்றிலுமே ஒரு மேலதிக சோகம். கண்களை நீர் மறைக்கிறது. இந்த மண்ணோ, காற்றோ, ஆற்று நீரோ, அல்லது அரசமர நிழலோ மக்களை இனம் பிரித்துப் பார்க்கவில்லை, ஜாதியைச் சொல்லித் திட்டவில்லை. இது நமக்கு நாமே இட்டுக்கொண்ட "சாபம்" என்பதைத் தவிர வேறென்ன சொல்வது?

ஒரு கணம் வாய்விட்டு அழுகிறேன்- அக்கம் பக்கத்தில் வீடுகளோ, மக்களோ இல்லாமல் போனது எனக்கு வாய்ப்பாக இருந்திருக்க வேண்டும்- அழுது தீர்க்கக்கூடிய சோகமல்ல இது. ஆனாலும் அழுகிறேன்!

அந்தக் கிராமத்தில் (எந்தக் கிராமம் என்று குறிப்பிட்டுச் சொல்வதால் நீங்கள் எதையும் சாதிக்கப்போவதில்லை. ஆகவே அந்தக் கிராமம் "அந்தக்" கிராமமாகவே இருக்கட்டும்) தமிழர்கள் அதிகமாகவும், முஸ்லிம்கள் குறைவாகவும் வாழ்ந்தோம் என்பதைத் தவிர, எல்லோருமே ஒரே குடும்பத்து அங்கத்தவர்களாவே மூச்சு விட்டோம்... அப்போது மசூதிக்கும், கோயிலுக்கும் அதிக இடைவெளி இருக்கவில்லை.

திடீரென்று தொண்ணூறுகளில் தூவப்பட்ட இனத்துவேஷ நச்சு விதைகள் இரகசியமாய் கிளைபரப்ப ஆரம்பிக்க, நிம்மதி பறிபோனது. மாறிமாறி தமிழ்-முஸ்லிம் மக்கள் தாக்கப்பட்டதால், விரும்பியோ விரும்பாமலோ தமிழர்கள் செறிவாய் வாழும் பகுதிக்கு தமிழர்களும், முஸ்லிம்கள் செறிவாய் வாழும் பகுதிக்கு முஸ்லிம்களும் புலம் பெயர்ந்தனர்.

எங்கள் கிராமத்திற்கும் அதே நிலைதான். சிறுபான்மை முஸ்லிம் குடும்பங்கள் ஒவ்வொன்றாகக் குறைந்து கடைசியில் றஹீம் வாப்பாவின் குடும்பம்தான் மிஞ்சியது. றஹீம் வாப்பாதான் கிராமத்து (நாட்டு) வைத்தியர். காய்ச்சலில் இருந்து பாம்புக்கடிவரை றஹீம் வாப்பாவிடம்தான் ஓட வேண்டும். இதனால் றஹீம் வாப்பாவின் குடும்பம் கிராமத்தோடு மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்தது.

அவர் நினைத்திருந்தால் ஏனைய முஸ்லிம் குடும்பங்களைப்போல் வேறு இடத்திற்கு சென்று சிறப்பாக வாழ முடியும். அப்படியிருந்தும் தான் பிறந்து வளர்ந்த கிராமத்தை இந்த சில்லறைக் காரணங்களுக்காக விட்டுக்கொடுக்க அவர் விரும்பவில்லை. அதன்பிறகும் புலம்பெயர்ந்து சென்ற அவரின் உறவினர்கள் பலர் வந்து றஹீம் வாப்பாவை அழைத்தும், அவர் ஒரேயடியாகப் போக மறுத்துவிட்டார்.

காலப்போக்கில் மூன்றுமுறை எமது கிராமம் தாக்கப்பட்டது. பொருட்கள் சூறையாடப்பட்டன. ஒவ்வொரு தாக்குதலும் மனதிற்குள் துவேஷத்தை வளர்த்திருக்க வேண்டும் அல்லது அநியாயத்தை தாங்க முடியாமல் ஏதோ ஒரு பழியுணர்ச்சியைத் தோற்றுவித்திருக்க வேண்டும். எது எப்படியோ இரு இனங்கள் ஒரே குடும்பம்போல் வாழ்ந்த கிராமத்தில் "தமிழன்", "சோனகன்" என்று இனத்துவப்படுத்தி, பச்சையாகப் பிரித்துப் பேசும் பழக்கம் வழமையாகிப் போனது. இந்த வரவேற்க முடியாத நிஜங்களுக்கும், நிகழ்வுகளுக்கும் மகுடம் வைத்தாற்போல் கடைசித் தாக்குதலில் கிராமத்து முருகன் கோயில் எரிக்கப்பட்டதும், அத்தனை பேரின் கண்களும் ஒட்டுமொத்தமாக றஹீம் வாப்பாவை மொய்த்தன. இத்தனைக்கும் அவருக்கு ஒன்றுமே தெரியாதென்பதும், அவர் ஒரு காந்தியவாதி என்பதும் ஊரறிந்த விடயம்!

என்றாலும் நியாய, அநியாயங்களைப் பிரித்தறியும் மனோநிலையில் மனிதர்கள் இல்லை. (மனிதர்களே இல்லை என்பது வேறுவிடயம்) இப்போது அவர்களின் கண்களுக்குத் தெரிந்த ஒரே எதிரி றஹீம் வாப்பா.

வாய்க்குவந்தபடி இனத்தை இழுத்து, வீதியில் வைத்து, கிழிகிழியென்று கிழித்துவிட்டு கூட்டம் கலைந்தது. எனக்கு ஜீரணிக்க முடியவில்லை. ஒருமுறை பாம்புகடித்து உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கையில், ஒரு சல்லிக் காசுகூட வாங்காமல் என் உயிரைக் காத்தவர் இந்த றஹீம் வாப்பா. என் உயிரை மட்டுமல்ல இந்தக் கிராமத்தில் அரைவாசிப் பேர்களின் உயிரை ஏதோ ஒரு வகையில் காப்பாற்றிய பெருமை அவரையே சேரும். ஆனால் இந்தக் கணத்தில் அதை யாரும் சிந்திக்கவில்லை. (சிந்திக்கவில்லை என்று சொல்வதைவிட சிந்திக்க விரும்பவில்லை என்று சொன்னால் இன்னும் பொருத்தமாக இருக்கும்)

எல்லாமே சூழ்ச்சியில்தான் தங்கியிருக்கிறது போலும். அன்றிரவு யாருக்கும் தெரியாமல் ஊர்ப்பஞ்சாயத்துக் கூட்டப் பட்டது. றஹீம் வாப்பாவைத் தவிர எல்லா கிராமத்தவரும் வந்திருந்தனர். பஞ்சாயத்துத் தலைவர்கள், கிராமத்தில் எஞ்சியிருக்கும் முஸ்லிமாகிய றஹீம் வாப்பாவைத் தொடர்ந்தும் கிராமத்தில் வைத்திருப்பது நல்லதில்லை என்றும், அந்தக் கிழவனும் அவன் குடும்பமும் எதிரிக்குத் தகவல் கொடுப்பதாகவும் குற்றம் சாட்டி கடைசியில்.....

"எல்லாருக்கும் பஞ்சாயத்துச் சட்டம் தெரியும்தானே? நாளை காலையில் மீண்டும் பஞ்சாயத்தைக் கூட்டி அந்த "சோனகன்" குடும்பத்தை உடனே கிராமத்தைவிட்டு வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்ததும், கிராமத்தவர்களில் யாராவது ஒருவன் அதை எதிர்த்தாலும் பஞ்சாயத்துச் சட்டம் செல்லுபடியற்றதாகவிடும். ஆகவே இதில் யாருக்காவது ஆட்சேபனை இருக்கிறதா? இருந்தால் தயவுசெய்து இப்போதே சொல்லித் தொலைத்துவிடுங்கள்." அவன் தனது குரலில் மிளகாய்த் தூள் தடவியிருக்க வேண்டும். அத்தனை காரம்!

எனக்கு இந்த "வெளியேற்றல்" உத்தரவு அறவே பிடிக்கவில்லையாயினும், இப்போது அங்கு நிற்பவர்களின் மனோநிலையும், கேள்வி கேட்டவனின் குரலின் தொனியும் என்னை அச்சப்பட வைத்தன. "தனி ஒருவனால் சமூகத்தை திருத்த முடியாதென்று" எப்போதோ படித்தது ஞாபகத்திற்கு வந்தது. எதற்கு வீண் வம்பு? எல்லோரையும்போல் நாமும் பேசாமல் இருந்து விடுவோம் என்று எண்ணி மௌனமாக இருந்துவிட்டேன். பின்பு வீட்டுக்கு வந்தும் வெகுநேரம் உறக்கம் வரவில்லை. காரணமின்றி றஹீம் வாப்பாவின் முகம் மீண்டும் மீண்டும் கண்முன் தோன்றி மறைந்தது. சிறிது நேரத்தில் எதையோ நினைத்துக்கொண்டு எப்படியோ உறங்கிப் போனேன்.

மறுநாள் காலை, முதல்நாள் இரவு ஒத்திகை பார்த்ததுபோலவே பஞ்சாயத்துக் கூட்டப்பட்டது. அரச மரத்தைச் சுற்றி கிராமத்து ஜனங்கள். நடுவில் றஹீம் வாப்பா நிலத்தைப் பார்த்தபடி நின்றிருந்தார். பஞ்சாயத்துத் தலைமை சுற்றிவளைக்காமல் நேரடியாகவே "வெளியேற்ற" உத்தரவை முகத்திலடித்தாற்போல் பிறப்பித்து "யாருக்காவது ஆட்சேபனை இருக்கிறதா? என்ற சம்பிரதாயக் கேள்வியை, 'சும்மா' ஒரு பேச்சுக்குக் கேட்க, அதுவரை தலை கவிழ்த்திருந்த நான் மெல்லத் தலையை நிமிர்த்தி றஹீம் வாப்பாவைப் பார்க்கிறேன். நெஞ்சில் குண்டு பாய்ந்ததைப் போன்ற வலி! றஹீம் வாப்பாவின் கண்ணீர்த்துளிகள் தாடிக்காட்டிற்குள் வழிதெரியாமல் தடுமாறியது. துடித்துப்போன நான் என்னையுமறியாது........

"நான் இந்த வெளியேற்ற உத்தரவைக் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். இந்தக் கிராமத்திலேயே பிறந்து வளர்ந்த எவரையும், எவரும் வெளியேற்ற முடியாது"

ஆட்சேபித்தது மட்டுமன்றி கூடவே நியாயம் பேசிய என்னை எல்லாக் கண்களும் எரிப்பதைப்போல் பார்த்தன. ஒருவரும் ஒன்றுமே பேசவில்லை. சிலகணம்தான்..... எல்லோரும் மௌனமாகவே கலைந்து சென்றனர். அந்த அதிகபட்ச மௌனம் என்னை நடுங்க வைத்தது!

நினைத்தது, சரிதான். என் மனைவியின் சின்னத் தங்கை வேலி இடுக்கினூடாகப் பரிமாறிய தகவலின்படி அன்றிரவு எனது குடும்பத்தையும், றஹீம் வாப்பாவின் குடும்பத்தையும் அடித்து நொறுக்கத் திட்டமிட்டுள்ளதை அறிந்து அவர்கள் வரமுன்னமே றஹீம் வாப்பா குடும்பத்தையும் அழைத்துக்கொண்டு (அதிக இனப்பற்றுக் கொண்டவர்கள் மன்னிக்கவேண்டும்) கிராமத்தைவிட்டு வெளியேறினேன். வெகுதூரம் சென்றோம்.

தமிழ் கிராமத்திலோ, முஸ்லிம் கிராமத்திலோ குடியேறுவதைத் தவிர்த்து, மிகத் தொலைவில் ஒதுக்குப்புறமான, அமைதியான இடத்தில் அருகருகே இரண்டு சின்னக் குடில்கள் அமைத்து எனது குடும்பமும், றஹீம் வாப்பாவின் குடும்பமும் குடியமர்ந்தது. வனப்பிரதேசம் ஆகையால் அடிக்கடி காட்டு மிருகங்களால் தொல்லைகள் ஏற்பட்டபோதும், முன்பு மனிதர்கள் கொடுத்த தொல்லைகளோடு ஒப்பிடுகையில் அவை பெரிதாகத் தெரியவில்லை.

காலம்போனது. பிரச்சனைகள் மேலும் அதிகரித்தது. எங்கள் கிராமமும் பக்கத்தில் இருந்த (பிற இன மக்களின்) கிராமங்களும் முற்றாக அழிந்ததைக் கேள்விப்பட்டேன்......
"இப்போதெல்லாம் முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்குமிடைல் விரிசல் அதிகமாம்" நானும், றஹீம் வாப்பாவும் ஒன்றாகச் சிரித்தோம். நமக்கு அப்படி ஒன்றுமே தெரியவில்லை. மனிதர்களாய் வாழ்ந்து பரஸ்பரம், புரிந்துணர்வோடு விட்டுக் கொடுத்து செயற்பட்டால் "பிரச்சனை" என்ற சொல்லுக்கே இடமிருக்காதல்லவா?

தூரத்தில் எங்கோ துப்பாக்கிச் சத்தம்... எதை எதற்காக விட்டுக்கொடுத்தாலும் நான் றஹீம் வாப்பாவையோ, றஹீம் வாப்பா என்னையோ விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை.

காலைப் பார்க்கிறேன். கொப்பளித்துப் பாய்ந்த இரத்தம் அப்படியே கட்டியாகிப் போய் உறைந்து கிடக்கிறது!!

காலாவதியான காதல் நீதிகள்

-ஷர்மிளா இஸ்மாயில்-

"இம்பல்ஸ்" பெர்பியூமைக் கையில் வைத்து ஏதோ யோசனையில் தொலைத்திருந்தாள் ஆஷா. "ம்... மேடம் என்ன சிந்தனை? இன்னிக்கு நிச்சயமா யாரும் கையில் பூக்கொத்தோட பின்னால வர மாட்டாங்க. பேசாம அந்த பெர்பியூம வெச்சுடுங்க." அண்ணனின் குரலில் கேலி கலந்திருந்தது. அறையினுள் வந்தவனை கடைக்கண்ணால் பார்த்தாள். "ம்... யாரும் எனக்கு மலர் குடுக்காட்டா பரவாயில்ல. அதான் அந்த நிரோஷா வீட்ல பூந்தோட்டம் இருக்கே. நாலு பூ வாங்கிட்டா போச்சு." சொல்லியவாறே நிலைக் கண்ணாடி பிரதிபலித்த அண்ணனின் முகத்தை அவதானித்தாள். சட்டென உதடுகளில் லேசான விரிசல். கண்களில் ஒரு நட்சத்திர ஜொலிப்பு!

சிரிப்பு வந்தது அவளுக்கு. காதல் பூசணிக்காயை பிடிச்சோற்றில் மறைக்க முயல்கிறானே! முடிவாகக் கேட்டுவிட வேண்டும். தீர்மானித்தாள். "அண்ணா, நீங்க உண்மையாவே நிரோஷாவை விரும்பறீங்களா?" மொட்டையாக வந்தது வினா. மௌனமாக உறுத்துப் பார்த்தவன் கண்களில் ஒருவித தீர்க்கம்.. "ஆமா." "சரியண்ணா, ஆனா இது சரிவருமா? அம்மா சம்மதம் தருவார்களா? இதையெல்லாம் யோசிச்சுப் பார்த்தீங்களா?" ஆஷா அவனைக் கேள்வி மேல் கேள்வி கேட்க தீர்மானமாய்ச் சொன்னான். "யார் என்ன சொன்னாலும் ஐ டோன்ட் கெயார். அவ என்ன விரும்புறா. நல்ல பொண்ணு. நான் என் உயிரா அவள நேசிக்கிறேன்." தங்கையின் கண்களைத் தவிர்த்து ஜன்னலால் வெளியுலகை வெறித்தான். "யாராலும் என்னைத் தடுக்க முடியாது. ஐ லவ் ஹேர் வித் ஓல் மை ஹார்ட்." ஆஷாவின் கேள்விகளுக்கு அடிப்படைக் காரணம்? நிரோஷா வீட்டு நிலமை. அவர்கள் குடும்பம் வெகு சாதாரணம். அன்றாட வாழ்க்கைக்கு யோசித்து செலவிடும் சாதாரணம். இவர்கள் அதற்கு நேர்மாறு. வீட்டிற்கு தங்க கூரை ஒன்று மட்டும் போடாத குறை. பண வெள்ளம் பாய்ந்தது. ஆஷாவின் அம்மாவிடம் அந்த ஆடம்பரம் பொதிந்திருந்தது. எந்நேரமும் நகைக் கடையொன்றையே உடலில் தேக்கி வைத்திருப்பாள். பேச்சிலும், செயல்களிலும் பணச் செருக்கு தூள் கிளப்பும். அப்படிப் பட்டவள் சாதாரண குடும்பத்து பெண்ணை மருமகளாக வரிப்பாளா? சீ பகல் கனவு காண்கிறான் இந்த அண்ணா. அம்மா எப்போதோ சொல்லி விட்டாள். தன் வீட்டு மருமகள் தனக்கேற்ற அந்தஸ்த்துள்ள குடும்பத்துப் பெண்ணாக இருக்க வேண்டுமென்று. ஆனாலும் அண்ணாவுக்கு காதல் பிறந்ததும் அம்மாவின் சொற்கள் மறந்து விட்டன போலும். யோசித்ததையெல்லாம் வார்த்தைகளாக வரவிடாது பெருமூச்சொன்றை மாத்திரம் செலவிட்டாள் ஆஷா. "அவகிட்ட பணமில்லாட்டி என்ன? நல்ல குணமிருக்கு. பண்பிருக்கு. அழகிருக்கு. எனக்கு வேண்டியது அதுதான். அம்மாகிட்ட எப்படி சமாளிக்கணும்னு எனக்குத் தெரியும்." அவளின் யோசனைகளை படம் பிடித்தவன் போல பேசிவிட்டு வெளியேறினான் அவன்.

விஷயம் ஒருநாள் தெரியவர கோபாவேசமான அம்மாவை அடக்குவதில் வெற்றி ஆஷாவின் அண்ணன் பக்கம்தான். 'தற்கொலை செய்வேன்' என பயமுறுத்தி செய்கையிலும் காட்டப் போக தாயுள்ளம் பயந்து பின் பணிந்து போயிற்று. ஆயிற்று. நிரோஷா எவ்வித சீதனமும் - பொட்டு நகைகூடப் போடாது வந்து அண்ணியாகி விட்டாள். ஆஷாவுக்கும் சந்தோசம் தான். ஏழைப் பெண்ணானால் என்ன? நல்லவள். அருமையாகப் பழகுகிறாள் என்பதில் திருப்தி. அண்ணாவின் முகத்தில் சந்தோசக் களை. முதன் முதலில் மறுத்த அம்மா போகப் போக மருமகளை விரும்பத் தொடங்கவே பிரச்சனைகள் பூஜ்ய பெறுமானமடைந்தன.

காலம் ஓடியது. இப்போது ஆஷாவும் படிப்பெல்லாம் முடித்து அழகிய நங்கையாக உருமாறியிருந்தாள். அவளுக்கான வரன்களை தேடிப் பிடிப்பதில் அனைவரும் மும்முரம் காட்டிய வேளை... அவளுக்கு காதல் பிறந்து விட்டது! காதல் பிறந்ததில் பிரச்சனையில்லை. ஆனால் அது பிறந்த இடம்தான் பிரச்சனைக்குரியது. ஆமாம் ரகுவை அவள் விரும்புகிறாள். அவனோ வெகு சராசரியான குடும்பத்துப் பிள்ளை. அவன் உழைப்பை நம்பி மூன்று இளைய சகோதரிகளும் காத்திருக்க வயதான தாயும் சேர்ந்திருக்க கஷ்ட ஜீவனத்துக்காரர்கள். ஆனாலும் இடம், காலம், பொருளாதார நிலை, கறுப்பு, வெள்ளை பார்த்தா காதல் பிறக்கும்? தங்கையின் காதல் கண்டு முதலில் வெகுண்டெழுந்தது அவளது அண்ணா தான்! "காதலாம் காதல். கத்தரிக்காய். ஏன் ஒனக்கு அந்தப் பிச்சைக்காரப் பயலத் தவிர வேற யாரும் கிடைக்கலியா?"

ஆஷா மிரண்டு போனாள். "ஆஷா இங்க பாரும்மா. காதலிக்கறது தான் காதலிச்ச ஒரு பணக்காரப் பையனா இருந்தா பிரச்சனையில்லம்மா. இந்தப் பையனக் கட்டிக்கிட்டு என்ன வாழ்க்கையைத் தான் வாழ்ந்திடப் போற? நீ பெர்பியூம் போத்தல் வாங்க செலவிடற பணத்துக்கும் குறைவாத் தான் சம்பாதிப்பான். ஒன்னால எப்ப அங்க இருக்க முடியும்? அரை வயிறும் கால் வயிறுமா கஷ்டப்படணுமா நீ?"

ஆஷாவின் நெஞ்சத்தை யாரோ பிழிவது போலிந்தது. அண்ணி தான் புத்திமதிகளெனும் வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டிருந்தாள். அண்ணியை ஆயிரம் கேள்விகள் கேட்டுவிட்டு அண்ணனையும் பிடித்து உலுக்கி எடுக்க வேண்டும் போலொரு வெறி. 'உங்களுக்கு காதல் வந்தா ஒரு நீதி. என் காதலுக்கு ஒரு நீதியா?' அவளால் கேட்க முடியவில்லை. எதுவோ ஒன்று தொண்டைக் குழியை அடைத்திருந்தது.

சிறுகதை

தகர்ந்து போகும் நியதிகள்

ஹீரா அனஸ்

"தம்பி மோனை ஸ்ரீ இஞ்சை கொஞ்சம் வாடா, உதிலை கிணத்தடியிலை உவள் பத்மா வந்திருக்கிறாள். அவளின்டை குடத்திலை கொஞ்சம் தண்ணி அள்ளி ஊத்திக் குடெடா."

வள்ளியம்மை பேரனுக்குக் கட்டளை இட்டாள்.

முதன் முறையாக ஸ்ரீ சிந்திக்கத் தொடங்கினான். எத்தனை காலம் பத்மா வருவதும் வள்ளியம்மை சொல்வதும் அவன் அவளின் குடத்தினுள் தண்ணி அள்ளிக் கொடுப்பதுமாக இருந்தாலும் இண்டைக்கு ஸ்ரீ சிந்தித்தான். வரக்கூடாத சிந்தனையோ என்று கூட அடிமனது அடித்துக் கொண்டது. மனதை மீறி அவனது சிந்தனை வியாபகமானது.

"பத்மா.."

"ம்" வார்த்தை வெளி வராமலேயே அவள் எதேச்சையாக

"ம்" என்றது அவனுக்கு விளங்கியது.

"பத்மா என்ன பேசமாட்டியே... ஏன் அப்பிடி பயந்து விறுவிறுத்துப் போய் நிக்கிறாய்? ஏன் நான் கூப்பிட்டது தப்பா?"

"இல்லை சின்னய்யா உங்களோடை பேசினதைக் கண்டால் இஞ்சை கொலைதான் விழும். ஏனென்டா எங்கடை ஆக்கள் ஓ...அதுதான் கள்ளுச் சீவுற தொழில் செய்யும் ஆக்கள் உங்களைப் போல உயர்ந்த சாதி ஆக்களோடை வாய்விட்டுப் பேசவும்கூடாது ஐயா."

திடீரென தனது பேச்சை இடையில் நிறுத்திவிட்டு ஏதோ தகாத முறையில் அதிகப் பிரசங்கித் தனமாக பேசிவிட்ட உணர்வு வர நாக்கைக் கடித்துக் கொண்டாள் பத்மா. பத்மா எடுத்த எடுப்பிலேயே "இல்லை சின்னய்யா." என்று ஏதோ அருவருக்கத்தக்க வார்த்தையை உபயோகப் படுத்தி விட்டதாய் அவனுக்குப் பட்டது.

கிணறு.. அதிலுள்ள வாளியினை உபயோகித்து தண்ணீர் அள்ள உரிமை மறுக்கப்படுகிறது. இதென்ன அநியாயம்? அவள் பத்மாவும், அவளது பெற்றோரும், அவளது உற்றாரும் மனிதர் தானே. அவர்களும் எம்மைப் போன்ற குணாதிசயங்கள் உள்ள மானிடப் பிரிவுதானே. ஆனால் எங்கள் வீடுகளுக்கு வந்தால் சிரட்டைத் தேனீரும், அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பிளாஸ்டிக் கோப்பைச் சாப்பாடும்.

இவள் பத்மாவும் அவளது தாயும் தந்தையும் எங்கள் அப்பாவையும் அம்மாவையும் ஆச்சியையும்- ஏன் என்னையும் கண்டாலே என்னவாய் மடிந்து குழைந்து போகிறார்கள். இவர்களுக்கு இந்த முறையைக் கற்றுக் கொடுத்தது யார்? இவர்கள் பனைசீவிக் குடுக்கிற கள்ளை வயிறு முட்டக் குடித்துவிட்டு ஊர்ச் சண்டித்தனம் பேசவும், வம்பளக்கவும் முடியும். ஆனால் அவன் வேறுபட்டவன். அவனின் பிழா, சுரக்குடுவை, முட்டி, கத்தி இவைகளைத் தொட்டுச் சீவிக் கொடுக்கிற கள் குடிக்கலாம். ஆனால் அவன் இவர்களின் கிணற்றில் வந்து ஒரு குடம் தண்ணீர் அள்ள முடியாது. தீட்டுப் பட்டுவிடும். இதென்ன மடமை? இதென்ன போக்கிரித்தனம்?

ஸ்ரீ இந்த அசட்டுத்தன்மை மீது ஆத்திரமடைந்தான். இந்தச் சாபக் கேட்டிற்கு முடிவு வேண்டும் என்பதாய் மனதினில் தீர்மானம் எடுத்துக் கொண்டான்.

ஸ்ரீ கொழும்பில் படித்தவன். இப்போது வேலை விடுமுறை காரணமாக அவன் ஊர் வந்திருக்கிறான். அவன் வேலை பார்க்கும் கம்பனியில்கூட எத்தனை விதமான சாதி அமைப்புகள் இருக்குமோ தெரியாது. அதனைப் பற்றியெல்லாம் அசட்டைப் படாதவனின் சிந்தனையை பாட்டி வள்ளியம்மை, பத்மா மூலமாக வேகமாகக் கிளறி விட்டிருந்தாள்.

பழமையில் ஊறிப்போன வட புலத்து மக்களின் சாதீயத் தடிப்பு எவ்வளவு விகாரமானது? அதனை என்றுமில்லாதவாறு ஸ்ரீ அனுபவிக்கிறான்.

படிப்பு, வேலை என்று பாதி வாழ்க்கையை நகர்ப்புறத்தே கழித்தவனுக்கு இது ஒரு பாரமாகப்பட்டது.

□□□

மீண்டுமொரு மாலை நேரம்.

கிணற்றடியில் குடத்தை வைத்துவிட்டு காத்திருந்தாள் பத்மா. ஆதவன் தனது கிரணங்களை ஆகாயத்தைவிட்டும் அப்புறப்படுத்திக் கொண்டிருந்தான்.

ஸ்ரீயின் சாதி எதிர்ப்புத் திட்டம் மனதில் பன்முகப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

இடையில் எத்தனையோ தரம் பத்மா தண்ணீர் அள்ள வருவதும் இவன் நிரப்புவதுமாக இருவரும் பரிச்சயப்பட்டு விட்டனர்.

இனிமேல்தான் பத்மாவை இவன் தன் பக்கம் சார்பாக்கி இந்த சாதீயச் சாபக்கேடு பற்றி அறிவுறுத்த எண்ணினான்.

"பத்மா.."

"என்ன சின்னய்யா..?"

"உனக்கு எத்தினை தரம் சொல்லியிருக்கிறன் சின்னய்யா எண்டு கூப்பிடாதே எண்டு."

"அப்பிடித்தானே கூப்பிடவேணும்?"

"இல்லை. சின்னய்யா, பெரியய்யா எல்லாத்தையும் விட்டுவிட்டு ஸ்ரீ எண்டே கூப்பிடு."

அவள் வாயின் மீதுவிரலை வைத்தாள். "ஓ... அப்பிடி ஏலாது உங்களை அப்பிடித்தான் கூப்பிட வேணும்."

"இல்லை.இண்டையிலை இருந்து என்னை ஸ்ரீ எண்டுதான் கூப்பிட வேணும் சரியா?"

"கொஞ்சம் இருங்கோ அம்மாடியோ... இண்டைக்கு ஐஞ்சாறு குடம் தண்ணி வேணும். நான் இதைக் கொண்டு போய் ஊத்திப்போட்டு ஓடி வாறன்."

'கொஞ்சம் எனக்காக நில்லுங்களேன்.' என்பதுபோல அவளின் காந்த விழிகள் அவனைப் பார்த்துக் கெஞ்சின.

"ஓடிவா... பத்மா... இண்டைக்கு உன்னோடை நிறையப் பேசவேணும்."

"என்னோடையா? நிறையவா? கதைக்கவா?" இவ்வளவு நாட்களிலும் இன்றுதான் பத்மா இவ்வளவு அதிகமாகப் பேசியிருக்கிறாள். அந்தக் கருக்கல்ப் பொழுதில் ஒயிலாய் இடுப்பில் குடம் சுமந்து நடந்து போகும் பெண்மான். இவளை எல்லாம் ஒதுக்கிவைத்து; இவளில் என்ன குறை? படித்திருக்கிறாள் ஒன்பதாம் வகுப்பு. அந்த நீளமான கூந்தலில் கன்ன உச்சி பிரித்த பத்மா எவ்வளவு அழகு. அவளின் எடுப்பான மூக்கு கன்னத்தில் அடிக்கடி குழிவிழும் சிரிப்பு. பத்மா எதில் குறைவுள்ளவள். ஒன்றே ஒன்று சாதி. அவள் கீழ்சாதி. அவள் வரும் அழகையே பார்த்துக் கொண்டிருந்தான் ஸ்ரீ.

"டக்" என்று குடம் வைக்கும் சத்தம் கேட்டு சுயநினைவுக்கு வந்தவன்,

"பத்மா..." என்றான்.

"என்ன சின்ன.." தடுமாறினாள். ஸ்ரீ என்பதா? அது அவனது சாதிக்கு அடுக்குமா?"

"பத்மா.ஏன் நிப்பாட்டி விட்டாய்? ஸ்ரீ என்றே என்னோடு பேசேன்."

என்ன நினைத்தாளோ... அவள் முதன் முறையாக 'ஸ்ரீ' என்று அழைத்தாள்.

"இப்போது தான் நீ நல்ல பிள்ளை."

"பத்மா இனிமேல்தான் நான் சொல்லப் போகிற விஷயங்களை நீ கவனிக்க வேணும். நான் சொல்லப் போற விஷயங்களைப் பற்றி உன்ரை அபிப்பிராயமும் முக்கியம் தான். ஆனால் அதிலை பொதிஞ்சிருக்கிற என்ரை இலட்சியம்தான் எனக்கு முக்கியம். இதுக்கு நீ ஒத்துழைப்புத் தரவேணும்."

"என்ன" என்பது போல் ஆச்சரியமாகவும் ஆர்வமாகவும் தனது விழியுயர்த்தி அவனை நோக்கினாள் பத்மா.

"பத்மா?"

"என்ன ஸ்ரீ?"

"உனக்கு எத்தினை வயசு?"

"ஏன்" என்றவாறு சிரித்தாள்.

" கேக்கிறேன் சொல்லேன்?"

"பதினெட்டு."

"சரி எனக்கு இருபத்தைந்து."

"இப்ப அதுக்கென்ன ஸ்ரீ?"

"பத்மா நாங்க ரெண்டு பேரும் மேஜராயிட்டம். அதனாலை எங்களைப்பற்றி எங்களுக்கு முடிவெடுக்க நிறையவே உரிமையிருக்கு... பத்மா... நான் உன்னைக் காதலிக்கிறன்..."

"ஸ்ரீ..."

"ஓம் பத்மா • உன்னை எப்ப முதன் முதல் பார்த்தனோ அப்பவே என்ரை உள்ளத்திலை உனக்கு ஒரு அதீதமான இடத்தை ஒதுக்கி வைச்சிட்டன். அதுமட்டுமில்லை என்னுடைய வாழ்க்கைத் துணைவியா உன்னையே ஆக்குறதா முடிவெடுத்திட்டன். தயவு செய்து எனது விருப்பத்தையும் இலட்சியத்தையும் உதாசீனப்படுத்தாதே பத்மா."

ஸ்ரீயின் இந்த திடீர் வார்த்தைகளின் அதிர்ச்சியில் இருந்து மீள அவளுக்கு பத்து நிமிடத்திற்கு மேல் எடுத்தது.

"ஸ்ரீ என்ன...இது..?" பத்மா கண் கலங்கினாள். தாரை தாரையாக கண்ணீர் சொரிந்தாள்.

"ப்ளீஸ் ஸ்ரீ... இந்தக் காதலோ- அல்லது கலியாணமோ... நிறைவேறுகிற விஷயமே இல்லை."

"இல்லை பத்மா...இதை நிறைவேற்றிக் காட்டுவோமே?"

"ஸ்ரீ! காலம் காலமாய் பரம்பரை பரம்பரையாய் வேரோடி வந்த சாதிப் பாகுபாட்டை நீங்க என்னைக் கலியாணம் செய்து மாத்தப் போறது என்றது சிட்டுக்குருவி தன்ரை சின்ன அலகாலை கடலிலை உள்ள எல்லாத் தண்ணியையும் இறைச்சிடுவேனே என்ற அசட்டுத் தைரியம் போல ஸ்ரீ."

இந்த வேளையிலும் பத்மாவினுள் பொதிந்திருக்கும் அறிவு பூர்வமான சிந்தனையை மனதினால் மெச்சிக் கொண்டிருந்தான் ஸ்ரீ.

"பத்மா இப்பிடி அறிவு பூர்வமா சிந்திக்கத் தெரிந்த உன்னைப் போல இன்னும் எத்தனையோ பெண்களும் ஆண்களும் உங்கடை சாதியிலை முடங்கிப் போய்க் கிடக்கிறார்கள். வாயிருந்தும் ஊமைகளாய்..."

"அதுதான் ஸ்ரீ மரபு."

"எது மரபு பத்மா? மனித உணர்வுகளை- அவனின் அறிவை மரணிக்க வைப்பதற்குப் பெயர் மரபா?"

"ஸ்ரீ என்னதான் ஆனாலும் எங்கடை யாழ்ப்பாணத்திலை இந்தக் கலப்புத் திருமணம் எல்லாம் எப்பவுமே ஒத்துவராத சங்கதிகள்."

"அதிருக்க எனது கேள்விக்கு என்ன பதில் சொல்கிறாய் பத்மா?"

"என்னாலை நீங்கள் கஷ்டப்படுறதை நான் விரும்பல்லை ஸ்ரீ.

"ஆனா ஸ்ரீ உங்களை முதன் முதலாக் கண்டதிலை இருந்து என்னுள்ளே உங்கள் மீது வளரும் பிரியத்தை அடக்கி அடக்கி வைத்திருக்கிறேன். நானும் உங்களை நேசிக்கிறேன்...உங்களை விரும்புறன்.. ஆனா...ஆனா..."

"என்ன ஆனா..."

"உங்கடை விருப்பத்திற்கேற்ற மாதிரி, உங்கடை ஆசைக்கேற்றமாதிரி உங்கடை மனதுக்கேற்றமாதிரி மனைவியா அல்லாம... உங்கடை வைப்பாட்....யா...?"

"இடியட்...ஃபூல்..... பத்மா... உனக்கென்ன பைத்தியமே?"

"இல்லை ஸ்ரீ நான் கேள்விப்பட்டிருக்கிறன். உயர்சாதி ஆக்கள்... கீழ்சாதி ஆட்களை..."

"போதும் நிறுத்து. எனக்கு புத்தி சொல்ல வந்திட்டியே..." அவள் எதிர்பார்க்க வேயில்லை. அவனின் ஐந்து விரல்களும் பத்மாவின் கன்னத்தை கண்மூடி விழிக்க முதல் பதம் பார்த்துவிட்டிருந்தன. ஸ்ரீயின் முகம் இறுகியிருந்தது. பத்மா வலி தாங்க முடியாமல் அடி பட்ட கன்னத்தைத் தடவித் தடவி அழுதுகொண்டிருந்தாள்.

"பத்மா."

கேவலினூடே "ம்" என்றாள்.

"பத்மா சொறிம்மா." அந்த மன்னிப்பில் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்திருந்தன.

விம்மி வெடிக்கும் அவளை அன்போடு அணைத்து தனது மார்பின்மீது தலை சாய்த்து... "ப்ளீஸ் பத்மா எனக்கு ஆத்திரம் வந்திட்டுதம்மா. எனக்கு நீ வேண்டும்- என் இலட்சியம் வேண்டும். நான் சாதாரண மானவன் என்பதனை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும். உயர்சாதி கீழ்சாதி என்பதை நீ மறக்க வேண்டும்- அந்தப் பச்சோந்திகள் வேறு நான் வேறு. பத்மா... அழாதே என் செல்வமே..." அவன் தேற்றிக் கொண்டிருந்தான். அவளின் மௌனம் அவனை ஆமோதித்துக் கொண்டிருந்தது. ●

சிறுகதை

காதல் என்பது கனவுகள் அல்ல

அம்தரவல்ல நிலாவாசன்

அடிக்கடி தனக்குள் சிரிப்பதும் பின்னர் சிந்திப்பதுமாக இருந்த நரேந்திரனை பியோன் மூன்றாவது முறையாக சத்தமாகக் கூப்பிட்டான்.

"சார் உங்களை மேனேஜர் பேசுறார்."

தண்ணீர் பட்டதும் சிலிர்த்துக் கொள்கிற கோழியைப் போல திடீரென விழித்துக் கொண்ட நரேன்..."அட...என்ன..."என்றான்.

"ஐயோ..." என்று தலையடித்துக் கொண்ட பியோன்,

"உங்களை மேனேஜர் பேசுறதா நான்காவது முறையாகச் சொல்றேன்.." என்றான்.

நரேன் அசடு வழிந்தவனாக எழுந்தான். பியோனை சட்டை செய்யாமல் மனேஜர் அறையை நோக்கி நடந்தான். உலகப்படத்தில் எதையோ தேடிக் கொண்டிருந்த மனேஜர் பரந்தாமன் நரேனைக் கண்டதும் கடுகு பொரியும் முகத்தோடு பார்த்தார்.

"நரேன் உங்களுக்கு பைத்தியமா பிடிச்சிருக்கு?"

கோபத்தில் கத்திய மனேஜரின் வார்த்தையை புரிந்து கொள்ள முடியாத நரேன் "சேர் நீங்க.." என்றான்.

"சொந்த வேல ஆயிரம் இருந்தாலும் கம்பனி வேலைல 'கட் அன்ட் ரைட்'டா நடந்துக்கிற நீங்க இப்போ பைத்தியம் புடிச்ச மாதிரி.."

சொல்லிக்கொண்டு போன மனேஜரை மீண்டும் இடை மறித்தான் நரேன்.

"கொஞ்சம் புரியும் படியா..."

"புரியும் படியாகத்தானே...தனிய சிரிக்கிறீங்களாம். முகட்டைப் பார்த்துக் கண்ணடிக்கிறீங்களாம். போதாக் குறைக்கு ஆஃபீஸ் ஃபைல் எல்லாம் கவிதையும் கத்தரிக்காயும், சீ...எம்.டிக்கிட்ட நான் கேட்ட பேச்சுக்கு நாக்க புடுங்கிக்கிட்டு சாகலாம். 'பைத்தியங்களெல்லாம் உன் நிர்வாகத்தில வேலை செய்றாங்களா'ன்னு என் முகத்தப் பார்த்துக் கேட்கிறாரு..." மனேஜர் பல்லைக் கடித்தார்.

நரேன் சங்கடப்பட்டான். எல்லாம் அந்த மாயச் சிரிப்பின் எதிரொலி. அலைபாயும் மனதால் வினைகள் விதைந்திருக்கின்றன.

"என்ன நரேன் யோசிக்கிறீங்க? இனிமே இப்படி நடக்கிறதா இருந்தா..."

நரேன் "சேர்..." என்றான்.

"ஓகே...ஓகே...இது உங்களுக்கு கடைசியும் முதலுமான 'வார்னிங்' ஞாபகம் இருக்கட்டும். சரி போங்க.."

மனேஜரின் வார்த்தைக்கு தலையசைத்து விட்டு நரேன் வெளியே வந்தான். "அந்த ஒருத்தியால் எத்தனை வினைகள்.." என்று மனம் சொன்னாலும் அவள்மீது கோபப் படாமல் தன்மீது கோபப்பட்டான் நரேன்.

இந்த ஒரு கிழமையாக அவளே அவனது கனவு நாயகி. அவனது இரவுகள் அவளது நினைவுகளுக்காகவே விழித்திருந்திருக்கின்றன. அலர்ஜி என்று ஒதுக்கித் தள்ளிய கவிதைகள்கூட இப்போது அவனுக்கு ஆசையாக வருகிறது. நிறைய கிறுக்கித் தள்ளி இருக்கிறான். எல்லாம் அவளுக்காக, அவள் நினைவுகளுக்காக,

ஒவ்வொரு நாள் காலையும் மாலையும் குறிப்பிட்ட பஸ் தரிப்பிடத்தில் அவளின் தரிசனம் அவனுக்குக் கிடைக்கும். அம்மன் சிலைபோல அந்தந்த இடங்களில் அழகான வளர்ச்சி. பார்ப்போரை இன்னொரு முறை பார்க்கத் தூண்டும் கவர்ச்சி. பார்வையில் காந்தத்தின் அகோரம்.

அவனைக் காணும் போதெல்லாம் கட்டிப் போடுகிற சிரிப்பை கவனமாகச் சிந்துவாள். எதையோ சொல்ல நினைப்பவள் போலக் காணப்படுவாள். நரேன் பித்தனாகிப் போனான். அவள் மீது அவளுக்குள் எதுவோ இருக்கிறது. சொல்லத் தயங்குகிறாள் என்று நரேன் எண்ணி...இப்போது கவனயீனத்தை கைக்கூலியாக அமர்த்திக் கொண்டிருக்கிறான். அதனால்தான் அவனையறியாமலே நிறையத் தவறு விடுகிறான். அதற்குப் பிராயச் சித்தமாக...

அவளிடம் காதல் பிச்சை கேட்டுவிடு என்றது மனம். நரேன் புதிய உற்சாகத்தோடு வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தான்.

□□□

மாலை மங்கிய நேரம், பஸ் தரிப்பில் அவ்வளவாக கூட்டம் இல்லை. இருக்கின்ற சிலரும் பயண அவசரத்தில் வருகின்ற பஸ்களில் தொற்றிக் கொள்ள நரேன் அவசரமே இல்லாமல் அந்த அழகி வரும் வரையில் கற்பனையில் காதல் மாளிகை கட்டிக் கொண்டிருந்தான். அந்தக் கற்பனைக்கு கட்டியம் கூறுமாப்போல் தூரத்தில் அவள் வருவதும் தெரிந்தது.

அவனது மனத்துள் புகையிரதத்தின் பயணம். அச்ச உணர்வொன்று என்றைக்குமே யில்லாமல் அணைத்துக் கொள்ள முகத்தில் அரும்பிய வியர்வையைக் கைக்குட்டை எடுத்துத் துடைத்துக் கொண்டான். 'நான் உங்களுடன் கொஞ்சம் பேசணும். அது வந்து... நான் உங்களக் காதலிக்கிறேன்...' என்று அவளிடம் பேசப் போகிற வார்த்தைகளை மனத்துள் அசை போட்ட வண்ணம் தயாரானான். மனத்தை பயமும் தயக்கமும் தாக்க ஆரம்பித்தன.

தரிப்பிடத்தில் ஓர் ஓரமாக வந்து நின்ற அந்தத் தேவதை புன்னகையால் அவனைப் புடம் போட்டு விட்டு "வா..." என்று அழைப்பது போல் தனது வெண்டிக்காய் விரல்களால் சைகை செய்தாள்.

பழம் நழுவிப் பாலில் விழுகிறது... என்று தனக்குள் எண்ணிக்கொண்ட நரேன் புன்னகைத்த வண்ணம் அவளை அணுகினான்.

"நான் உங்களிடம் கொஞ்சம் பேசணும். அது வந்து...." அவளின் தேன் தடவிய குரல் அவனுள் ஆனந்தத்தைப் பிரசவிக்க ஆகாயத்தில் சிறகு கட்டிப் பறந்தான். அவன் அவளிடம் எதைப் பேச வேண்டும் என்று எண்ணியிருந்தானோ அதன் முதல் அடிகளில் அவளிடமிருந்து வெளிவந்தாகி விட்டது. இனி 'ஐ லவ் யூ...' சொல்வதுதான் பாக்கி.

சொல்ல வந்ததை சொல்லத் தயங்கியவளாக "நான்..." என்று நிறுத்தினாள் அவள் மீண்டும்.

நரேனின் காட்டில் பூமாரி பொழிய ஆரம்பித்தது. "சொல்லுங்கள்..." என்றான் மகிழ்ச்சியாக.

"நான்... நான் உங்க நெருங்கிய நண்பர் பிரகாஷை விரும்புறேன். கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படுறேன். நீங்கதான் அவருக்குப் புரிய வைக்கணும்....."

சொன்னவள் நாணத்தால் நரேனின் முகத்தைப் பார்க்க முடியாமல் தலை கவிழ்ந்தாள்.

நரேனின் கற்பனை மாளிகைகள் சரிய ஆரம்பித்தன. நெஞ்சத்துள் ஓடிய ரயில் தடம் புரண்டது. நாக்குழற "ஓகே..." என்று ஏதோ ஒரு அவசரத்தில் கொடுத்து வைத்த பிரகாஷின் மீது பொறாமை கொண்டவனாக - வந்து நின்ற பஸ்ஸில் தொற்றி ஏற ஆரம்பித்தான். ●

இலக்கியநயம்



சோகத்தில் ஒரு சுகம்

தருவது ரசிகன்

நீலக்கடல் சலனமில்லாமல் நிம்மதியாகத் தெரிந்தது.

தூங்கச் செல்லும் முன் நிலைக் கண்ணாடியில் தம் அழகு முகத்தை ஒருமுறை பார்த்துக்கொள்ளும் பெண்களைப் போல, கதிரவனும் தன் முகத்தை கடல் கண்ணாடியில் பார்த்துக்கொண்டிருந்தான்.

பாய் விரித்து புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தது மரக்கலம்.

கடல் மேல் வானத்தில் சிறகடித்து வேடந்தாங்கலை நோக்கி பறந்து சென்று கொண்டிருந்த பறவைகளை பார்த்துக் கொண்டிருந்த கயல்விழி பெருமூச் செறிந்தாள்.

இருகால்களையும் குத்திட்டு அமர்ந்து இடக்கரத்தால் கடற்கரை மணலை அளைந்து கொண்டிருந்தாள். மனதுக்குள் அழுது கொண்டிருந்தாள்.

அவள் வலது புறத்தில் அமர்ந்திருந்த சேரலாதன் என்ன பேசுவது, எப்படி இவள் துயர் ஆற்றுவது என்று தெரியாமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

ஆதரவாய் அவள் தோளினை இடது கரத்தால் அணைத்தான். கயல்விழி தன் வலது கரம் உயர்த்தி தோளில் பதிந்த அவன் விரல்களோடு தன் விரல்களைச் சேர்த்துக்கொண்டு,

"என்னால்...முடியாது... எப்படி.... எப்படி உங்களுக்கு மட்டும் மனது வந்தது...?"

குரல் தழுதழுக்க பொங்கி வரும் விழிநீரை வலுக்கட்டாயமாய் கட்டுப்படுத்த முயன்றபடி கேட்டாள்.

"மன்னரின் உத்தரவு. முன்னரே தீர்மானிக்கப்பட்டுவிட்ட பயணம். இந்த பட்டெலும் வெள்ளை மனமும் எனக்கு சொந்தமாகும் என்று இந்த தீர்மானம் எடுக்கப்படும்போது எனக்குத் தெரியாதே கயல்விழி."

என்றான் குரலில் பரிவும், பாசமும் நிரம்பி வழிய சேரலாதன்.

"தெரிந்திருந்தால் மட்டும் என்ன செய்திருப்பீர்கள்,"

"இந்த பயணத் திட்டத்திற்கே ஒப்புக் கொண்டிருக்க மாட்டேன்."

"மன்னரின் உத்தரவை அப்போது மட்டும் மறுக்க முடியுமாக்கும்?"

"கலிங்க நாட்டுக்கு பாண்டி நாட்டின் தூதனாக போய்வர வேண்டும் என்பது எனது விருப்பத்தின் காரணமாக மன்னர் செய்த முடிவுதான் என்பதை மறந்து விட்டாயா கயல்விழி?"

தெரியும். என்றாலும் பிரிவை பற்றியே நினைத்து ஏங்கும் மனதில் பிரியாமல் தடுத்துவிட ஏதாவது வழி தென்படமாட்டாதா என்ற துடிப்புத்தான் நிறைந்து கிடந்தது.

கடலில் விழுந்தவன் பற்றிக்கொள்ள ஒரு துரும்பு கிடைத்தால் எப்படி மகிழ்வான். இப்போது சேரலாதனின் பிரிவை தடுக்க ஒருவழி கிடைத்தால் ஆறாத் துயரில் விழுந்து தவிக்கும் கயல்விழியும் அப்படித்தான் மகிழ்வாள்.

மன்னனின் மகளாக இருந்தபோதும் படைத்தலைவனிடம் தன் மனதை பறி கொடுத்த கதையை இன்னமும் அவள் சொல்லவில்லை.

இதயங்கள் இடம்மாறிக்கொண்டதால் இடையிலே வரும் பிரிவு தினமும் உயிர் அறுக்கும் என்று மன்னனிடம் சொல்லி தடுத்திருக்கலாம்.

அவசரப்பட்டு சொல்லிவிட, அதனால் படைத்தலைவன்மீது தன் தந்தைக்கு தாளாத கோபம் வருமோ என்று தயங்கிக் காத்திருந்தாள்.

படைகளுக்கு தலைவனாய் இரு என்று தன்னால் நியமிக்கப்பட்டவன், இளவரசியின் அழகாயுதங்கள் முன் தோற்றுப் போனான். படைக்கலங்களாய் எழுந்தும், வீசியும் மிரட்டும் காமன் கணைகளின் முன் படுதோல்வி கண்டு "இந்தா என் இதயம்" என்று எடுத்துக் கொடுத்துவிட்டான் என்று தெரிந்தால், பொறுப்பில் இருந்தே அவனை எடுத்தெறிந்து விடுவாரோ தந்தை என்று ஏற்பட்ட கலக்கத்தில் சுணக்கம் காட்டிவிட்டாள்.

ஆளைக் கொல்லும் வாள் வீச்சில் மட்டுமல்ல, அறிவு வீச்சிலும் அசாத்திய திறமை கொண்ட படைத்தலைவன் மேலும் உயரவேண்டும். மேதினி அறிய புகழின் உச்சத்தில் புன்னகை மலர ஏறி நிற்க வேண்டும்.

இப்போது எம் காதல் சொன்னால் உயிரானவனின் உயர்வுக்கு அதுவே ஒரு தடையாகிப் போனால் என்ன செய்வது என்று யோசித்த கயல்விழி தந்தையிடம் தம் காதல் மறைத்தாள்.

விட்டுக்கொடுத்தல் என்பதும் காதலில் சுகம். முள்ளில் ரோஜா இருப்பது மாதிரி சோகத்திலும் இருக்கும் சுகம்.

எல்லாவற்றையும் எனக்காக துற. சகலமும் உதறு. என்பது சுயநலம்.

ஒருவருக்காய் மற்றவர் சோகம் சுமந்து, ஒருவர் உயர மற்றவர் மகிழ்ந்து அந்த மகிழ்விலே சுமந்த சோகத்திலும் ஒரு சுகம் உணர்ந்து நிறைவு கொள்வது காதலில் இனிது.

பரஸ்பர அக்கறை சுயநலமில்லாத அன்பை ஆலமர விருட்சமாய் வளர்க்கும். அந்த நிழலில் இரண்டு இதயங்களும் இளைப்பாறிக்கொள்ளும்.

பொத்தி வைக்கும் சோகமும், தவிப்பும் சுற்றிவந்து தழுவும் சுயநலமற்ற நேசத்தால் இருந்த இடம் தெரியாமல் போகும்.

பிரிவும் ஒருவகை விட்டுக்கொடுத்தல்தான். போர்க்களத்தில் எதிரியின் சிரம் நோக்கி வீசும் வாளாய் தினம் தினம் சோகம் வந்து உயிர் அறுக்கும். உள்ளே பட்ட காயம் தீராத வலி தந்து ஓ...வென்று வாய்விட்டு அழச் சொல்லும்.

முகத்தில் முகம் பார்த்துக்கொண்டிருப்பது, எதைப் பேசுவது என்று தெரியாமல் எதையாவது பேசுவது, பேச்சின் இடையிலே பிணக்குப்பட்டுக்கொள்வது, பின்னர் பிணக்கு மறந்து இதமாய் அணைத்துக்கொள்வது எல்லாம் சுகம். மனதை மயிலிறகால் மெல்ல வருடுவது போன்ற இதம்.

எனினும் அது மட்டுமே காதல் அன்று. முகம் காண முடியவில்லை, அணைத்துக் கொள்ள இயலவில்லை என்றால் அது என்ன முறை, என்ன சுகம்? என்று நினைப்பது மட்டுமே காதல் எனில் அந்த காதல் தேகம் மட்டுமே தேடும் காதலாகிவிடும்.

தேக சுகமும் காதலில் ஒரு பகுதி. அதுவே முழுமை என்று நினைத்தலும், அதற்காக மட்டுமே ஏங்குதலும், அதன் பொருட்டு மட்டுமே சகலமும் எதிர்பார்த்தலும் சுயநலத்தை கொண்டுவரும்.

கண்ணின் இமைபோல ஒருவர் மற்றவரை பொத்திக் காத்தலும், ஒருவருக்காய் மற்றவர் இமயபாரமாய் மூச்சுமுட்ட அழுத்தும் சோகம் தாங்குதலும் காதலின் இன்னொரு பகுதி.

அதுவே காதலை பூரணப்படுத்தும். காதலின் பொருள் உணர்ந்தவனுக்கும், உணர்ந்தவளுக்கும் வாழ்வு நரகமல்ல. வாழ்வு மாயமல்ல.

நான் அன்பைத் தருகிறேன். நீ உன் சகல சுகங்களும் நலன்களும் துற என்பது ஒன்றைக் கொடுத்து இன்னொன்றைப் பெறுகின்ற வியாபாரம்.

மனங்களை பரிமாறிக்கொள்வதை பண்டமாற்றாக்கி அதனால் இலாபத்தை மட்டுமே எதிர்பார்க்கும் காதலுக்கு ஆயுள் குறைவாகிவிடுகிறது. சோகத்திலும் ஒரு சுகம் உண்டு என்பது வியப்பாகப்படுகிறது.

ஆனால்-கயல்விழிக்கும் சேரலாதனுக்கும் அது வியப்பாகப் படவில்லை.

பிரிவு வேண்டாமே என்று மனது அடம்பிடித்தாலும், தூதுவனாய் சென்று அதனால் அவன் பெறப்போகும் புகழ் நினைத்தாள். பிரிந்துதானே ஆகவேண்டும் என்று நினைப்பும் கொண்டாள்.

அவள் விழிகளில் இருந்து முத்துக்களாய் திரண்டு இறங்கிய விழி நீரை சேரலாதன் விரல்கள் ஆதரவாய்த் துடைத்தன.

தோள் தொட்டு அணைத்து கமலமலர் போல் இருந்த அவள் கண்கள் இரண்டிலும் உதடுகள் பொருத்தி எடுத்தான்.

கயல்விழி அவன் வலதுகர விரல்களோடு தன் விரல்களை கோர்த்து இறுக்கியபடி விழிகள் மூடி உள்ளே சுகம் அனுபவித்தாள்.

சேரலாதனின் இடக்கரம் கயல்விழியின் சிற்றிடையில் மெல்ல அழுத்தி நின்று முன்னேறியது. கோர்த்த விரல்களை மேலும் இறுக்கிக்கொண்டு,

"யாராவது வந்துவிடப் போகிறார்கள்."

"வரட்டும்."

"ஆளைப் பார். உங்களுக்கென்ன?"

"பயப்படுகிறாயா கயல்விழி?"

"நீங்கள் இருக்கும்போது நான் யாருக்குப் பயப்படவேண்டும். ம்... அங்கே வேண்டாம்."

"ஏன்,"

"அப்படித்தான்."

சேரலாதன் அவள் பேச்சைக் கேட்கும் நிலையில் இல்லை.

கயல்விழியும் மேற்கொண்டு தடுக்கும் நிலையில் இல்லை.

வெட்கம் இருந்தது முதலில். பிரியும் நேரத்தில் தழுவி அதனாலும் அவளை வருந்தச் செய்வதோ என்று சேரலாதனின் நல்லாண்மையும் கேள்வி எழுப்பத்தான் செய்தது.

எனினும் ஆசை என்ற கடலில் விழுந்த பின்னர் மீட்டுக் கரை சேர்க்க வெட்கம், நல்லாண்மை என்னும் இரண்டு ஓடங்களுக்கு வலிமை போதுமோ?

அதைத்தானே திருவள்ளுவரும் சொல்லியிருக்கிறார்.

கூடல் ஆசை வேகமான ஆற்று வெள்ளம். அதை தாண்டி கரை சேர வெட்கம், நல்லாண்மை என்னும் தெப்பங்களால் முடியுமோ? என்றல்லவோ அவரும் கேட்கிறார்.

"காமக் கடும்புண லுய்க்குமே நாணொடு
நல்லாண்மை யெண்ணும் புணை."

குறள்-1134,
அதிகாரம்-114

குறுக்கெழுத்துப் போட்டி இல-45

1		2		■	3	4
	■	5			■	
	6		■	7	8	
■		■	9			
10				■		■
■		■	11			12
13					■	

இடமிருந்து வலம்

1. கலைத்து விட்டால் திரண்டு வந்து கொட்டும்.
3. முன்னேறும் போது குறுக்கே வருவது.
5. இது நடந்தால் பலியும் இருக்கும் (திரும்பியிருக்கிறது)
7. பரதனின் தாய்.
9. ஒரு நோக்கத்தை நிறைவேற்ற வகுக்கப்படுவது. (குழம்பியிருக்கிறது)
10. மாதங்களில் ஒன்று.
11. இதுவும் சுறுசுறுப்பாய் உழைக்கும்.
13. பண்டிகைக்காலங்களில் விளம்பரங்களில் அதிகம் காணப்படுவது.

மேலிருந்து கீழ்

1. சிலருக்கு இது இல்லாவிட்டால் உற்சாகம் இருக்காது.
2. பேனா முனையில் இது அதிகம் என்பார்கள்.
4. இது பரவினால் ஆபத்து.
6. துணைவனோடு குடும்பத்தில் நிறைவாக வாழ்பவள்.
8. தற்காப்புக்கு உதவும்.
12. வல்லவனுக்கு இதுகூட ஆயுதம் தான்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 16.04.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-45
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல-43க்கான சரியான விடைகள்:

1 சா	ம்	பி	ரா	ணி	■	2 கு
ண்	3 பா	■	4 க	ங்	5 கா	ரு
6 டி	ல்	7 லி	■	■	ற்	வி
ல்	■	ப்	■	8 வி	றா	■
ய	■	ஸ்	9 ப	ண்	டி	10 கை
ன்	11 வெ	டி	■	மீ	■	டி
■	டி	க்	■	ன்	■	ந

குறுக்கெழுத்துப் போட்டி இல.43இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. எஸ். ராஜகுமாரி டிக்கோயா.
2. கே. செல்வராஜ் கொழும்பு-03.
3. ஏ. பிரான்சிஸ் மட்டக்களப்பு.
4. கே. யஹியா மொன்னேகுளம்.
5. எம். நித்யா ஹட்டன்.
6. என். கதீஜா பேகம் பாணந்துறை.
7. எஸ். குணரட்னம் அவிசாவளை.
8. ஏ.எச். நிசாம்தீன் கல்பிட்டி.
9. ஏ. பிரகாஸ் கொழும்பு-6.
10. முகமட் இப்ராஹிம் புத்தளம்.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

சிந்தியா பதில்கள்

தமிழ் நாட்டில் கலைஞர் வை.கோ பிரச்சனையில் கலைஞரது அணுகுமுறை எப்படி?

எஸ். நிரஞ்சலா-பண்டாரவளை.

முன்னர் வை.கோவை போர் வாள் என்றார். இப்போது போய் வா என்றார். போக மாட்டேன் போ என்று போர் நடத்துகிறார் வை.கோ. கலைஞர் மீண்டும் ஒரு தவறு செய்துவிட்டார்.

□□

நீர் ஏமாந்தது உண்டா?

கு. ஜீவகன்-குருநாகல்.

உண்டு. சில காயங்கள். சில சோகங்கள்.

□□

தென்மாகாணத் தேர்தலில் தோல்வியடைந்தது பெரிய தோல்வி கிடையாது என்கிறார்களே?

இ. நியாஸ்-புத்தளம்.

விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்கிறார்கள். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்றால் அது பொய் என்கிறார்கள்.

□□

தென் மாகாணத் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த நேரத்தில் திரு.காமினி திசாநாயக்கா என்ன நினைத்திருப்பார்? அநுரா என்ன நினைத்திருப்பார்?

ஆர். புவனேஸ்வரன்-கொழும்பு-11.

அத்துலத் முதலியின் பெயரைச் சொல்லிக் கொண்டு இருந்திருக்கலாம். அவசரப்பட்டு விட்டோமே என்று முன்னவர் நினைத்திருப்பார். அக்காவோடு 'கா' போடாமல் இருந்திருக்கலாம் என்று பின்னவர் நினைத்திருப்பார்.

□□

எவற்றை மறக்கக்கூடாது?

கே. சாந்தமலர்-ஹட்டன்.

நிகரில்லா நேசங்களை! அதுபோலவே நிகழ்த்தப்பட்ட துரோகங்களை! இரண்டையும் மறந்தால் வாழ்க்கையில் வீழ்ந்து போவோம்.

□□

பாட்டுக்களில் எவ்வளவோ சோகப்பாட்டு உண்டு. இதில் மிகவும் சிறந்தது எந்தப்பாட்டு?

எம். ஏ. மர்சூன்-தோப்பூர்-திருமலை.

"உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல. உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல..."

□□

டியர் சிந்தியா! காதலில் பெரிதும் தேவைப்படுவது என்ன?

ம. வசந்தராணி-மாவாலங்கொட, ஹாலி-எல.

வற்றாத ஊற்றாய் பெருகும் அன்பு. அதேபோல் புரிந்துணர்வு.

□□

விலைக்கு மேல் விலை வைத்தாலும் கிடைக்காதது எது?

விலைக்கு மேல் விலை வைத்து கேட்டாலும் கிடைக்காதது எது?

செல்வி. எப். பர்மிளா-உடத்தலவின்னை.

தாயின் பாசம், தந்தையின் பரிவு, உண்மை நட்பின் உயரிய நேசம், காதலில் ஒருயிர் ஆகிவிடும் பிரியம்.

□□

சீதனம் இளம் பெண்களின் வாழ்க்கைக்கு ஒரு தடையா?

உ. அல்நீனா-மூதூர்.

தடைதான் என்பதில் சந்தேகமேயில்லை.

□□

நம் நாட்டுக்கு தற்போது யுத்தமா? அந்நிய உதவியா? பணமா? எது தேவை?

ரெ. சந்திரசேகர்-புத்தளம்.

மூன்றுமே வேண்டாமே! பிரச்சனைகளைத் தீர்க்கும் மனவுறுதி மட்டும் இருந்தாலே போதுமே.

□□

துடிப்பாக பதிலளிக்கும் சிந்தியா... எழுத்தாளர் ரசிகனைப் பற்றி கொஞ்சம் குறிப்பாக சொல்ல முடியுமா?

ஞா. அருணா-கிண்ணியா வைத்தியசாலை.

குறும்பாகத்தான் சொல்லவேண்டியிருக்கும்.

□□

(19ம் பக்க மகாபாரதம் தொடர்ச்சி)

நன் மதிப்பினைப் பெறப்பார். அர்ச்சுனா உன்னுடைய காலத்தையும் பாணங்களையும் அவனிடம் செலவளிக்காமல் வா போகலாம். உன் கைகளால் சாவதற்குக்கூட இவனுக்கு அருகதை கிடையாது.

துரியோ: ரிஷி மூலமும் நதி மூலமும் தேடிப்பார்க்கத் தேவையில்லை. பீமா! இதே போன்று உனது பிறப்புப் பற்றியும் எம்மால் சந்தேகங்களைக் கிளறமுடியும். இதே போன்று அவமதிப்பினையும் ஏற்படுத்த முடியும்!

பீமன்: முடிந்தால் முயற்சிப்பதுதானே....!

துரியோ: நான் பிறப்பால் சூத்திரனல்ல...! கர்ணன் அர்ச்சுனனுக்கு மட்டும்தான் சவால் விட்டான். நான் உங்கள் ஐவருக்கும் சவால் விடுகிறேன்! நீங்கள் உண்மையில் சிங்கம் போன்ற ஒரு வீரரின் புத்திரர்களானால் வாருங்கள் இப்போதே! என்னுடன் பொருதி உங்கள் வீரத்தை நிரூபியுங்கள் பார்க்கலாம்.

கிருபா: வேண்டாம்...வேண்டாம்...இப்போது எதுவும் வேண்டாம். கதிரவன் சாய்கிறான். இன்றைய நிகழ்ச்சிகள் யாவும் இத்துடன் நிறைவு பெறுகின்றன என்று இத்தால் அறிவிக்கிறேன். சூரியன் மறைந்த பின் போரிடுவது விதிகளுக்கு மாறானது...!

நிகழ்ச்சிகள் முடிவடைவதைக் குறிக்கும் சங்கினை பீஷ்மர் ஊதுகிறார்.

பின்னணிப் பாடல்:

அத்தினாபுரத்தின் அரசிளங்குமரர்கள்
அடலேறெனத் தம் வலிமையூட்டியே
வீரச்சமர் புரி வேளம் நிகர்த்தனர்
போரில் புகழ்பெறும் பெருமை சேர்த்தனர்.

மங்கிடு மாலைப் பொழுது படர்ந்திட
சங்கதை முழங்கி சமரதை முடித்தே
பொங்கிய போர் வெறித் தீயை அணைத்தார்
கங்கையின் மைந்தர் காலமுணர்ந்தே

நீறுபூத்த நெருப்பினைப்போல் வெறி
ஆறியதெனினும் அடங்கிடவில்லை.
குருச்சேத்திரத்தில் குமுறும் எரிமலை
உருவாக்கிய திவ் வெறியின் எதிரொலி!

(தொடர்ந்து வரும்)

எம்.ரீ.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

மகாபாரதம்

அங்கம் 24

இவ்வாரம் (10.04.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்: **வரலாற்றின் பொன்னேடு என் கண்முன்னே விரிவதை நான் காண்கிறேன். இன்று காணப்போகும் காட்சி போல் அன்றும் கண்டதில்லை; இனிமேல் என்றும் காணப்போவதில்லை. கங்கை மைந்தர் பீஷ்மர், மன்னர் திருதராட்டினர், துரோணாச்சாரியார், கிருபாச்சாரியார், பாண்டு புத்திரர்கள் கவுரவர்களுடன் அஸ்வத்தாமன் ஆகியோரை ஒரே வேளையில் காணும் சந்தர்ப்பமிது. அரங்கில் திரண்டிருக்கும் அஸ்தினாபுரி மக்கள் அத்தனை பேருடைய கண்களுக்கும் பெரு விருந்தாக இன்றைய நிகழ்ச்சிகள் அமைகின்றன.**

-காட்சி ஆரம்பம்-

அறிவிப்பாளன்: பாண்டு மாமன்னரின் மூத்த மகன் இளவரசர் யுதிஷ்டிரர் வருகிறார்...!

மக்கள் வாழ்த்தொலி.

விதுர: மகாராஜா! யுதிஷ்டிரன் தங்களை வணங்குகிறான்.

திருத: நீடூழி வாழ்க மகனே!

அறிவி: கவுரவர்களின் மூத்தவன், தன்னிகரில்லா வீரன் துரியோதனன்....

திருத: நீடூழி வாழ்க மகனே!

குந்தி: அக்கா! இன்று மட்டுமாவது தங்கள் அருமைமகனின் ஆளுமையையும் அழகினையும் தங்கள் கண்களைத் திறந்து பார்க்கலாகாதா?

அறிவி: இதோ பாண்டவர்களின் அதி பராக்கிரம சாலியான பீமன், காற்றைப் போன்று கனவேகமாக வருகிறார். பாண்டவர்களில் சிறந்த வீரனும் துரோணாச்சாரியாரின் விருப்புக்குப் பாத்திரமான வில் விஜயன் அர்ச்சுனன்....

இவ்வாறு சகல இளவரசர்களையும் அறிவிப்பாளர் சபையோருக்கு அறிமுகப் படுத்தும்போது மக்கள் பேரார்வத்துடன் வாழ்த்தொலி எழுப்புகின்றனர்.

காலத்தின் குரல்: **அஸ்தினாபுரத்தின் அதி தீர பராக்கிரமசாலிகளான இளம் வீரர்களின் அணிவகுப்பைக் கண்டு வியப்பு மேலீட்டால் வாழ்த்தி வாழ்த்தி வரவேற்கும் மக்கள் அளவிலா ஆனந்தத்தில் மகிழ்வதைக் காண்கிறேன்.**

காந்தாரி: குந்தி! ஏன் அமைதியாகிவிட்டாய்?

குந்தி: பிதாமகர் பீஷ்மர் ஏதோ கூறப்போகிறார், அக்கா!

பீஷ்ம: மகாராஜா! தங்கள் உத்தரவுடன் இன்றைய நிகழ்ச்சிகளை ஆரம்பிக்கலாமா?

திருத: என்னிடம் ஏன் கேட்க வேண்டும்? ஆரம்பிக்கலாமே!

பீஷ்மர் நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைக்குமுகமாக சங்கை ஊதுகிறார்.

காந்தா: பீஷ்மர் அவர்களா சங்கை ஊதுகிறார்?

குந்தி: ஆம் அக்கா! முறைப்படி நிகழ்ச்சிகளை அவர் சங்கினை ஊதி ஆரம்பித்து வைக்கிறார். இதோ நமது குலகுரு துவக்க உரை நிகழ்த்த வருகிறார்.

கிருபாச்சாரியார்: சந்திர வம்சத்தின் திலகமான மாமன்னர் வாழ்க! கங்கை மைந்தர் வாழ்க! ஈடு இணையற்ற குருபெருமான் துரோணாச்சாரியார் வாழ்க! அஸ்தினாபுரியின் இவ்வரங்கத்தில் இன்று நீங்கள் கூடியிருப்பது வெறும் களியாட்டங்களைக் கண்டு களிப்பதற்காகவல்ல என்பதை முன்கூட்டியே உங்களனைவருக்கும் எடுத்துக்கூற விரும்புகிறேன். இந்நாட்டின் எதிர்காலத்தை செப்பனிடப்போகும் இளவரசர்கள் பெற்றுள்ள தகைமைகளை நீங்கள் காணப்போகின்றீர்கள். இப்போட்டிகளில் சாதனைகளைப்புரிய அவர்களுக்கு என் வாழ்த்துக்களை வழங்கி அவர்கள் ஒவ்வொருவரையும் அழைக்கிறேன்.

அஸ்வத்தாமன் முன்வந்து ஒவ்வொரு இளவரசரையும் அழைக்கிறார்.

அஸ்வத்தாமன்: வணக்கம் மகாராஜா! முதலில் இளவரசர் யுதிஷ்டிரனை அழைக்கிறேன்.

யுதிஷ்: பாண்டு மாமன்னரின் மூத்த மகன் நான்- யுதிஷ்டிரன் என் பெயர். குந்திபோஜ மாமன்னர் என்தாய்வழிப் பாட்டனார். மகாராஜாவாகிய தாங்கள் எனது பெரியப்பா!

காந்தா: குந்தி..! மகன் யுதிஷ்டிரன் நெடிதுயர்ந்து வளர்ந்திருப்பான் போல் தெரிகிறது...?

குந்தி: ஆம் அக்கா! அவனுடைய நெற்றியில் முத்தமிடுவதானால் கால் பெருவிரலில் ஊன்றியபடி நின்றுதான் முத்தமிட முடியும்.

காந்தா: மகன் நீடூழி வாழ இறைவன் அருள்வானாக.

அஸ்வ: யுதிஷ்டிரன் ஈட்டி எறிவதில் இணையிலா வீரன், அவருடைய தம்பிமார் அவருக்கு எதிரணியில் நின்று தாக்குவார்கள்.

- **சகோதரர்கள் அனைவரும் எதிரணியில் நின்று தாக்க அனைவரையும் யுதிஷ்டிரர் வெற்றிகொள்கிறார்.**
- **மக்கள் வாழ்த்துகின்றனர்.**

குந்தி: மகன் யுதிஷ்டிரனைப் போன்ற ஈட்டி எறிவீரன் வேறு எவருமே இல்லை என்று கூறுகிறார்கள் அக்கா!

காந்தா: ஆச்சாரியாரும் அதே போன்று கூறியுள்ளார். சரி, அடுத்து யார் வருகிறார்கள்?

குந்தி: அஸ்வத்தாமன், பீமனையும் துரியோதனனையும் அரங்குக்கு அழைக்கிறார். ஆண்டவா! இருவரையும் பார்க்கும் போது தங்கள் தோள்களில் இந்தப் பூமியையே தூக்கி விடுவார்கள் போல் தோன்றுகிறது அக்கா!

அஸ்வ: உங்களை நீங்களே அறிமுகப் படுத்துங்கள்.

துரியோ: கவுரவ வம்சத்தின் தலைமகன்- துரியோதனன் என் பெயர். வணக்கம் செலுத்துகிறேன்.

திருத: நீடூழி வாழ்க என் மகனே!

பீமன்: குந்தி தேவியின் இரண்டாவது புதல்வன் பீமன் நான். யுதிஷ்டிரனின் தம்பி என்பதில் பெருமையடையும் நான் குருதேவர் துரோணாச்சாரியாரின் மாணவன்.

அஸ்வத்: இந்த இரு இளவரசர்களும் கதாயுத யுத்தப் பயிற்சி பெற்றவர்கள்.

கிருபா: எங்கே வீரர்களே! உங்கள் திறமையை அஸ்தினாபுரி மக்கள் பார்க்கும் வண்ணம் காட்டுங்கள்.

இருவரும் போட்டியிலிறங்கி–விளையாட்டு விளையாவதுபோல் உண்மையான போராகவே மாற ஆரம்பிக்கிறது.

சகுனி: மருமகனே துரியோதனா! விடாதே அடி அவனை- அடித்து வீழ்த்தடா வீரா!

காந்தா: குந்தி! அங்கே என்ன நடக்கிறது..?

குந்தி: விளையாட்டாகத் தெரியவில்லை அக்கா..! இது பெரும் போராக மாற ஆரம்பித்து விட்டதாகத் தெரிகிறது.

திருத: விதுரா...!

விதுர: மகாராஜா! இது உண்மையில் சாதாரண போட்டியாகத் தெரியவில்லையே! இருவீரர்கள் உண்மையில் சண்டையிடுவது போல் தெரிகிறதே!

திருத: விதுரா! இதனை உடனே நிறுத்திவிடு...!

அஸ்வ: நிறுத்துங்கள். இது யுத்த களம் அல்ல. இது சினேகபூர்வமான போட்டியே தவிர உண்மைப் போரல்ல.

திருத: இப்போது என்ன நடைபெறுகிறது?

விதுர: இருவரும் நிறுத்திவிட்டார்கள் மகாராஜா!

திருத: விதுரா! உண்மையைச் சொல்! இருவரில் யார் சிறப்பாகப் போரிட்டார்கள்...?

விதுர: இந்தச் சந்தர்ப்பத்தில் நான் எதையும் கூறவிரும்பவில்லை மகாராஜா! துரோணாச்சாரியாரைப் போன்ற ஒருவரால்தான் இதற்கு விடை அளிக்க முடியும்.

திருத: விதுரா! என்னுடைய எந்தக் கேள்விகளுக்கும் இதுவரை நேரடியான பதிலை நீ கூறுவதில்லையே!

விதுர: இத்தகைய கேள்விகளுக்கு இது நேரமல்ல மகாராஜா! உரிய வேளை வரும்போது தகுந்த விடைகளை நான் தருவேன். அவ்விடைகளும் அஸ்தினாபுரியின் நன்மைக்கானவையாகவே அமையும் என்பது நிச்சயம் மகாராஜா!

திருத: நிகழ்ச்சிகள் யாவும் முடிந்து விட்டனவா?

விதுர: இல்லை பிரபு! குமுறிக்கொண்டிருக்கும் இரு வீரர்களையும் அஸ்வத்தாமன் அமைதிப்படுத்திக்கொண்டிருக்கிறார்.

யுதிஷ்: தம்பி துரியோதனா...!

துரியோ: நீர் ஏன் என்னை மட்டும் கண்டிக்க வரவேண்டும்? உமது தம்பி பீமனை முதலில் அடக்கப்பார்ப்பது தானே!

யுதிஷ்: நீங்கள் இருவருமே எனது அன்புத் தம்பிமார்தான். உங்கள் மத்தியில் சகோதர பாசம் இருக்க வேண்டுமேயன்றி விரோதமோ குரோதமோ இருக்கலாகாது.

துரோ: அர்ச்சுனா..! எங்கே உன்னை அறிமுகப்படுத்து...!

அர்ச்: என் பெயர் அர்ச்சுனன். எனது முழு முதற்குருவான துரோணாச்சாரியாரின் பிரதம சீடன் நான் என்பதில் பெருமையடைகிறேன். அன்னாருக்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்!

துரோ: உன்னை அறிமுகப்படுத்த வேறோர் அம்சமும் இல்லையா அர்ச்சுனா?

அர்ச்: அடியார்களைக் கொண்டே ஆண்டவனை அறிவது போல் ஒரு சீடனைக் கொண்டே குருவினை அறியலாம். தனிப்பட்ட தகைமைகளைக் கூறி பிரச்சனைகளை வளர்க்க விரும்பாமல், எனது குருவான துரோணாச்சாரியாரின் மாணவன் என்று என்னைக் காட்டிக் கொள்ளவே நான் ஆசைப்படுகிறேன்.

இவ்வாறு கூறிய அர்ச்சுனன் குருவை வணங்கிய பின் வில்லில் ஒரு கணையைப் பூட்டி எய்கிறான். ஒரு அம்பு பலவாக மாறி திருதராட்டினர், பீஷ்மர் மற்றும் கிருபாச்சாரியார் ஆகியோர் பாதங்களில் வீழ்கின்றன.

விதுர: அர்ச்சுனன் தங்களுக்கு மரியாதை செலுத்துகிறான் மகாராஜா!

திருத: வாழ்க மகனே!

- **துரோணாச்சாரியார் அர்ச்சுனனுக்கு ஒவ்வொரு அஸ்திரங்களையும் விடும்படி ஒன்றன் பின் ஒன்றாகக் கூறுகிறார்.**
- **வாயுவாஸ்திரம், அக்னி அஸ்திரம், பிரஜான அஸ்திரம், வருணாஸ்திரம், பர்வத அஸ்திரம் அந்தர்த்தியானாஸ்திரம் போன்ற அஸ்திரங்களை அர்ச்சுனன் பிரயோகிக்க, முறையே பெருங்காற்று, நெருப்பு, இடி முழக்கத்துடன் கூடிய மின்னல், பெருமழை, மலை ஆகியவை தோன்றுகின்றன.**
- **இறுதியில் அந்தர்தியானாஸ்திரத்தை விட்டதும் அர்ச்சுனன் தனது நிலையிலிருந்து அந்தரத்தில் எழுந்து இடம்மாறுகிறான்.**
- **இக்காட்சிகளைக் கண்ணுற்ற பார்வையாளர்கள் அனைவரும் பெரு மகிழ்ச்சியில் ஆரவாரித்து அர்ச்சுனனை வாழ்த்துகின்றனர்.**

காந்தா: குந்தி! நமது மகன் அர்ச்சுனன் தன்னுடைய ஆற்றல்களை மிகச் சிறப்பாக வெளிக்காட்டிவிட்டான் போலும்!

குந்தி: என் கணகளால் கண்டவற்றை விபரிக்கிறேன். அக்கா! அதோ துரோணாச்சாரியார் ஏதோ கூறப் போகிறார்!

துரோ: அஸ்தினாபுரத்து பெருமக்களே! இந்த அரிய சந்தர்ப்பத்தில் அர்ச்சுனனை எனது பிரதம சீடனாக் அறிவிப்பதில் பெருமையடைகிறேன். அர்ச்சுனன் வில் வித்தையில் எத்தகைய தேர்ச்சியினைப் பெற்றிருக்கிறான் என்பதனை அனைவரும் பார்த்தீர்கள். எதிர்காலத்திலும் அர்ச்சுனனைப் போன்ற வீரனை உலகம் காணமுடியாது. எனது மதிப்புக்குரிய மாணவன் என்பதற்காக இதனை நான் கூற முன்வரவில்லை. இத்தனை பெருமைக்கும் அவனிடம் ஆற்றல் இருந்திருக்கிறது. ஆகவே இன்றிலிருந்து அர்ச்சுனனே வில்லுக்கு விஜயன் என்றும் உலகிலேயே தலை சிறந்த வில்லாளன் என்றும் இத்தால் உறுதியாக அறிவிக்கிறேன்.

கர்ணன்: மதிப்புக்குரிய குருதேவர் அவர்களிடம் மன்னிப்புக்கோருகிறேன். அஸ்தினாபுரத்திலேயே மற்றுமோர் சிறந்த வில்வீரன் இருக்கும்போது அவனுடைய திறமையையும் தகுதியையும் நிரூபித்துக் காட்டுவதற்கான சந்தர்ப்பத்தை அளிக்காமல் 'வில்லுக்கு விஜயன்' என்ற பட்டத்தை அர்ச்சுனனுக்கு வழங்குவதை பணிவோடு ஆட்சேபிக்கின்றேன். நானேதான் அந்த வில்வீரன். ஆரச்சுனனைப் போன்றே வில்லேந்தும் கலையின் சிறப்பான பயிற்சியைப் பெற்றவன் யான். அர்ச்சுனன்போல் நான் தங்களிடம் பயிற்சி பெறும் வாய்ப்பைப் பெற்றவனல்ல. அர்ச்சுனனைப் போல் தங்களிடம் பாடம் படிக்க ஆசைப்பட்டு தனது வலது கைப் பெருவிரலையே குருதட்சணையாகக் கொடுத்த ஏகலைவனாக இருக்கவும் நான் விரும்பவில்லை. ஆகவே எனது தகைமையினை வெளிக்காட்டச் சந்தர்ப்பம் அளிக்காமல் அர்ச்சுனனை உலக வில் வீரன் என்று அழைக்க வேண்டாம். இந்த அஸ்தினாபுர வீர அரங்கிலே சகல பெரியவர்களும் வீற்றிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே என்னுடன் போரிட்டு தன்னுடைய வலிமையையும் திறமையையும் நிரூபிக்குமாறு அர்ச்சுனனுக்கு சவால் விடுகிறேன். அத்துடன் தங்களைப் போன்ற மகானின் மாணவனாக இருந்து கற்கும் வாய்ப்பை இழந்த ஏகலைவனைப் போன்று தங்களிடம் மாணாக்கனாகவிருந்து கற்கும் வாய்ப்பினைப் பெற முடியாதவன்தான் நானும் என்பதை நன்றாக உணர்கிறேன்.

துரோ: அஸ்தினாபுரத்தில் இரு வீரர்கள் பகைமையுணர்வுடன் வளர்ந்து சிக்கலை உருவாக்கலாகாது என்பதற்காகவே அஸ்திர உபயோகக் கலையை ஏகலைவனுக்கு அளிக்காமல் விட்டேன்.

கர்ண: என்னைப் பொறுத்த வரையில் நான் அஸ்தினாபுரிமீது பற்றுக் கொண்டவன் என்பதனாலும் தங்கள் மீது பெரு மதிப்பு வைத்திருப்பதனாலும் அத்தகைய பயம் தங்களுக்கு இருக்க வேண்டியதில்லை. மகாராஜாவுக்கும் பிதாமகர் பீஷ்மர் அவர்களுக்கும் குலகுரு கிருபாச்சாரியார் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கர்ணன் ஒரு அஸ்திரத்தை வில்லில் ஏற்றி வீசுகிறான். வானில் வீசப்பட்ட அப்பாணம் ஒரு பூமாலையாக மாறி மன்னர் திருதராட்டினரின் கழுத்தில் விழுகிறது.

திருத: இந்த பூமாலையில் பெருமைக்குரிய பரசுராமர் அவர்களின் நறுமணம் வீசுகிறதே! விதுரரே! இந்த வீரன் யாராக இருக்கலாம்?

விதுர: எனக்குத் தெரியவில்லை. போட்டி நடைபெறுவதை துரோணாச்சாரியார் விரும்பினாரானால் அந்த வீரனே தன்னைப் பற்றிக் கூறுவானல்லவா?

கர்ண: ஆச்சாரியார் அவர்களே! என்ன யோசிக்கிறீர்கள்? அர்ச்சுனனுக்கு சவால் விட்டுள்ளேன். என்னுடன் போட்டியிட அவனுக்குத் தகுதியில்லையோ? பொருத்திப் பார்க்கட்டும். அதன் பின்னர் அஸ்தினாபுரி மக்களே சிறந்த வில்லாளன் யார் என்பதைத் தீர்மானிக்கட்டுமே!

கிருபா: முதலில் உன்னுடன் மோதவிருக்கும் வீரனை அறிமுகப்படுத்துகிறேன். இவன் குந்தி மகாராணியின் மகன் அர்ச்சுனன். துரோணாச்சாரியாரின் பிரதான சீடன் என்ற சிறப்புக்குரியவன். இப்போ இந்த அஸ்தினாபுரி மக்கள் முன்னிலையில் உன்னை அறிமுகம் செய்துகொள்!

கர்ணன் வாயடைத்துப் போனான். தன்னைப் பற்றிய அறிமுகத்தைக் கொடுக்கும் தன்மை இழந்தவனாக தலை குனிகிறான் கர்ணன்.

கிருபா: வீரனே! என் கேள்வி உன் காதுகளில் விழவில்லையா? நீ யார்? உன் குலம் என்ன? கோத்திரம் என்ன? நீ யார் என்பதனை இவர்கள் அனைவரும் அறிய வேண்டாமா?

கர்ண: எனது வில்லே என் அறிமுகம். நான் யார் என்பதனை என் கணைகளே காட்டும்!

கிருபா: இது போர்க்களமல்ல. இது அஸ்தினாபுர அரங்கம். நீ ஒரு சத்திரியனல்லாவிட்டால் அர்ச்சுனனைப் போட்டிக்கு அழைக்க உனக்கு அருகதை இல்லை. நீ யார் என்பதனைக் கூறு. இல்லாவிட்டால் உன் வாயை அடக்கு!

துரியோத: குறுக்கீட்டுக்கு மன்னியுங்கள். சூரியனோ சந்திரனோ தங்கள் குலம் கோத்திரத்தை கூறவேண்டுமா? மானின் வயிற்றிலிருந்து சிங்கக் குட்டி பிறக்க முடியுமா? கர்ணனைப் பார்க்கும்போது, அவன் ஒரு வீர சத்திரிய பெண்ணின் மகனே என்பதில் சந்தேகமில்லை.

கிருபா: அவனுடைய வீரத்தை நான் எடைபோடவில்லையே! இங்கு ஒரு சத்திரிய குல இளவல்தான் மற்றொரு சத்திரிய இளவரசனை போட்டிக்கு அழைக்க முடியும் என்பது விதி!

பீஷ்மர்: தன்னுடைய பெற்றார் யார் என்பதை எடுத்துக் கூற எவரும் ஏன் தயங்க வேண்டும்?

துரியோ: வீரனே! உன் பெற்றாரைப் பற்றியோ அல்லது உன் வம்சத்தின் மூலத்தைப் பற்றியோ நான் அறிய முற்படவில்லை. நீ ஒரு சுத்த வீரன் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அஸ்தினாபுரத்து மக்கள் உன்னைப் பற்றி அறிந்தாக வேண்டும் என்று குலகுரு கிருபாச்சாரியார் கூறுகிறார். உன்னைப் போன்ற ஒரு சிறந்த வீரனுக்கு இத்தகைய அவமானம் நேர்வதை நான் சகிக்க முடியாத நிலையிலுள்ளேன். அஸ்தினாபுரம் வீரர்களை கௌரவிக்கும் நாடு. அதேபோல் வீரர்களின் வரலாற்றையும் அறியும் கடமையுமுண்டு. எனது தந்தை, பெரிய தந்தை ஆகியோர் மூலம் சில உரிமைகளைப் பெற்றவன் நான். ஆகவே அந்த உரிமைகளின் பேரால் கேட்கிறேன்- உன் பெயர்....என்ன?

கர்ண: என் பெயர் கர்ணன்!

துரியோ: அங்கதேசம் எனது கட்டுப்பாட்டிலுள்ளது. அந்த அங்க தேசத்தின் அதிபனாக எனது நண்பன் கர்ணனை இப்பொழுதே ஏற்று அவ்வாறே அறிவிக்கிறேன்.

கர்ண: எனது ஆருயிர் நண்பா! துரியோதனா! இந்தப் பெருமைக்கு என்னை ஆட்படுத்திய உன்னை என்றும் மறவேன். எனது வாழ்வோ சாவோ சகலவற்றையும் நான் உன்னிடமே ஒப்படைக்கிறேன்.

துரியோ: அஸ்தினாபுரி பெருமக்களே! அங்க தேசத்தின் மன்னனாக எனது அருமை நண்பன் கர்ணன் முடிசூடுவதை நீங்கள் அனைவரும் கொண்டாடுவீர்களாக...

-காட்சி மாற்றம்-

அதிரதன் இல்லம்

அதிர: ராதை! என்ன இன்று ஒரே சோகமாக இருக்கிறாயே!

ராதை: நமது மகனைப் பற்றித்தான் யோசிக்கிறேன். அவனை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பல வருடங்களின் பின்னர் வந்து சேர்ந்தான். எங்கே இதுவரை சென்றான் என்பதனைக் கூறாமலே வில்லையும் அம்புகளையும் எடுத்துக்கொண்டு மீண்டும் போய்விட்டான். அவனுடைய போக்கு எனக்கு ஏனோ அச்சமூட்டுகிறது.

இதேவேளை ஒருவரின் குரல் கேட்கிறது.

குரல்: அதிரதா அண்ணே! அதிரதா...?

அதிர: யார் அது...? என்ன விசயம்..?

குரல்: அண்ணே...! அண்ணே!

ராதை: என்ன...ஏன் அவதிப்படுகிறாய்? என்ன நடந்தது....?

அதிர: என்ன நடந்தது என்று சொல்ல மாட்டாயா?

குரல்: மன்னர் வாழ்க...! அங்க தேச மன்னர் கர்ணன் வாழ்க..!

ராதை: உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா? கர்ணன் மன்னனா?

குரல்: ஆமாம். அண்ணன் கர்ணன் அர்ச்சுனனுக்கு சவால் விட்டான். சத்திரியர்கள் மட்டுமே மற்றொரு சத்திரியனுக்கு சவால் விடமுடியும் என்றார் ஆச்சாரியார். துரியோதனன் உடனே அண்ணன் கர்ணனை அங்க தேச மன்னனாக அறிவித்துவிட்டான். அடடே...நேரம் போகிறதே...அங்கே கர்ணனுக்கு முடிசூட்டுவிழா கோலாகலமாக நடந்து கொண்டிருக்கிறதே! வாருங்கள் போகலாம்.

-காட்சி மாற்றம்-

திருத: விதுரா! துரியோதனன் அங்க தேசத்து மன்னனாக அறிவித்தானே! அவனைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?

விதுர: இங்கு அவனை அறிந்தவர் எவரும் இருப்பதாகத் தெரியவில்லை மகாராஜா! ஆனால் ஒன்று எனக்குப் புலனாகிறது. அவனுடைய முகத்தோற்றத்திலிருந்து சூரிய வம்சத்தை அவனது முன்னோர் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது.

திருத: நமது சந்திரவம்சத்துடன் அந்த வீரனையும் இணைப்பது நன்மை பயக்கும் என்று கருதுகிறேன்.

துரியோ: கர்ணனை எனது அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான என் நண்பனாக ஏற்றுக்கொள்ளுகிறேன்.

கர்ணனுக்கு முடிசூட்டப்படுகிறது.

கர்ணன்: எனது நண்பனே! இந்தக் கிரீடம் உன்னால் எனக்களிக்கப்பட்ட பெரும் கொடை. இதனைத் தாங்கும் என் சிரம் என்றும் உனக்காகவே தாழும். இப்பொழுது கிருபாச்சாரியாருக்கு நான் யார் என்பதை அடையாளம்காட்ட அனுமதியுங்கள். இப்பொழுதாவது அர்ச்சுனனோடு போட்டியிட்டு தோற்கடிக்கும் சந்தர்ப்பம் தர மாட்டீர்களா?

சகுனி: அந்த வாய்ப்பினை அளிக்க இன்னும் என்ன தாமதம்?

கிருபா: இது ஒரு போர் முனை அல்ல என்பதனை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன். சினேகபூர்வமான போட்டிகளை நடத்துவதற்காகவே அஸ்தினாபுரத்தில் புனிதமான இந்த அரங்கு நிர்மாணிக்கப்பட்டது. அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டால் மட்டுமே எவரும் தங்கள் வீரப் பிரதாபங்களை இங்கே வெளிப்படுத்துவதற்கு நான் அனுமதிப்பேன்.

கர்ண: ஐயா! எதிர்காலத்தில் யுத்த களத்தில்கூட உங்கள் பெருமதிப்புக்குரிய மாணாக்கன் அர்ச்சுனனைப் பாதுகாப்பதற்காக இதே காரணங்களை கவசமாகப்பாவிக்க முன்வர மாட்டீர்கள் என்று கருதுகிறேன்!

அர்ச்: நமது நாட்டின் மேம்பாட்டைக் கண்டு சகிக்க முடியாத நிலையில் கர்ணன் இந்த அரங்கையே போர்க்களமாக ஆக்கிவிட விரும்புகிறான் போலும். ஆணையிடுங்கள் குருவே! இங்கேயே அவனுக்கு இன்றே முடிவுகட்டி விடுகிறேன்.

கர்ண: என்ன... வில்லில் உன் வீரம் வெறும் காட்சிக்குரியது மட்டுமே என்று எனக்குத் தோன்றுகிறது. வீண் வார்த்தை ஜாலங்களை விடுத்து எங்கே! உன் வில்லை வளைத்து கணைகளைத் தொடு பார்க்கலாம்! ஆனால் வர்ணாஸ்திரம், வாயுவாஸ்திங்களை வீணே பிரயோகித்து காலத்தை வீணடிக்காதே! அவற்றின் பிரயோகத்தைப் பரிபூரணமாகக் கற்றுத் தேர்ந்து கரைகண்டவன் நான். என்னைக் கொல்ல வேண்டுமானால் நேரடியாக உறுதியான என் மார்பை நோக்கி உன் பாணங்களை ஏவிப்பார்...!

அர்ச்: ஓர் உண்மையான சத்திரியன், அவனுடைய பரிதாபகரமான நிலை கண்டு மனமிரங்கி எவரோ அளித்த நன்கொடையினை ஏற்றுப் பெருமை கொள்ள மாட்டான். நீ உண்மையான உள உறுதி பெற்ற சுத்த வீரனானால் உனக்கு துரியோதனன் மனமிரங்கி அளித்த பிச்சைக்காக அவருக்கு உன் மனப்பூர்வமான மரியாதையை முதலில் செலுத்து. முதலில் உனக்கு நன்கொடையாக அளிக்கப்பட்ட அங்க தேசத்துக்குப் போ! அந்நாட்டு மக்களிடம் நீயே அந்நாட்டின் மன்னன் என்று கூறிப்பார். அவர்கள் உன்னை மன்னனாக ஏற்றுக் கொள்வது அவர்களுக்கு எத்தகைய சங்கடமான நிலையினை ஏற்படுத்தும் என்பதை நானறிவேன். முதலில் அங்கு போ.... அங்கு போய் அந்நாட்டு மக்களின் நன்மதிப்பினைப் பெற முயற்சி செய்துபார்.... முதலில் அதனைச் செய்!

துரியோ: எனது நண்பனை இத்தனை கீழ்த்தரமாகக் கேவலப்படுத்த வேண்டாம்.

பீமன்: ஏற்கனவே கேவலமாகக் கருதப்படும் ஒருவரை மேலும் வேதனைப்படுத்த வேண்டுமா?

கர்ண: அர்ச்சுனா! நான் எத்தகைய அவமானத்துக்குள் ஆழ்த்தப்பட்டேன் என்பதை என்றாவது எனது பாணங்கள் உனக்கு உணர்த்தாமல் விடப்போவதில்லை. உன்னை எச்சரிக்கிறேன்....!

இதே காலகட்டத்தில் கர்ணனின் வளர்ப்புத்தந்தை அதிரதன் அரங்குள் வந்து கர்ணனைத் தழுவுகிறான். கர்ணன் அவர் பாதத்தில் வீழ்ந்து வணங்குகிறான்.

அதிர: கர்ணா என் மகனே..!

கர்ணா: அப்பா...!

திருத: விதுரா! என்னதான் நடக்கிறது..?

விதுர: கவலை வேண்டாம் மகாராஜா! அங்கதேச அரசனாக முடிசூடப்பட்ட கர்ணன் அவனுடைய தந்தை அதிரதனின் பாதங்களைத் தொட்டு ஆசி பெறுகிறான்.

திருத: அதிரதனின் பாதங்களையா..?

அதிர: எனது உணர்வுகளை அடக்க முடியவில்லை மகனே! நீ மன்னனாக முடிசூட்டப்படுகிறாய் என்பதனைக் கேள்வியுற்றதும், உனது தாயிடம் கூட சொல்லிக் கொள்ளாமல் ஓடிவந்துவிட்டேன். மகனே! இந்தத் தோற்றத்தில் உன்னைப் பார்த்தால் உண்மையில் நீ ஒரு வீர சத்திரிய இளவரசன் போலவே காட்சி தருகிறாயடா...!

பீமன்: தேரோட்டியின் மகனா நீ! துரியோதனனை உன் தேரில் இருத்தி முதலில் அந்தத் தேரை ஓட்டி அவனின்

(18ம் பக்கம் பார்க்க)

அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

அருள் ஜுவலர்ஸ்

இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொ.பேசி: 436331

வானிலும்-தரையிலும் போகலாம் உலா!

ஜேம்ஸ் பொண்ட் படங்களில் ஆகாயத்தில் பறக்கும் விமானம் திடீரென்று தரையில் இறங்கி கார்போல் மாறி எதிரியை துரத்துவதை பார்த்து வியந்திருப்பீர்கள். உண்மையாகவே இப்போது வானிலும் தரையிலும் ஓடக்கூடிய வண்டி தயாராகி விற்பனைக்கும் வந்துவிட்டது.

தரையில் ஓடும்போது ருசி வந்தால் திடீரென்று கிளம்பி வானத்தில் பறக்கலாம். 300 மைல் வேகத்தில் பறக்கும். 10,000 அடிவரை உயரும். 40 கலன் பெற்றோல் தாங்கும். 750 மைல் பறக்க அது போதும். 4 பேர் இருக்கலாம். 27.3 அடி நீளம். 8.5 அடி அகலம். சொகுசான விமானக்கார்.

விரும்பினால் விலக்கலாம்

மோட்டார் வாகனங்களின் பின்னால் தள்ளுவண்டி, சைக்கிள் மற்றும் [illegible] போன்றவற்றையும் படகுகளையும் இணைத்துக்கொண்டு போகும் வசதிகள் புழக்கத்தில் உள்ளன. இப்போது இந்த வசதி சைக்கிள்களுக்கும் வந்துவிட்டது. சைக்கிளின் பின்னால் பிணைக்கப்படும் சாதனம் இது. இதனை உரிய முறையில் இணைத்துக் கொண்டால் சைக்கிளுடன் சேர்ந்தே ஓடக்கூடிய வசதி கொண்டது. பக்கவாட்டுக் கட்டுப்பாடு [illegible] இது ஏற்றது. கனடாவில் விற்பனையில் உள்ளது. சைக்கிளின் [illegible] மக்களை விட வேறு எவரும் அறிந்திலர். இந்தச் சைக்கிளை ஓட்டப் பழக [illegible] மிக உதவியாக இருக்கும்.



வளர்க என்று வாழ்த்தினால் வானம் நிச்சயம் வருத்தப்படும்!



பிரிட்டனின் அதி உயர மனிதன் கிறிஸ்தபர் போல் கிரீனா என்பவர். 1943 நவம்பர் 31ம் திகதி பிறந்த இவரின் உயரம் 7 அடி 6 1/4 அங்குலம். எடை 165 கிலோ.

இன்று உயிருடனுள்ள அதி உயரமான மக்கள் என்று இருவரைக் கூறமுடியும். ஒருவர் பாகிஸ்தானைச் சேர்ந்த ஹாஜி மொஹமட் அலம் சன்னா என்பவர். இவர் 1956ல் பிறந்தவர். அடுத்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த சான்டி அலன் என்ற பெண்மணி. இவர் 1955ல் பிறந்தவர். இவர்கள் இருவருடைய உயரமும் 7 அடி 7 1/4 அங்குலம் (231.7 செ.மீ)

இந்த உயர மனிதர்களது பிறந்த நாள் விழாக்களுக்கு செல்வோர் நீடூழி வாழ்க என்று வாழ்த்தலாமே தவிர நீடூழி வளர்க என்று வாழ்த்துவது பொருத்தமாக இருக்காது அல்லவா?

விளையாட்டுச் சிறுவர்களும் வெடிக்கும் துப்பாக்கிகளும்!

வேண்டுமிருக்கும்.

துப்பாக்கி விசையில் விரல் படுவது தெரிந்தால் தேகம் பயத்தில் உறைந்து போகும். மரணத்தின் [illegible] நினைவில் வரும்.

ஆனால் [illegible] சிறுவர்களை துப்பாக்கி [illegible].

தினமுரசு வாரமலர்

விளையாட்டுத் துப்பாக்கிகளோடு சிறுவர்கள் வேடிக்கை காட்டுவதை இரசிக்கலாம்.

சிறிய அழுத்த [illegible] சத்தம் வர சிறுவர்கள் குதூகலிப்பதை பார்த்து நாமும் மெய் மறந்து சிரித்து மகிழலாம்.

இப்போது சிரிக்க முடியாது. கையில் இருப்பது நிஜத்துப்பாக்கியோ என்று பயத்தோடு கூர்ந்து பார்க்க [illegible]

துப்பாக்கி தலைநகரான டோக்கியோவில் ஆயுத விற்பனைக் கடை ஒன்றில் [illegible] ஏ.கே.47 வாங்கும் சிறுவர்கள் படத்தில்.

[illegible] பள்ளிக்கூடம் விட்டு வரும் பிள்ளைகளை தோளில் தூக்கிப்போட அம்மா காத்திருக்கலாம். பிள்ளை [illegible] தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு வருவதை அம்மாவால் [illegible] தடுக்க முடியாது. தடுத்தால் [illegible].

அன்று – அழகிகளின் சிறையில் இன்று – அந்தகார இருளில்!

மைக் டைசனுக்கு பிரியமானவை இரண்டு.

ஒன்று-எதிரியின் மூக்கை உடைப்பது. இரண்டு- அழகான பெண்களின் அணைப்பை இரசிப்பது. முன்னது புகழைக் கொடுத்தது. பணத்தையும் குவித்தது. பின்னது சிறையைக் கொடுத்தது. புகழின் சிறப்பையும் கெடுத்தது. மைக் டைசனுக்கு போட்டி அதிகம். டைசனின் புகழைக் கெடுக்க நினைத்தவர்கள்தான் கறுப்பின அழகுராணி ஒருவரை தயார் செய்து டைசனை வலையில் வீழ்த்தி சிறையில் தள்ளியிருக்க வேண்டும் என்கிறார்கள் டைசனின் இரசிகர்கள்.

டைசன் சிறையில் இப்போது தீவிரப் பயிற்சி பெறுகிறாராம். சிறைக் கதவம் திறக்கும் வரை உள்ளே பசியோடு காத்திருக்கிறது சிங்கம்.

டைசனைக் காண சிறைக்கு வரும் இரசிகர்களில் பலர் பெண்கள். சிறை இருளிலும் மங்கவில்லை புகழ் என்று சொல்கிறார்கள் டைசனின் தீவிர விசிறிகள்.

மாங்குயில்தோற்க வேண்டுமானால் மங்கையிவள் பாடவேண்டும்

சுவீடன் நாட்டின் கோகிலமான இசை வாணி என்று ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் போற்றப்பட்டவர் 'ஜென்னி' லின்ட்.

1850ம் ஆண்டுகளில் இவரது இசை கேட்க திரண்டது மக்கள் கடல். அதனால் பிரவேசச் சீட்டு ஒன்று 653 அமெரிக்க டொலருக்கு விற்கப்பட்டுள்ளது. இது உலக சாதனை. அன்று படமெடுக்கப் படாமையால் ஓவியமாக்கிவிட்டார்கள்.

(ஒரு அமெரிக்க டொலரின் இன்றைய இலங்கைப் பெறுமதி ரூ. 49.00)



[illegible]